
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් ஜன. 28 - பெப். 03, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 393



# பிரித்தானியா புலிகளைத் தடைசெய்யுமா? பலிக்குமா பகீரத முயற்சிகள்?



# முரசம்

## சுய நிர்ணய உரிமை?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

யாழ். பல்கலைக் கழக
மாணவர்கள் நடத்திய
'பொங்கு தமிழ்'
எழுச்சிக் கூட்டத்துக்கு
பாதுகாப்புப் படைகள்
அனுமதி வழங்காததால்
எதிர்பார்த்த அளவு
சோபிக்க முடியாமல் போய்விட்டது.
இத்தகைய கூட்டத்தில்
சுயநிர்ணய உரிமை,
யுத்த நிறுத்தம்,
பேச்சு வார்த்தை
ஆகிய கருத்துக்கள்
வலியுறுத்தப் படுவதாகத்
தெரிவிக்கப்பட்டிருந்தது.
இவை யாவும் அடிப்படையில்
ஜனநாயகக் கருத்துகளே.
அத்தோடு,
தற்போதைய அரசியல் நிலைக்குப்
பொருந்தக் கூடியவையே.
பிரிவினையையோ,
பயங்கரவாதத்தையோ,
நியாயப் படுத்தும்
கருத்துகள் அல்ல.
ஆயினும்,
பாதுகாப்புக் காரணங்களை
முன்னிட்டு இக் கூட்டம்
தடைசெய்யப்பட்டுள்ளது.
எவ்வாறாயினும்,
இங்கு எடுக்கப்பட்ட விடயங்கள்
விவாதிக்கப் படவேண்டியவையே!
அதாவது,
தமிழ் பேசும் மக்களின்
அரசியல் உணர்வுகள்
எத்தகையதாக இருக்க வேண்டுமென
இன்றைய காலகட்டத்தில்
திறந்த ஒரு விவாதம்
நடத்தப் படுவது
அவசியமானதாகும்.
இந்த உணர்வுகள்
இலங்கையின் இறைமையை
மதிக்க வேண்டியது
எத்துணை அவசியமென்று
ஆளும் தரப்பினர் கருதுகின்றனரோ,
அந்த அளவுக்கு,
தமிழ் மக்களின் உணர்வுகளையும்
இந்நாட்டின் அரசியல்
ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை
உணரல் வேண்டும்.
அதே வேளை
இன்றைய சூழலில்
சுய நிர்ணய உரிமை என்பதற்குப்
பல்வேறு வியாக்கியானங்கள்
பலதரப்பாலும் கொடுக்கப்படுமிடத்து
தமிழ் மக்கள் வேண்டிநிற்கும்
சுய நிர்ணய உரிமையானது
எத்தகையதாக இருக்க வேண்டுமென்பதில்
தெளிவான கருத்தொன்றை
ஈட்டுவதும் அவசியம்.
வெறுமனே சுயநிர்ணய உரிமையென
கூறுவது மட்டுமன்றி,
அதனை அமுலாக்கக்கூடிய
அரசியல் நிர்வாக
அமைப்பு வடிவத்தையும்
விவாதிக்க வேண்டும்.
சுய நிர்ணய உரிமையென்பது
தமிழ் பேசும் மக்கள்
வேண்டிநிற்கும் ஒன்றல்ல.
அது அவர்களுக்கு
உரிய உரிமை.
அதாவது, தாமே தம்
தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய
தகுதி கொண்ட தேசிய இனமாக
அவர்கள் உள்ளனர் என்பதே அது.
இத் தன்மையானது
பிரிவினையை நோக்கியதாகத்தான்
இருக்க வேண்டிய
அவசியமில்லை.
சுயநிர்ணய உரிமை கொண்ட
பல இனங்கள்
பிரிவினையற்றுச் சேர்ந்து வாழும்
உதாரணங்கள் எத்தனையோ
உலகில் உள்ளன.
ஏன், எமது அண்டை நாடு
இந்தியாகூட சிறந்த உதாரணம்.
இணைந்து வாழக்கூடிய
சுயநிர்ணய உரிமை பற்றிய,
கருத்துருவத்தை
எய்துவதை விடுத்து
சுய நிர்ணய உரிமையை
வெறும் பிரிவினைக் கோஷமாக
முத்திரை குத்துவது
மடமை.
இதேவேளை
தமிழ் பேசும் மக்களின்
அரசியல் உணர்வுகளுடன்
பக்குவமற்றவாறு
விபரீத விளையாட்டுக்களில்
இறங்காது, அவற்றை
சரியான முறையில்
நெறிப்படுத்த வேண்டியது
அரசியல் தலைமைகளின்
பொறுப்பு.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை* என்றென்றும் அன்புடன்,
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## இறைவனின் நாமத்தின் மகிமை

ஒரு பாவி, மரணப்படுக்கையில் கிடந்தான். நல்ல காரியம் எதுவுமே செய்தறியாத மகாபாவி-அவன். அவனுக்கு ஒரே ஒரு மகன். பெயர் முருகன் சாகின்ற நேரத்தில் தன் அருகில் மகன் கூட இல்லையே என்ற வருத்தம் அவனுக்கு ஏற்பட்டது. நரக தூதர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். எண்ணெய்க் கொப்பறை ஆயத்தமாக இருந்தது.

அந்த நேரத்தில், அந்தப் பாவி "முருகா!" என்று தன் மகனை அழைத்தான். அவ்வளவுதான். சொர்க்கத்திலிருந்தும் தூதுவர்கள் வந்து விட்டார்கள். அவன் தன் மகனைத்தான் அழைத்தான் என்றாலும், மகன் பெயர் முருகனாயிற்றே. சொர்க்கம் கிடைக்காமல் போகுமா?

தன்னையறியாமல் இறைவனின் பெயரைச் சொன்னாலே சொர்க்கம் கிடைக்கும் என்றால், நித்தம் நித்தம் அவன் நாமத்தைச் சொல்லி பிரார்த்தனை செய்தால், நமக்கும் நன்மை நடக்காதா? நிச்சயமாக நடக்கும். விட்டகுறை தொட்ட குறை இருந்தால், வணங்காதவர்களுக்குக் கூட கடவுள் அருள் கிடைக்கும். நிறைய பக்தர்களின் வாழ்வில் இப்படி நடந்திருக்கின்றது.

ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.



## சோதிப்பதற்காகவே மரணமும் ஜீவியமும்

★ **எ**வனது கரத்தில் (இம்மை, மறுமையில் வானம் மற்றும் பூமியின், ஆட்சி இருக்கின்றதோ, அவன் மிக்க பாக்கியமுடைவன்; இன்னும் அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

★ **அ**வன் எத்தகையவனென்றால் உங்களில் எவர் செயலால் மிக்க அழகானவர் என்று உங்களை அவன் சோதிப்பதற்காக மரணத்தையும், ஜீவியத்தையும் அவன் படைத்திருக்கின்றான். அவனே (யாவற்றையும்) மிகைத்தவன், மிக்க மன்னிக்கிறவன்.

★ **அ**வன் எத்தகையவனென்றால், ஏழு வானங்களை அடுக்கடுக்காகப் படைத்தான் (மனிதனே!) அர்ரஹ்மானுடைய படைப்பில் நீ யாதொரு முரண்பாட்டையும் காணமாட்டாய்; ஆகவே, பார்வையை மீட்டிப் பார்! (அதில்) பிளவுகளை நீ காண்கிறாயா?

★ **பி**ன்னும் ஒரு முறை உன் பார்வையை மீட்டிப் பார்; (எக்குறையையும் காணாது) அப்பார்வை இழிவடைந்ததாக அது களைப்புற்று உன்னிடம் திரும்பி வரும்.

அல் குர்-ஆன் 67:1,2,3,4.

ஏ.எச்.ஏ.ஹுஸைன்-ஏறாவூர்.

## தேவ பயத்தின் பலன்

"**த**மக்கு பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்"
**சங்கீதம் 147:11**

ஒரு பிள்ளை தனது தகப்பனுக்கு பயந்து கீழ்படிந்து இருக்கும்போது, அந்த தகப்பன் தனது பிள்ளை மீது அதிக பாசத்துடன் தேவையான சகலதையும் பெற்றுக் கொடுப்பதுபோல், நமது பரம தகப்பனாகிய கர்த்தருக்கு நாம் பயந்து கீழ்ப்படிந்து வாழும்போது, அவர் நம்மீது அதிக பிரியத்துடன் நம் தேவைகளை சந்தித்து ஆசீர்வதிப்பார்.

வேதாகமத்திலே, தாவீது என்ற பக்தன் தன்னை கொன்றுபோட சவுல் என்ற இராஜா தேடி அலையும் போது, அதே சவுல் இராஜாவை கொலைசெய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் தேவபயம் தாவீதுக்குள்ளே இருந்தபடியால், அக்காரியத்தை செய்யவில்லை. (1 சாமு 24:6) இதை காண்கிற தேவன் தாவீதை ஆசீர்வதித்து இராஜாவாக உயர்த்துகிறார்.

சொல், செயல், சிந்தனை அனைத்திலும் தேவ பயத்திலும், கீழ்ப்படிதலிலும் வாழந்து என்றும் மாறாத ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம்.

சகோ.டேவிட் எஸ்.சந்திரதாஸ்-நாவலப்பிட்டி.

## கவிதைப் போட்டி இல.393



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.02.2001

கவிதைப் போட்டி இல.393
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.390


### பரிசுக்குரிய கவிதை

### விரக்தி!

**எரிபொருள் விலையேற்றம்!**
**கிடு கிடு உயர்வால்!**
**பஸ்கட்டணங்கள் இங்கு!**
**பதை பதைக்க வைப்பதால்!**
**பள்ளி பயணம் செல்ல-தம்பி.**
**பழகிக் கொள் சைக்கிள் ஓட!**
**நம் எதிர்கால வாழ்வில் இனி!**
**நம்பிக்கை துளியும் இல்லை!**

ஹப்புத்தளையூர்-
மனோ கோபாலன்

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### சமாதான வேகம்

தம்பிகளே...
நீங்கள் தரணியில்
தள்ளிக் கொண்டு போகும்...
துவிச்சக்கர வண்டியின்
வேகம் கூட இல்லை...
நம் நாட்டு சமாதான
முயற்சிகள்!

சூரியாவாசு-திருமலை.

### சிதறும்!

நீங்கள் தள்ளும் மிதிவண்டி
மிதி வெடியிற் சிக்கினால்
சிதறப் போவது மிதிவண்டி
மட்டுமல்ல;
நீங்களுந்தான்!

அ.சந்தியாகோ-கண்டி.

### சமாதானம் ஒன்றைவிட...

எம் மண்ணை இருள் சூழ போரரக்கன்
கரம் கொண்டான்...,
தாவிக் குதிக்கின்றோம்.. நாம்
வண்டியிலும் திரிகின்றோம்...
எதற்கும் குறையில்லை... இங்கு
சமாதானம் ஒன்றை விட!

சி.மதியழகன், திக்கம்.

### எங்கே போகிறீர்கள்...?

இளமை சிட்டுக்களே
உறவுகளை இழந்தீரோ!
போர் அரக்கன் விரட்டியதால்-நீங்கள்
இன்னும் எங்கே போகின்றீர்கள்?

மயில்குமார்-
லிங்கநகர்.

### யுத்தக் கொடுமை....

புத்தகம் சுமந்த வயதில்
சைக்கிள் சுமையை அல்லவா
சுமந்து செல்கிறீர்கள்...?
யுத்த அசுரனின் கொடுமைதான்
இதுவோ?

மு.அருந்தவகுமார்-பெரியபோரதீவு.

### இலவச சர்வீஸ்

டீசல் விலை உயர
பஸ் கட்டணம் உயரும்!
பஸ்கட்டணம் உயர
சைக்கிள் விலை உயரும்!
சைக்கிள் விலை உயர
நடராஜா சர்வீஸ்
நடைமுறைக்கு வரும்!

ஆர்.பாலகிருஷ்ணன்-மாத்தளை.

### இலங்கையில்...

வேட்டுமழை பொழிந்ததால்
வேதனையில் ஓடுகின்றோம்!
வேடிக்கை பார்க்காதீர்கள்...
வேரூன்றி நிற்கமாட்டீர்கள்
நீங்களும்... இந்த
-வேஷம் போடும் இலங்கைதனில்...

எஸ்.கே.ரமேஷ்-பெரிய போரதீவு.

### எண்ணை விலை ஏற்றம்

எரி பொருள் விலை உயர
ஏறிய விரயம் ஈடு செய்க
இரண்டு சக்கர வண்டி
இன்று உதவியது நன்றி!

இ.பொன்னுத்துரை-பதுளை.

### நண்பன்

வன்னி மக்களின்
வேதனைகளுக்கெல்லாம்
ஈடு கொடுக்கும்
இனிய நண்பன்!

அ.மன்னார்மணி-
மாந்தைமேற்கு.

# வாசக(ர்) சாலை

### அனைத்தும் சூப்பர்

பாசத்துக்குரிய முரசே,

நீ சுமந்து வரும் அத்தனை அம்சமும் பிரமாதம். சூப்பர். முரசே வாரம் ஒரு முறை வருவாய். உன்னை கண்டால் என் மனதுக்குள் வாடிய பூ மீண்டும் பூத்தது போன்ற ஓர் ஆறுதல்.

2001.01.07 அன்று 390வது முரசில் நீ சுமந்து வந்த அத்தனை அம்சங்களும் சூப்பர். அதில் 'தகவல் பெட்டி', சினிமா பற்றிய செய்திகள், 'நில் கவனி முன்னேறு', 'ஸ்போர்ட்ஸ்', 'சிந்தியா பதில்கள்' மற்றும் 'முதல்வன்' என்ற தலைப்பில் சச்சின் டெண்டுல்கரைப் பற்றிய செய்திகள் அனைத்தும் சூப்பர்.

முரசே... நீ எத்தனையோ சிரமத்துக்கு மத்தியில் எங்கள் பிரதேசத்துக்கு எல்லாம் வருகிறாய். எமது பல கோடி முத்தான நன்றிகள். நீ மேலும் மேலும் வளர வேண்டும் என்று கூறி, உனது சேவை தொடர நான் இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

எம்.ஏ.சி.எம்.இர்சாத்-
காத்தான்குடி-04.

### எஸ்.டி.எஸ்ஸின் எழுதுகோல்

அமரர் எஸ்.டி.எஸ். அவர்களின் பழைமைக் களஞ்சியத்துள்ளே நுழையும் போது, நம்மை அறியாமலே ஒருவிதமான வியப்பும்-திகைப்பும் சூழ்ந்து கொள்கின்றன. அதுதான் அவரது எழுதுகோலின் வல்லமை போலும்.

இன்னும் புதிய புதிய தகவல்கள் தங்களால் தரப்படும் என்று நம்புகிறேன்.

கலாபூஷணம் இ.ஆ.தமிழோவியன்-பதுளை.

### மெருகேறும் ரிப்போர்ட்

காலக் கண்ணாடி போல், இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும்-ஏற்படப் போகும் இடர்ப்பாடுகளை சிறப்பாக எடுத்துக்காட்டும் 'நரன்' படைக்கும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' வரவரமெருகேறிக் கொண்டிருக்கிறது. இருப்பினும் ஒரே பக்கம் முழுவதையும் அடைத்துப் பிடித்தாற்போல் எழுத்துக்களைக் குவிப்பது வாசிப்பதற்குச் சிரமத்தைத் தருகிறது. 'இராஜதந்திரியார் தரும் 'அலசுவது...' பக்கம் போல், பக்கம் அமையுமானால் சுலபமாக வாசிக்கலாம். இருப்பினும் நரன் தரும் கருத்துக்களில் எக்குறையும் இல்லை.

எம்.சிவலோகநாதன்-நோர்வே.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

### எதிர்காலம்-சோமாலியா?

அன்புள்ள முரசுக்கு,

இன்றைய ஸ்ரீலங்கா அரசாங்கம் சர்வதேச அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கும் அதேவேளை, பஸ்கட்டண உயர்வு அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு என்று பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டிருக்கிறது. பெற்றோலியப் பொருட்களின் விலையுயர்ச்சி பட்டண வாசிகளைப் பாதிப்பதைவிட, பாமர மக்களைத்தான் அதிகம் பாதிக்கிறது. சொல்லொணாத் துயரின் மத்தியில் வாழும் வறிய மக்களை மேலும் படுகுழிக்குள் தள்ளியிருப்பது அரசின் கையாலாகாத்தனமே. வெல்லவே முடியாத அறக்கழிந்து போன யுத்தம் ஒன்றினையும் நடத்திக் கொண்டு, விலைவாசிகளையும் ஏற்றிக்கொண்டு பாரிஸின் உறுமல்களுக்கு மத்தியிலும் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் ஸ்ரீலங்கா அரசு என்ன செய்யப் போகின்றது என்பதே இன்றைய பிரதான கேள்வியாகும். ஸ்ரீலங்கா அரசு யதார்த்தத்தை உணராவிட்டால். ஸ்ரீலங்கா=சோமாலியா தான். (எதிர்காலத்தில்)

கே.எஸ்.புவன்-அக்கரைப்பற்று-07.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266




### நூலுருப்பெற வேண்டும்!

அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் பற்றிய தொடர் மிகவும் சிறப்பாக முரசில் பிரசுரமாகி வருவது எம்போன்ற இளைய தலைமுறை வாசகர்களுக்கு அமிர்தம் போலிருக்கிறது. கட்டுரைத் தொடரின் ஆரம்பப் பகுதிகளை எனக்குப் பெறமுடியாமற்போய் விட்டிருந்தது. இருப்பினும் கனடாவிலுள்ள எனது நண்பர் மூலம் தொலைநகலில் பெற்று வாசித்துத் திருப்தியடைந்தேன்.

எழுத்துச் சிற்பி அவர்களின் சமகால நிகழ்வுகளை எழுத்தாளர் இரா.பத்மநாதன் அவர்கள் தரும் பாணி மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

தமிழ் பேசும் மக்களின் உரிமை வேட்கை எஸ்.டி.எஸ்.அவர்களால் எவ்வாறு வளர்க்கப்பட்டது என்பதனையும் அறிய பெருமிதமாக இருந்தது. அத்தகைய எழுத்துச்சிற்பி எழுத்துலகை ஆட்சிபுரியும் காலத்தில் என் போன்றவர்கள் பிறக்கவில்லையே என்ற ஆதங்கம் எம்மை ஆட்டிப் படைக்கிறது.

எஸ்.டி.எஸ். தொடர்-தொடராக மட்டும் நின்று விடாமல், நூலுருப் பெற ஆவன செய்ய வேண்டும். தொடர்ந்து இப்பணி சிறக்க எம்போன்றோரின் வாழ்த்துக்கள்.

திருமதி.கமலம் ஆனந்தன்-
சுவிற்ஸர்லாந்து.

### பூரிப்படைகிறேன்

எழுத்துச் சிற்பி எஸ்.டி.சிவநாயகம் தொடரில் அவரால் படைக்கப்பட்ட 'எஸ்.டி.எஸ். கண்ட பாரதி' மிகமிகச் சிறப்பாகத் தொடர்கிறது. சுவாமி விபுலாநந்த அடிகளார் தான் மகாகவி பாரதியாரை தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் அறிமுகப்படுத்தினார் என்ற தகவலை கட்டுரை மூலம் அறிந்து அப் பெருமகனார் பிறந்த மண்ணில் பிறந்து தவழ்ந்துள்ளேன் என்பதனால் பூரிப்படைகிறேன்.

'எஸ்.டி.எஸ். கண்ட பாரதி' தனி ஒரு நூலாக வெளிவரும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

காரைதீவு க.வேலுப்பிள்ளை-கலிபோர்ணியா.

# புலிகளின் போர் நிறுத்தக் காலக்கெடு

# முடிவதற்கு முன்னர் படையினரின் பாய்ச்சல்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த டிசம்பர் மாதம் 24ம் திகதி அறிவித்த ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் முடிவுக்கு வருவதற்கு இரு தினங்கள் இருக்கையில், ஆயுதப் படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு, பளைப் பிரதேசத்தில் அதிரடித்தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகள், அவர்களது யுத்த நிறுத்தத்தை விலக்கி, யுத்தத்தில் குதிக்கும் முன்னர் முழு அளவிலான தாக்குதலை புலிகள் மீது தொடுப்பதாகவே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இராணுவம் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் நடவடிக்கை அமைந்திருந்தது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணரட்ன புலிகளது ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்திற்கு அரசப் படைகள் இணங்கப் போவதில்லை யென அறிவித்திருந்தார். அத்துடன் புலிகள் யுத்த நிறுத்தத்தை நீடிக்கலாம் அல்லது நீடிக்காமல் விடலாம். ஆனால் இராணுவம் புலிகள் மீது தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொள்ளுமென்று, புலிகளது யுத்த நிறுத்தத்தின் முடிவு தொடர்பாக கருத்து வெளியிடுகையில் கூறியிருந்தார்.

இதேவேளை இலண்டனில் இருக்கும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சந்திரிக்கா அரசாங்கம் இணங்கும் பட்சத்தில் தமது அமைப்பு அறிவித்த யுத்த நிறுத்தக் கால எல்லையை நீடிக்கத் தயாராக இருப்பதாகவும், இல்லையேல் தமிழீழ விடுதலைப் புலிகளும் முழு அளவிலான தாக்குதல்களை அரசப் படையினர் மீது தொடுப்பார்களென கூறியிருந்தார்.

இதேவேளை அரசப்படையினர் ஆனையிறவுப் பகுதியை இலக்கு வைத்துள்ள நிலையில் புலிகள் மீளவும் கடுமையான மோதல்களில் குதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக இராணுவ விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, நோர்வே விசேடப் பிரதிநிதி திரு.எரிக் சொல்ஹெய்ம், அரச மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு நிரந்தரமான யுத்த நிறுத்தத்திற்கு இணங்கச் செய்வதே தமது தற்போதைய நடவடிக்கையாக மேற்கொண்டுள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

புலிகளது ஒருமாத யுத்த நிறுத்த கால எல்லை முடிவடைவதையடுத்து வடக்கு-கிழக்கு பகுதிகளில் மட்டுமல்ல, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஆயுதப் படையினர் பூரண உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளனர்.

யுத்தப் பிரதேசங்களில் மோதலில் குதித்துள்ள புலிகள் வடக்கு-கிழக்குக்கு வெளியே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைத் தாக்க முற்படலாம் என்ற காரணத்தினாலேயே தற்போது படையினர் உஷார் நிலையில் இருந்து வருகின்றனர்.

## படையினர் நடத்திய கலை விழா

## குழப்பியடிக்க புலிகள் முயற்சி?

பொங்கல் விழாவை முன்னிட்டு கடந்த 20ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு வெபர் அரங்கில் கலை நிகழ்ச்சியொன்றைப் படைத்தரப்பினர் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அன்று மாலை 4 மணியளவில் படைத் தரப்பினரின் இசை நிகழ்ச்சி ஆரம்பமானது. நிகழ்ச்சி ஆரம்பித்த சுமார் அரை மணி நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. இருப்பினும் ஜெனரேட்டர்களின் உதவியுடன் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் மின்சாரம் தடைப்பட்டதற்கு என்ன காரணம் என்பது தொடர்பாக பலதரப்பட்ட கருத்துக்கள் எழுந்துள்ளன.

மட்டக்களப்புக்கு மின்சக்தி இரு வழிகளால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. லக்ஸபானாவிலிருந்து வாகனேரி வழியாக ஒரு மின்னிணைப்பும் இங்கினியாகலையிலிருந்து வெல்லாவெளி வழியாக மற்றுமொரு மின்னிணைப்புமாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

படையினரின் கலைவிழாவின் ஓர் அம்சமான இசை நிகழ்ச்சி ஆரம்பித்ததும், மேற்கூறப்பட்ட இரு வழிப்பாதை மின்சார விநியோகமும் ஒரே காலத்தில் தடைப்பட்டது மர்மமாகவே இருக்கின்றது. லக்ஸபானா மின் விநியோகத்தில் வாகனேரியில் கோளாறு ஏற்பட்டமையினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. தெற்கே வெல்லாவெளியில் மின்கோபுரத்தின் மீது மரமொன்று சரிந்து விழுந்தமையினால், மின்சாரம் துண்டிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இது பற்றி மற்றுமொரு தகவலின்படி வெல்லாவெளியில் திருத்த வேலைகள் செய்யப்படுவதனால், இங்கினியாகலையிலிருந்து வரும் மின்சாரத்தைத் தடைசெய்யுமாறு பொறியியலாளர்களே கேட்டுக் கொண்டதாக அம்பாறையிலுள்ள மின்விநியோக பொறியியலாளர் கூறுகிறார்.

படையினர் ஏற்பாடு செய்த விழாவை குழப்புவதற்காக அன்றைய தினம் பொது ஹர்தால் அனுஷ்டிக்குமாறு ஏற்கனவே மட்டக்களப்பில் துண்டுப் பிரசாரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இதனால் கடைகள் பல மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்களும் கணிசமாகக் குறைந்தே காணப்பட்டன.

வெபர் அரங்கில் கலை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக படையினரின் தூண்டுதலுக்குட்பட்ட பலர் சென்றிருந்தனர். ஆனால் நாலாயிரம் பேர் வரை நிகழ்ச்சியைக் கண்டு களித்ததாகப் படை அதிகாரி தெரிவித்தார்.

'மின்சாரம் துண்டிக்கப்பட்டமைக்கு புலிகளே காரணம்' என்று பரவலாக நம்பப்படுகிறது. ■

## பதுளைச் சிறையில் நெருக்கடி

பதுளைச் சிறைச்சாலையில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது தெரிய வந்திருக்கிறது. 178 பேர் மாத்திரமே தடுத்து வைக்கக் கூடிய சிறைச்சாலையில், தற்சமயம் 650 பேர் அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் கைதிகள் பெரும் அவஸ்தைப் படவேண்டியுள்ளது.

மஹியங்கனை, மொனறாகலை, வெள்ளவாய, பிபிலை, பசறை, லுணுகலை, பண்டாரவளை போன்ற பரந்த பகுதிகளைச் சேர்ந்த நபர்கள் இங்கே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இது விடயமாக சம்பந்தப்பட்டோரும், மனித உரிமைகள் அமைப்புக்களும் கவனமெடுக்க வேண்டுமென்று சிறைக் கைதிகளின் உறவினர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

## தவறவிட்ட பொதி குண்டுவைத்துத் தகர்ப்பு?

மட்டக்களப்பு-ஏறாவூர் பஸ் டிப்போவுக்குச் சமீபமாக அநாதரவான நிலையில் காணப்பட்ட பொதியொன்று பெரும் புரளியைக் கிளப்பியது.

அன்றைய தினம் இராணுவ வாகனத் தொடரணி செல்லவிருந்த நாளாகையால், இந்தப் பொதி பற்றி குண்டு செயலிழக்க வைக்கும் இராணுவ நிபுணர்களுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாகச் செயற்பட்ட அவர்கள் பொதியைக் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

கடைசியில் அந்தப் பொதி ஒரு முஸ்லிம் பெண்ணினால் தவறவிடப்பட்டதென்றும், அதற்குள் இருந்தது பர்தா உடையும், வாசனைப் பொருட்களும் என்றும் தெரிய வந்தது. ■

## மாலுமிகளை விடுவிக்க உதவுமாறு சொல்ஹெய்மிடம் வேண்டுகோள்!

புலிகளால் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக சிறை வைக்கப்பட்டிருக்கும் பதினொரு கப்பல் மாலுமிகளை மீட்டுத் தருமாறு அவர்களின் உறவினர்கள் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான அமைதிப் பேச்சுகளுக்கு அனுசரணை புரிய இங்கு வரவிருக்கும் எரிக் சொல்ஹெய்மிடம் கடித மூலம் கேட்டுள்ளனர்.

இது விடயமாக புலிகளின் பிடியிலுள்ள மாலுமி முஹம்மட் ஸஜ்ஜாத் என்பவரின் தந்தையும் உறவினர் சங்கத்தின் உறுப்பினருமான பெரோஸ் நூர்தீன் என்பவர் தெரிவிக்கையில்:

"எமது உறவினர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாம் பலமுறை அரசைக் கேட்டிருந்தோம். ஆனால் இன்றுவரை யாருமே எமது குரலுக்குச் செவிசாய்க்கவில்லை.

எனினும் தமது பிடியிலுள்ள எமது உறவினர்களின் விடுதலை சம்பந்தமாகப் பேசி முடிவெடுப்பதற்கு அரசப் பிரதிநிதியொருவர் வரவேண்டும் என்று புலிகள் அவ்வப்போது எமக்குச் செய்தியனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இதனாலேயே நோர்வே நாட்டு விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் உதவியை நாம் நாடியுள்ளோம்.

1996, 1997, 1998, ம் ஆண்டுகளில் ஐரிஸ் மோனா, எம்.வி.மிஸ்ஸன், பிரின்ஸ்கேஸ், எனும் கப்பல்களிலிருந்து 38 மாலுமிகள் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

இவர்களில் இந்தியர்களான 17 பேரையும் புலிகள் உடனே விடுவித்தனர். ஏனைய 21 பேரில் 10 பேர் சில காலங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். தொடர்ந்து தடுத்து வைக்கப் பட்டிருக்கும் 11 பேரின் விடுதலை தொடர்பாக நாம் பாடுபடுகிறோம்.

எமது உறவினர்களின் விடுதலை தொடர்பாக அரசும், விடுதலைப் புலிகளும் மனிதாபிமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

## குறைந்த கட்டணத்தில் கணினிப் பயிற்சி

கோப்பாய்ப்பிரதேசத்தில் கணனிப் பயிற்சி நெறி ஒன்றினை குறைந்த கட்டணத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று அப்பகுதி இளைஞர் யுவதிகள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றினை வலி. கிழக்கு பிரதேச சபை தலைவர் அவர்களிடம் கையளித்தனர். அதற்கிணங்க 2001ம் ஆண்டுக்கான பிரதேச சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில் படித்து விட்டு வேலையற்றிருக்கும் இளஞர் யுவதிகளை எடுப்பதென்றும் ஒரு சில மாதங்களுக்குள் இப்பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ●

## கூட்டுறவுக் கல்லூரி வவுனியாவுக்கு காரணமின்றி இடமாற்றம்?

பத்து வருடங்களுக்கும் மேலாக திருகோணமலையில் இயங்கி வந்த கூட்டுறவுக் கல்லூரி இந்த வாரம் முதல் வவுனியாவுக்கு இடம் மாற்றப்பட்டிருக்கிறது. இந்தக் கைங்கரியத்தை மாகாணசபை அதிகாரிகளே முன்னின்று நடத்தியிருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான கூட்டுறவுக்கல்லூரி இதுவரை கடற்படைத்தள வீதியிலுள்ள மனிதவள மேம்பாட்டு நிலையக் கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கி வந்தது. இதற்கென பதினைந்து ஏக்கர் காணி நடேசபுரத்தில் ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் மாகாணசபை அதிகாரிகளோ நகரத்து சுகபோகங்களை கொஞ்சமேனும் இழக்க விரும்பாததால் மூன்றரை மைல் தொலைவிலுள்ள நடேசபுரம் காணியை வசதியாக மறந்து செயற்பட்டனர்.

பத்து வருடங்களுக்கு மேலாக கூட்டுறவு கல்லூரி இயங்கிய போதிலும், அதற்கான ஆளணியினரைப் பெற்றுக் கொடுப்பதில் மாகாணசபை அதிகாரிகள் எந்த வெற்றியும் பெறவில்லை. இலங்கை நிர்வாகச் சேவை தரத்திலான அதிகாரியைக் கொண்டு நிரப்பப்படவேண்டிய கல்லூரி அதிபர் பதவியை சாதாரண கூட்டுறவு பரிசோதகரைக் கொண்டே இதுவரைக்காலமும் நிரப்பி வந்துள்ளனர்.

தற்போதும் வவுனியாவில் திறக்கப்பட்ட கூட்டுறவுக் கல்லூரிக்கும் ஆளணி பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஓய்வு பெற்றுச் சென்ற செயலாளர் ஒருவரின் இறுதி விருப்பத்தின் பேரிலேயே, எவ்வித காரணங்களும் இல்லாமல், கல்லூரி இடமாற்றம் பெற்றுள்ளது என்று தெரியவருகிறது.

வவுனியாவை முன்னேற்றுவது என்பது வேறு. திருகோணமலையிலிருந்து செயற்பட்ட ஒரு நிலையத்தை எவ்வித காரணங்களும் இன்றி வவுனியாவுக்கு எடுத்துச் செல்வதென்பது வேறு. திருகோணமலை பிரமுகர்கள் உணர்வார்களா? ■

## வவுனியா அபிவிருத்திக்கு 50 கோடி ரூபா கிடைக்கிறது!

வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. இதற்கென 50 கோடி ரூபா வழங்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்தனர்.

அந்த வகையில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்காக 50 கோடி ரூபா வழங்கப்படவுள்ளது. மேலும் மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்திக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி கிடைக்கப் பெறவுள்ளது.

வவுனியாவுக்கான அபிவிருத்தி நிதி மூலம் வீடமைப்பு, விவசாயம், நீர்ப்பாசனம், சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்திகளுக்கு செலவிடப்படவுள்ளன. ■

## மலையகத்தில் வேகமாகப் பரவும் மதுப்பழக்கமும் மர்ம நோய்களும்

மலையகத்தின் பல பகுதிகளில் மதுப்பாவனையும், நோய்களும் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தோட்டப் புறங்களில் கசிப்பு தாராளமாகக் கிடைக்கிறது. விலைகுறைவாகவும் அதேவேளை காலடியிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. அந்த மதுப்பாவனையால் உடலுக்கு அதிகம் தீங்குகள் விளைகின்றன. இதனால் நோயாளிகளாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன.

மலையகத்தில் மிகவும் வறுமை நிலைக்குட்பட்ட சிறுவர்களும், இளைஞர் யுவதிகளும் கொழும்பு போன்ற பகுதிகளில் வேலை வாய்ப்பு எனக்கூறி அழைத்துச் செல்லப் பட்டிருக்கிறார்கள். இதனாலும் வேறு பல சமூக நோய்களும் மலையகப் பகுதிகளில் உருவாகக் கூடிய நிலை இருப்பதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. ●

## புலிகளின் காலக்கெடு முடிவதனால் குடாநாட்டில் நிலவும் பதற்றம்!

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவடையும் தறுவாயில், மீண்டும் 'ஓயாத அலைகள் 4' புலிகள் மிகவும் உக்கிரமான முறையில் மேற்கொள்வார்கள் என யாழ்குடாநாட்டு மக்கள் எதிர்பார்த்து பெரும் பீதியில் இருந்து வருகின்றனர். கடந்த ஒரு மாதகாலமாக படையினரின் முன்னேற்றத்தை எதிர்கொள்ளாமல் தங்கள் தற்காப்புக்காகவே புலிகள் ஒருசில மோதல்களை எதிர்கொண்டு தாக்கினர். ஆனால் பெரும் தாக்குதலுக்கு புலிகள் திட்டம் தீட்டியுள்ளார்கள் என்று தெரிகிறது. பல்குழல் எறிகணைகளின் சத்தமும் ஓரளவுக்கு தணிந்திருந்தது. இரு சாராரும் பெரும் எதிர்கொள்வை எதிர் நோக்கவேண்டிய சூழலில் பெருமளவான *நவீன ரக ஆயுதங்களையே பயன்படுத்துவார்கள்.

என்றுமில்லாதவாறு இம்முறை மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாவார்கள் என்றே இன்றைய சூழலில் எண்ணத்தோன்றுகின்றது. யுத்தம் நடைபெறும் இடத்திலிருந்தே மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடத்தை நோக்கிச் செல்வது வழமையானதொன்றாகும். ஆனால் இம்முறை யுத்தம் வெடிக்கும் என்று கருதப்படும் இடங்களில் மட்டுமல்லாது, அனைத்து யாழ்குடாநாட்டு மக்களும் இடம்பெயர்வை எதிர்பார்த்து தங்கள் தங்கள் முக்கியமான உடமைகளை எடுத்து ஆயத்தமாகி வருகின்றார்கள். ■

## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு? உள்ளூராட்சித் தேர்தலால் மீண்டும் கரிசனை!

(நமது நிருபர்)

உள்ளூராட்சித் தேர்தல்களை எவ்வாறு நடத்துவதென்பது பற்றி அரசு தீவிர கவனமெடுத்துள்ளது. இது விடயமாக ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் வாதிகளும் அரசோடு இணைந்துள்ள மலையக தமிழ் அரசியல்வாதிகளும் தோட்டத் தொழிலாள மக்களின் வாக்குகளில் கண் வைத்துள்ளனர்.

வழமை போன்று அரசினரும், அரசோடு இணைந்துள்ள மலையக அரசியல் வாதிகளும் பல்வேறு வாக்குறுதிகளை அளிக்கத் துவங்கியுள்ளனர். தோட்டத் தொழிலாள மக்களுக்கு சம்பள உயர்வு பற்றி ஆராய்வதாக அரசு அறிவித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் மலையக அரசியல்வாதிகள் பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு தொழிலாள மக்களை ஏமாற்றியிருந்தார்கள்.

ஒரு மாதகாலம் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தத் தூண்டி, மலையகத் தொழிலாள மக்களின் கவனத்தைத் திசை திருப்பியிருந்தனர். கடைசியாக வேலைநிறுத்தப் போராட்டத்தால் எதுவித நன்மைகளும் கிடைக்கப் பெறாது பாதிக்கப்பட்டவர்கள் தொழிலாள மக்களே.

நீண்ட நாட்களாக மறந்து போயிருந்த தொழிலாளரின் சம்பள உயர்வுக் கோரிக்கையை உள்ளூராட்சித் தேர்தலைக் கருத்திற் கொண்டு மீண்டும் கரிசனைக்கு எடுத்திருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. இதனிடையே 1970களில் மலையகத்தில் தோன்றிய பட்டினிச் சாவு போன்றதொரு சூழல் மீண்டும் மலையகத்தில் ஏற்படப் போவதாக ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன் எம்.பி. எச்சரித்துள்ளார். ●

## போர்ச் செலவு அதிகரித்தாலும் பௌத்த ஆலயங்கள் புனரமைக்கப்படும்

"நாளாந்தம் யுத்தச் செலவு இரண்டு கோடி 30 இலட்சரூபாவாக அதிகரித்துள்ள போதிலும், பௌத்த சமயம் பேணிக் காக்கப்படும். நாடு முழுவதிலுமுள்ள 17 ஆயிரம் பௌத்த விகாரைகள் புனரமைக்கப்படும்."

இவ்வாறு பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

"கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளின் மையமாக கிராமிய பௌத்த கோயில்களை விளங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் பிரதமர் தெரிவித்தார்.

ஏற்கெனவே பௌத்த விகாரைகளை மையமாக வைத்துப் படைக்கு ஆள் திரட்டும் நடவடிக்கையைப் பிரதம மந்திரி ஆரம்பித்து வைத்துள்ளார் என்பது தெரிந்ததே.

படையினரதும், புலிகளதும் நடவடிக்கைகளினால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பல இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வணக்கஸ்தலங்கள் அழிக்கப்பட்டு தூர்ந்து போயுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ■

# விசேட பணிக்காக எழுதுவினைஞர்களை வேலைக்கமர்த்தல்

**வடக்கின் மீள்குடியேற்ற மீளமைப்பு அதிகார சபை**

மேற்படி அதிகார சபையில் கொழும்பு காரியாலயத்திலும் மற்றும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் பணியாற்றுவதற்கு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி 65 வயதிற்குட்பட்டவராக இருப்பதுடன் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பணியாற்றுவதற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும். சிங்களத் தேர்ச்சி மேலதிகத் தகமையாகக் கருதப்படும்.

தாங்கள் பணிபுரிய விரும்பும் மாவட்டத்தைக் குறிப்பிட்டு இவ்வதிகார சபையின் தலைவருக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் யாவும் 05.02.2001 முன்னர் கீழ் வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**ஆர்.ஆர்.ஏ.என்.,**
**16/3, கேம்பிரிஜ் இடம்,**
**கொழும்பு 07.**

# உள்ளூராட்சிப் பணிப்பாளரை நியமிக்க
## பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள்!

(காரைதீவு நிருபர்)

"ஏனைய மாகாணசபைகளில் இருப்பதைப் போன்று வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கும் ஒரு பணிப்பாளரை நியமித்து ஊழியர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுமாறு வேண்டுகிறோம்." இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வடக்கு-கிழக்கு மாகாண பொது நிருவாக உள்ளூராட்சி பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் கே.பரமலிங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

செயலாளரை அவரது திருகோணமலை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்த சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையிலான குழுவினர் மேற்படி கோரிக்கை விடுத்தனர்.

# கொடுப்பனவுக்கான கோரிக்கை

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சாகாமம், கஞ்சிக்குடிச்ச ஆறு, தங்கவேலாயுதபுரம், அளிக்கம்பை அகதிகள் நலன்புரி நிலையங்களில் வசிப்போர், 1994.08.16ந் திகதிக்குப் பின் திருமணம் முடித்தவர்களுக்கு, இருவரும் அகதிகள் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் 25000/= ரூபாவும், ஒருவர் அகதிகள் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்தவராயும் மற்றவர் அகதிகள் நலன்புரி நிலையத்தைச் சேராதவராக திருமணம் முடித்தால், அவர்களுக்கு 12500/= ரூபாவும் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படுகின்றது.

இக் கொடுப்பனவு கடந்த வருடம், 1994, 1995ம் ஆண்டுகளில் மணம் முடித்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. ஏனையோருக்கு இக் கொடுப்பனவை வழங்குமாறு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# யாழ் சென் ஜோன்ஸ் படையினரின் பெரும் சாதனை!

யாழ் மத்திய மாவட்ட புனித சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அணியினர் மாவட்ட ஆணையாளர் திரு. மணியோசை க. அருந்தவராஜா அவர்களின் தலைமையின் கீழ் ஹன்வெலவில் நடைபெற்ற தேசிய பாசறையில் பங்கு பற்றி சிறந்த கூடாரம், சமையல், சிறந்த பாசறைப் பொருட்கள், பொய்க்கால் ஓட்டம், தீப்பாசறை நிகழ்ச்சி, அழகிய சிகரம், தேசிய கீதம் ஆகிய போட்டிகளில் வெற்றிக் கேடயத்தைப் பெற்று சிறந்த மாவட்டமாகத் தெரிவு செய்யப்பட்டு யாழ் மண்ணிற்கு மட்டுமல்லாது தமிழ் இனத்திற்கே பெருமை சேர்த்துத் தந்துள்ளனர்.

இந்த மத்திய மாவட்ட அணியினர் வேதனைகள், சோதனைகள் மத்தியில் எதிர் நீச்சலிட்டு கடும் போட்டியின் மத்தியில் துணிகரமாக எதிர் நின்று இரண்டாவது தடவையாக 'சிறந்த மாவட்டம்' என்ற பட்டத்தினை யாழ் மண்ணிற்குப் பெற்றுக் கொடுத்து சாதனை நிலை நாட்டிச் சரித்திரம் படைத்துள்ளனர்.

மற்றும் தனி நபர் போட்டிகளிலும் பல தங்கப் பதக்கங்களையும் தமதாக்கி மேலும் பெருமை சேர்த்துக் கொடுத்த வீரர்களும் போற்றுதற்குரியவர்களே.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட இவர்கள் தீப்பாசறை நிகழ்ச்சியினூடாக யாழ் மக்களின் அவல நிலைகளை வெளி உலகிற்குக் கொண்டு வந்தமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றே.

# பண்டாரவளையில் 14 பேர் கைது?

பண்டாரவளை நகரத்தில் தேடுதலை மேற்கொண்ட பொலிஸார் அப்பகுதியிலிருந்து 14 தமிழ் இளைஞர் யுவதிகளைக் கைது செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் ஒன்பது பேர் ஆண்களும் 5 பேர் பெண்களுமாவர்.

பயணிகள் தங்கும் விடுதிகளிலிருந்தே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார் தோட்டப் பகுதிகளிலுள்ள தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு இவர்கள் ஆயுதப் பயிற்சி வழங்குபவர்கள் என்றும் சந்தேகிப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

கைது செய்யப்பட்டிருக்கும் 14 பேர் சம்பந்தமான வைத்திய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பண்டாரவளை நீதவான் அதுல விக்கிரமசிறி களு ஆராச்சி உத்தரவிட்டுள்ளார்.


வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour & Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.

**D.S. COMPUTER STUDIES**
Internet & E-mail
dsocm@mail.visual.com
No.6A, Hekitta Road, Wattala.
075-349247.

சுவிஸ் லவுசான் மாநகரில் உங்கள் கனவுகள் நனவாகிவிட


**என்.ரி.றேட் விண்ட்-N.T.TRADE WIND**

(Jewellery & Garments)

காலத்துக்கேற்ற வகையில் நவீன வண்ணங்களினாலான அசல் 22 கரட் தங்க நகைகளா? மனங்கவரத்தக்க புத்தம் புதிய வடிவங்களில் சிறுவர் சிறுமியர், பெண்க்ள், ஆண்களுக்கான ஆடைகளா? ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

ch.Des Rosiers -3
1004-Lausanne
Switzerland.
Tel: 021-6462025 - 078-6231639

**மலையாள மாந்திரீகம்**

பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறியவாருங்கள்!

**சுவிஸ் அன்பரின் கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால், பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், மகளின் திக்குவாய் குணமாகியது**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்.**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், 39 வயதில் அதிசயத் திருமணம்**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்தால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டேம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்த என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், ஜாதகத்தில் கூறியது பலிதம்**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், அதிசய அக்னி குண்டல பூஜை**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், அச்சொட்டான கைரேகை பலன்**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**
**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

**மனோதத்துவ வைத்தியம்**

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் டிசம்பர் 17 முதல் 23 வரை**
DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

**கல்முனையில் ஜனவரி 06, 07 திகதிகள்.**
T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஜனவரி 09, 10 திகதிகள்.**
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

**லவ்ஜெல் கிறீம் 2000**



இந்திரிய குறைபாடு, உடல் உறவில் ஏற்படும் மந்தகரமான செயற்பாட்டிலிருந்து விடுவித்து குறைபாடான சக்தியை முன்பு போலவே மறுபடியும் பெற்றுத்தரும்.....

**உறவில் நீடித்த நேரம், நீடித்த மகிழ்ச்சி**

இனிய வேளை
ஓர் புதிய நாள்

**விநியோகிப்பவர்கள்:**
யூனியன் கெமிஸ்ட், யூனியன் பிளேஸ். மெக்ஸ் பாமசி, கோட்டை. (புகையிரத நிலையத்திற்கு முன்பாக) அம்பிகா மெடிக்கல், நுவரெலியா, லீமெடிக்கல்/ரீஜன்ட் பாமசி, கண்டி. சிட்டி பாமசி, மலபார் விதி, கம்பொல. அருண மாத்தறை. லங்கா மெடிக்கல் இரத்தினபுரி. குருநாகல் மெடிக்கல், குருநாகல். விஜய நிட்டம்புவ. சுலலித கடவத்தை, சாலுகா ஆமர் வீதி, சமீர சாரங்க பாமசி மகரகம. R.No. 212573

**K.N.S.SHOPPING CENTRE &TAKEAWAY-SWISS.**

மளிகைப் பொருட்கள், ஒறிஜினல் வீடியோ, ஓடியோ, கசற்றுக்கள் COMPACT டிஷ்குகள், வீடியோ C.Dகள், 22 கரட்டில் தங்க நகைகள், பத்திரிகை, சஞ்சிகைகள் இலங்கை, இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக்கொள்ள

K.N.S.SHOPPING CENTRE
K.N.SUKUMARAN
ANKER-STR-16
8004 Zurich Switzerland.
T.P 01-2427111 FAX 01-2427144

வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 12 மணிவரை (ஞாயிறு உட்பட) கடை திறந்திருக்கும்.

உலகப் புகழ்பெற்ற

**எக்ஸ் ஒயில்**

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




கோடாலித்தைலம்
Rs.25/= Only
(3.ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984


# 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் புவிலவன் 22.01.2001**

Switzerland-Montreux இல் வசிக்கும் முல்லைப்பிளவு காரைநகரைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி (சந்திரன்)-ரஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் புவிலவன் தனது முதலாவது பிறந்த தினத்தை 27.01.2001 இல் Montreux இல் உள்ள Salle de centre Paroissial d'Etraz இல் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, ஹட்டனில் உள்ள அப்பம்மா, சித்தப்பாமார், சகோதரர்கள் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பயின்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: திருமதி. கார்த்திகேசு. ஹட்டன். T.P.No. 051-24106

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பிரித்தானியா புலிகளைத் தடை செய்யுமா? பலிக்குமா பகீரத முயற்சிகள்?

புலிகள் தலைவர் பிரபாகரனையும் அவர்களின் உளவுத்துறை பொறுப்பாளரான பொட்டு அம்மானையும் உள்ளடக்கிய எட்டு புலிகள் இயக்க முக்கியஸ்தர்களை சர்வ தேசக் குற்றவாளிகளாகச் சித்தரித்து, அவர்களது படத்துடன் பல குற்றச் சாட்டுகளையும் சுமத்தி சர்வதேச பொலிஸ் நிறுவனமான 'இன்ரபோல்' விளம்பரப் படுத்தியுள்ளதுடன் அவர்களை உலகின் எந்நாட்டிலும் கைது செய்யலாமென பிடிவிறாந்தும் பிறப்பித்துள்ளது.

இவ்வாறு அபகீர்த்தியொன்றை சர்வதேச நிறுவனம் ஒன்று புலிகள் இயக்கத் தலைவர் மீது மேற்கொண்டுள்ள தருணமானது அரசியல் ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த வேளையாகும்.

அதாவது மூன்றாம் உலக நாடொன்று இலங்கையின் இனப்பிரச்சனையில் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க மும்முரமாக முனைந்து கொண்டிருக்கும் தருணம்.

இத் தருணத்தில் வெளியாகியுள்ள இத்தகைய அறிவித்தல் இம் முயற்சியில் மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக உள்ளது.

இன்ரபோல் நிறுவனம் இப்படி அறிவிப்பதற்கு அடிப்படையான காரணங்கள் என்னவெனத் தெரிவிக்கவில்லை.

வெறுமனே குற்றச் செயல்கள் என்ற கருத்துருவத்துக்கு உட்படுத்தியே இவர்களின் நடவடிக்கைகளை அது பார்த்துள்ளது.

அப்படியானால் ஆயுதம் வைத்திருப்பதே சட்டப்படி குற்றச் செயல்தான்.

ஆனால் உலகில் இயங்கிய சகல விடுதலை .இயக்கப் போராட்டங்களும் ஆயுதங்களை ஏந்தியே நடந்துள்ளன.

இந்த வகையில் இன்ரபோல் விடுத்துள்ள இந்த அறிவிப்பானது வினோதமானதாக இருந்தாலும், நடைமுறையில் அவர்களைக் கைதுசெய்வது அதற்குச் சாத்தியமில்லாததாக இருந்தாலும், இத்தகைய விளம்பரம் விடுத்துள்ள செய்தி விபரீதமானது.

அதாவது, 'பயங்கரமான மனிதர்கள்' என்ற வகையறாக்குள் இவர்களை அடக்குவதன் மூலம் ஏனைய சர்வதேச கடத்தல்காரர்கள், கொள்ளைக்காரர்கள், பயங்கரவாதிகள் ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் தலைவர்களும் ஒப்பு நோக்கத் தகுந்தவர்கள் என்ற கருத்தை அது வெளியிடுவதாக அமைந்துள்ளது.

இத்தகைய மலினமான முறையில் இவர்களை எடைபோட இன்ரபோல் ஏன் புறப்பட்டுள்ளது என்பதும், இன்ரபோலுக்கு இலங்கையின் போராளி அமைப்பொன்று பற்றி இத்தனை கரிசனை எடுக்க வேண்டிய அவசியம் என்னவென்பதும் ஆராயப்பட வேண்டிய விடயங்கள்.

அத்துடன் இங்கு இன்ரபோல் புலிகள் அமைப்பை குற்றம் சுமத்தவில்லை.

அவ்அமைப்பின் குறிப்பிட்ட தலைவர்களைத்தான் குற்றம் சுமத்தி அவர்களைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பித்துள்ளது.

அவ்வாறானால் புலிகள் அமைப்பின் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பனவற்றுக்கு அப்பால் இத் தனி நபர்களை மட்டும் குற்றம் காணுவதற்கு இன்ரபோல் என்ன நியாயத்தை கற்பிக்கிறது என்பதும் கேள்விக்குரியது.

ஏனெனில் அவர்கள் மேற்கொண்ட செயல்களெல்லாம் புலிகள் அமைப்புக்காக மேற்கொண்ட செயல்களேயல்லாமல் சொந்த விடயங்களுக்காக மேற்கொண்டவையல்ல.

எவ்வாறாயினும் இன்ரபோல் இத் திடுக்கிடும் விளம்பரத்தை அறிவித்து விட்டது.

இதன்படி இவர்களை எந்த சர்வதேச நாட்டிலும் கைது செய்யலாம்.

இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று இன்ரபோல் தேட வேண்டிய அவசியம் இல்லை.

அவர்கள் பத்திரமாக இலங்கையில் தான் இருக்கிறார்கள்.

இன்ரபோல் மிகத் தாராளமாக இலங்கைக்கு வந்து அவர்களைக் கைது செய்துகொண்டு போக வேண்டியதுதானே?

இப்படிப் பார்க்கையில் வேடிக்கையாகத் தெரிந்தாலும் இந்த அறிவித்தலின் விளைவுகள் பாரதூரமானவை.

அதாவது, இப் புலிகள் இயக்கத் தலைவர்கள் வெளிநாடுகளுக்கு வருவதை இவ்அறிவித்தல் தடை செய்கிறது.

இதன் பாதிப்பு எங்கேயென்றால், ஒரு வேளை நோர்வே போன்ற நாடுகளின் முயற்சியால் இலங்கைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் வெளிநாடொன்றில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டால் அதில் இத் தலைவர்கள் பங்குபற்ற முடியாதிருக்கும்.

உலகில் இவ்வாறு பல பேச்சுவார்த்தைகள் வெளிநாடுகளில் நடைபெறுவதுண்டு.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்குமான பேச்சுவார்த்தைகள் அமெரிக்காவில் நடைபெறுகின்றன.

அதேபோல் ஐ.ஆர்.ஏ. இயக்கத்துக்கும் பிரித்தானிய அரசாங்கத்துக்குமான பேச்சுவார்த்தைகளும் அமெரிக்காவில் நடைபெற்றன.

ஏன், முன்னர் தமிழ் போராளிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமான பேச்சுவார்த்தைகள் திம்புவில் நிகழ்ந்திருந்தன.

இவ்வாறு வெளிநாடுகளில் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்வது, பேச்சுவார்த்தைகளை சுமுகமாக நடத்த மேற்கொள்ளும் ஒரு வழிமுறை.

ஆனால் இன்ரபோல் அவ் வழிமுறைக்கு முட்டுக் கட்டை போட்டுவிட்டது.

இன்ரபோலின் இந்த அறிவிப்போடு புலிகள் தொடர்பான மற்றொரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயமும் இப்போது கேள்வியாக எழுந்துள்ளது.

ஆம்,

அதுதான் பிரித்தானியா புலிகளை சர்வதேச பயங்கரவாத அமைப்பாகக் கருதித் தடை செய்யுமா என்ற கேள்வி.

இன்று இலங்கை தொடர்பான அரசியல் அவதானிகள் யாவரும் பிரித்தானிய அரசாங்கத்தின் இதுபற்றிய முடிவை மிகப் பரபரப்புடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் எதிர்பாராத விதமாக இன்ரபோலின் இந்தக் குற்றவாளிகள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இது பிரித்தானியாவின் முடிவில் அழுத்தம் செலுத்த முற்படும் ஒரு முயற்சியா என்றும் சிந்திக்க வைக்கிறது.

இன்ரபோலால் இப் புலிகள் இயக்கத் தலைவர்களை சர்வதேசப் பயங்கரவாதிகளென முத்திரை குத்தி விட்டால் பிரித்தானிய அரசாங்கம் புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ளடக்குவதற்கு தூண்டுதலாக இருக்குமெனத் திட்டமிட்டே இத்தகைய அறிவித்தலுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாவெனச் சந்தேகம் எழுகிறது.

இவ்வளவு காலமும் இல்லாதவாறு ஏன் இப்போதுதான், அதுவும் பிரித்தானியா அடுத்த மாதம் 18ம் திகதி சர்வதேசப் பயங்கரவாதத்தை தடை செய்யும் சட்ட மூலத்தை நிறைவேற்றவுள்ள தருணத்தில் தான் இன்ரபோல் இப் புலிகள் தலைவர்களைத் தேடப்படுவோராகப் பட்டியலிட வேண்டும் என்ற கேள்வி எவருக்கும் தோன்றும்.

இன்ரபோல் தானாகச் சிந்தித்து யாரையும் குற்றவாளிகளாக வெளிப்படுத்தப் போவதில்லை.

அதற்கு யாராவது முறைப்பாடு தெரிவித்திருக்க வேண்டும்.

அவ்வாறான முறைப்பாட்டைத் தெரிவித்தது யார்?

இலங்கையா, இந்தியாவா? அல்லது வேறு யாருமா?

இலங்கை இயல்பாகவே அத்தகைய முயற்சிகளில் ஈடுபட விளையக்கூடும்.

அது பிரித்தானியாவிடம் புலிகளைத் தடை செய்யும்படி மிக வெளிப்படையாகவே மும்முரமாக அழுத்தம் கொடுத்து வருகிறது.

அண்மையில் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த ஒரு கருத்தில் பிரித்தானியா புலிகளைத் தடை செய்யாவிட்டால் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமான ராஜீய உறவுகளில் பாதிப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா புலிகளையோ அல்லது வேறு சர்வதேச அமைப்புகளையோ பயங்கரவாத அமைப்புகளாக இனங்காணுவதும் அவற்றைத் தடை செய்வதும் முற்று முழுதாக அதன் உள்நாட்டு விவகாரம்.

இவ்வாறு தடைசெய்ய வேண்டுமென்று எந்தக் கடமைப் பாட்டையும் அது எந்த வெளிநாட்டுக்கும் கொண்டிருக்கவில்லை.

தனது சொந்த நாட்டின் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு பற்றிய அக்கறையின் நிமித்தமே அவ்வாறான சட்டத்தை அது உருவாக்குகிறது.

அவ் விடயத்தில் அன்னிய நாடான இலங்கையானது வில்லங்கமாகத் தலையிட்டு அச்சட்டமூலத்தில் தனக்குத் தேவையான அம்சங்களை உள்ளடக்கும்படி வற்புறுத்துவதும், அவ்வற்புறுத்தலை ராஜீய உறவுகளைப் பாதிக்கும் என்ற மிரட்டலாக வெளிப்படுத்துவதும் மிகைப்பட்ட ஒரு உரிமையே.

வெளிநாடொன்றில் இவ்வாறான மிகை உரிமையை எடுக்க முனையும் இலங்கை தனது சொந்த நாடுபற்றி வெளிநாடுகள் தெரிவிக்கும் சிறிய கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் மிக வெகுண்டு எதிர்ப்புத் தெரிவித்து விடுகிறது.

அண்மையில் பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சர் பீற்றர் ஹெய்ன் இலங்கையில் பிரிவினையை இந்தியா, அமெரிக்கா பிரித்தானிய உட்பட உலக நாடுகள் ஏற்கப் போவதிலலையெனவும் ஆனால் தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்கு சர்வதேச நாடுகள் ஆதவு தருமெனவும் தெரிவித்த கருத்தை வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கண்டித்து, சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியப் போவதில்லையெனப் பதிலளித்திருந்தது இக் குணாம்சத்துக்கு நல்ல எடுத்துக்காட்டு.

இலங்கையின் இனப் பிரச்சனை தொடர்பாக எந்தவொரு வெளிநாடும் தமக்குப் பிடிக்காத கருத்தெதையும் சொல்லக் கூடாதெனத் தடுக்க முன்னிற்கும் இலங்கை, அதேவேளை வெளிநாடுகள் தத்தமது நாடுகளிலும் இலங்கையின் நலனுக்கேற்பவே சட்டங்களை இயற்ற வேண்டுமென அடம்பிடிப்பது அதிகப் பிரசங்கித் தனமென உணர்வதில்லை.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், இலங்கை தனது நாட்டிலேயே புலிகளை முழுமையாகத் தடை செய்யவில்லை.

புலிகளின் அரசியல் கட்சியானது இன்னும் சட்டரீதியான கட்சியாகப் பதிவு செய்யப் பட்டே உள்ளது.

ஒவ்வொரு தேர்தல்களின்போதும் தேர்தல் ஆணையாளரால் அது அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சியாக அறிவிக்கப் பட்டுக்கொண்டே வருகிறது.

அத்தோடு புலிகள் இயக்கம்கூட இங்கு நீண்ட காலமாகத் தடை செய்யப்பட்டிருக்கவில்லை.

தலதா மாளிகைக்கு குண்டு வைத்த சம்பவத்தோடுதான், அப்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று எழுந்த அழுத்தங்களை யடுத்து புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

எனினும் அதுகூட முறைப்படி சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தடையாக' அல்லாமல் அரசியல் ரீதியாக வெளிப்படுத்தப்பட்ட தடை அறிவிப்பாகவே காணப் படுகிறது.

இதேவேளை இலங்கை அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று தெரிவித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நோர்வே நாட்டை அனுமதித்தும் உள்ளது.

இதற்கமைய நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதிகள் புலிகளின் தலைவர்களை வெளிநாடுகளிலும் இலங்கையிலும் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

இவ்வாறு இலங்கை தமது சொந்த நாட்டில் புலிகளை ஏதே ஒரு வகையில் அங்கீகரித்துக்கொண்டு வெளிநாடுகளில் தடைசெய்யக் கோருவதும் முரண்பாடான அணுகுமுறையாக உள்ளது.

அத்தோடு இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அக்கறை காட்டுவதைவிட புலிகளை முறியடிப்பதில் தான் உண்மையாக அக்கறை செலுத்துகிறது என்பது இம் முனைப்புகளின் மூலம் வெளித் தெரிகிறது.

இதேவேளை புலிகளை முறியடிக்கும் அக்கறை இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் உண்டு.

அது ராஜீவ் காந்தி கொலையை யடுத்து பிரபாகரன், பொட்டம்மான் உட்பட்ட புலிகள் இயக்கத் தலைவர்களை தனது தேடப்படுவோர் பட்டியலில் உள்ளடக்கி வெளிநாடுகளில் விநியோகித்திருந்தது.

இலங்கையிடமும் இச் சந்தேக நபர்களைக் கைது செய்து தரும்படி கோரிக்கை விடுத்திருந்தது.

அக் கோரிக்கையை இந்தியா மிக அண்மையில் மீண்டும் விடுத்திருந்தது.

அதனால் இன்ரபோலிடம் இவர்களைத் தேடும் பணியை ஒப்படைப்பதற்கு இந்தியாவும் முன்வந்திருக்கக் கூடும்.

இந்தியாவுக்கு இவ்வாறான அழுத்தத்தை இச் சந்தர்ப்பத்தில் ஏற்படுத்த வேண்டிய அரசியல் காரணங்களும் உண்டு.

அதாவது, இலங்கை விடயத்தில் இந்தியா தன்னைத்தான் ஒரு 'கோட்ஃபாதராக' கருதி வந்துள்ளது.

இலங்கை விவகாரம் தனது கையை மீறி வெளிநாடுகளின் ஈடுபாட்டுக்கு உள்ளாவதை அது மனதார விரும்பப் போவதில்லை.

இதில் விடுதலைப் புலிகளும் இந்தியாவின் பங்கையோ மத்தியஸ்த்தையோ நிராகரித்தே வருவதானது இந்தியாவை கையாலாகாத நிலையில் கட்டிப் போட்டு வைத்துள்ளது.

எனவே புலிகள் தம்மை மீறிய செயற்பாட்டை சர்வதேச அரங்கில் முடக்கும் நாட்டம் இந்தியாவுக்கும் உண்டு.

**நரன்**

இதில் விடுதலைப் புலிகளும் இந்தியாவின் பங்கையோ மத்தியஸ்த்தையோ நிராகரித்தே வருவதானது இந்தியாவை கையாலாகாத நிலையில் கட்டிப் போட்டு வைத்துள்ளது.

எனவே புலிகளின் தம்மை மீறிய செயற்பாட்டை சர்வதேச அரங்கில் முடக்கும் நாட்டம் இந்தியாவுக்கும் உண்டு.

அதனால் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடும் காரணத்தை முன் வைத்து அதனால் இவ்வாறான சர்வதேச நிறுவனங்களிடம் இவர்களைக் கைது செய்யும்படி முறையிட முடியும்.

இவ்வாறான முயற்சியை எவர் மேற்கொண்டிருந்தாலும், அது பிரித்தானியா புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துக்கு உடந்தையானதாகவே அமைந்துள்ளது.

பிரித்தானியா புலிகளை சர்வதேசப் பயங்கரவாதிகளாகக் கருதித் தடை செய்யுமா என்பதே இப்போது அதி முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி.

புலிகளைப் பொறுத்தவரையில் இவ்வாறான ஒரு தடை பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய ஒன்று.

ஒருபுறத்தில் இத் தடை மூலம் அதன் போராட்டத்துக்கான அங்கீகாரம் மறுக்கப் படுகின்றது.

மறு புறத்தில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த மக்களிடையே புலிகளுக்கான ஆதரவை முறியடிக்கும் வகையிலமைகிறது.

புலிகளை இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஏற்கெனவே தடை செய்துள்ளன.

ஆயினும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே புலிகளுக்கிருந்த ஆதரவை வீழ்த்த முடியவில்லை.

ஏனெனில் இத் தடைகள் மூலம் புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே எவ்விதப் பின்னடைவையும் ஏற்படுத்த முடியவில்லை.

ஆனால் பிரித்தானியா இத் தடையை அமுல்படுத்தினால் அது அங்குள்ள புலம் பெயர்ந்த தமிழர்களின் ஈடுபாட்டை பெருமளவு பாதிக்கக் கூடுமென்பதுதான் இத் தடையில் உள்ள முக்கியத்துவம்.

ஏனைய நாடுகளைப்போலன்றி, பிரித்தானியாவில் புலம் பெயர்ந்த தமிழர்கள் அகதிகளாகவோ, அல்லது அந் நாட்டின் குடிமக்களாகவோ அங்கீகரிக்கப் படாத நிலையிலேயே பல வருடங்களாகப் பேணப் பட்டு வருகின்றார்கள்.

அதனால் அவர்கள் எந்நேரமும் திருப்பி அனுப்பப்படக்கூடிய ஆபத்தை கொண்டிருக்கிறார்கள்.

புலிகளைத் தடைசெய்தபின் அவர்களுடன் தொடர்பு வைத்திருந்தால், தாம் திரும்ப அனுப்பப் படலாம் என்ற அச்சம் காரணமாக அங்குள்ள புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது ஈடுபாட்டை தவிர்த்துக் கொள்ளலாம் என்பதுதான் இத் தடையால் புலிகளுக்கு ஏற்படக்கூடிய பாதகம்.

அத்தோடு இந்தியா, அமெரிக்கா வரிசையில் பிரித்தானியாவும் சேர்ந்து புலிகளைத் தடை செய்வதானது பிரிவினைப் போராட்டம் வெற்றியளிக்காது என்ற மனோபாவத்தை இலங்கைத் தமிழர்களிடையே தூண்டக்கூடியதாகவும் அமையலாம்.

எனவேதான் இலங்கை அரசாங்கம் எப்படியாவது இத் தடைச் சட்டத்தை பிரித்தானியாவைக் கொண்டு நிறைவேற்றி விட வேண்டுமெனத் துடியாய்த் துடிக்கிறது.

அதேபோல் விடுதலைப்புலிகளும் இந்தக் கண்டத்திலிருந்து நீங்குவதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

பிரித்தானியாவில் ஏற்கெனவே புலிகளின் முன்னணி அமைப்பாகச் சந்தேகிக்கப் படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) அண்மையில் தடை செய்யப்பட்டு அதன் வங்கிக் கணக்குகளும் புலிகளுக்காகச் சேகரிக்கப்பட்ட நிதியென்ற சந்தேகத்தில் முடக்கப்பட்டுள்ளது.

அடுத்து இப்போது இன்ரபோலின் தேடப்படுவோர் பட்டியலில் புலிகள் தலைவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நகர்வுகளைப் பார்க்கையில் புலிகள் மீதான தடைக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவதாகவே உணரக் கூடியதாக உள்ளது.

எனினும் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ள நிலையிலும், ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ள நிலையிலும், நோர்வே நாடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும், பிரித்தானியா இத்தகைய தடையை விதித்தால் அது இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகமான ஒரு செயலாகவே அமையுமென விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

அவர்களும் இத்தகைய தடையைத் தடுக்க சர்வதேச ரீதியாக சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இதில் வெற்றி பெறப்போவது யார் என்பது இலங்கை இனப்பிரச்சனையின் அடுத்த அரசியல் நகர்வுகளைத் தீர்மானிக்கும் ஒரு பிரதானமான விடயமாக அமையும்.

## செய்திச் சிதறல்

✪ "அரசப் படையினர் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளிடம் இழந்த பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றுவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஆனையிறவைக் கூட மிக விரைவில் படையினர் கைப்பற்றி விடுவார்கள். இந்த நடவடிக்கை குறிப்பிட்ட காலத்துக்குள் ஈடேற்றப்பட வேண்டுமானால் இளைஞர்கள், யுவதிகள் ஆகியோர் ஆயிரக் கணக்கில் படையில் சேர வேண்டும்!" இவ்வாறு பிரதமர் ரட்னசிறி விக்கிரம நாயக்க கூறியிருக்கிறார்.

✪ விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக அறிவித்த ஒரு மாதகால போர் நிறுத்தத்துக்கான காலக் கெடு முடிவடைந்தாலும் அல்லது நீடிக்கப்பட்டாலும் அதைப் பற்றி அரசாங்கத்துக்கு எத்தகைய கவலையு மில்லை என்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. எத்தகைய நிலமையையும் சமாளிப்பதற்கேதுவான போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

✪ இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கைகளை பாதிக்கும் விதத்தில் இவ்வமைப்புக்கான நிதியுதவியை வழங்குவதற்கு இதன் தாய்ச்சங்கமான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரு அமைப்புகளும் ஒரே பெயரைக் கொண்டிருந்த போதிலும், இவையிரண்டும் தனித் தனியாகவே செயற்பட்டு வருகின்றன. நிர்வாகப் பொறுப்புக்கள் கூட வித்தியாசமானவை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சுவிற்ஸர்லாந்து நாட்டிலுள்ள தனது தலைமையகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு செயற்பட்டு வருகிறது. இதே வேளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இந்த நாட்டிலுள்ள தெரிவு செய்யப்பட்ட குழுவினரால் இயக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு குழுவில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சில முரண்பாடுகளால் ஏற்கனவே இயங்கி வந்த குழு கலைக்கப்பட்டு, தற்காலிக நடவடிக்கை குழு நிர்வாகத்தைப் பொறுப்பேற்றது. சீராக இயங்கக் கூடிய நிரந்தரமான குழுவொன்று அமைக்கப்படாதவிடத்து இதற்காக வழங்கப்படும் நிதியை நிறுத்தி விடப் போவதாக சர்வதேசக் குழு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

✪ மட்டக்களப்பு இப்பொழுது 'ஹர்தால்களப்பு' என்ற பெயர் சூட்டப்படுவதற்கு ஏற்றவாறு மாறி விட்டதாக அங்கிருந்து வந்த ஒரு பிரமுகர் தெரிவித்தார். அங்கு திடீர் திடீரென்று கடையடைப்புகளும் போக்குவரத்து மற்றும் சாதாரண வாழ்க்கை முறைகள் ஸ்தம்பிதமடைவதும் சகஜமாகி விட்டது. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். கடந்த 20ம் திகதி மட்டக்களப்பிலுள்ள இராணுவத்தினர் ஒரு கலை விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். பாடசாலைகளுக்கிடையிலான சில போட்டிகளையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் போட்டிகள் நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் பாடசாலைகளிலிருந்து ஒத்துழைப்பு கிடைக்கவில்லையென்று தெரிகிறது. மாலையில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்குக்கூட எதிர்பார்த்தளவு ஆதரவு கிடைக்க வில்லையென்று தெரிகிறது. ஏதோ சில காரணங்களை முன்வைத்து முதல் நாளன்றே, குறிப்பிட்ட தினத்தன்று 'ஹர்தால் அனுஷ்டிக்க வேண்டும்' என்று ஒரு துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. படையினர் நடத்திய கலை விழாவுக்கு பொதுமக்கள் போகாமல் இருந்ததற்கு இந்த ஹர்தால் அறைகூவலும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது. இது தவிர அன்று மாலையில் மட்டக்களப்பு பிராந்தியத்திற்குரிய மின்சாரமும் துண்டிக்கப் பட்டுவிட்டது. அங்கு மின் விநியோகத்தை வழங்கும் இருவகை விநியோக வழிகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. படையினரின் கலை விழாவைக் குழப்பியடிக்க இதுவும் ஒரு காரணமோ என்று வினா எழுப்பப் பட்டுள்ளது.

✪ நாட்டின் பொருளாதாரநிலை மிகவும் கவலைக்குரிய விடயமாகி விட்டது என்று ஜனாதிபதி சந்திரிக்கா வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் மத்தியில் இக்கருத்தினை ஜனாதிபதி வெளியிட்டிருக்கிறார். டொலரின் பொறுமதிக்கு எதிராக இலங்கை நாணயத்தின் மதிப்பு குறைந்ததால் மட்டுமல்லாமல், போருக்கான செலவினங்கள் பாரதூரமாக அதிகரித்துள்ளமையும் முக்கியமான காரணமாகும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இக் கூட்டத்தில் பங்கு பற்றியவர்களுள் அநேகமானோர் அமைச்சர்கள். இதனால்தானோ என்னவோ அமைச்சர்கள் தங்களுக்குரிய செலவினங்களை வெகுவாகக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டார் ஜனாதிபதி. இவ்வாறு கூறிய ஜனாதிபதி ஏப்ரில் மாத அளவில் நிலைமை சீரடையும் என்றும் ஒரு தகவலை வெளியிட்டார்.

# அண்டை மண்டலத்தில்....

# "நானே முதல்வர்"-ஜெயலலிதா



சில அரசியல்வாதிகளுக்குத்தான் எத்தனை அபார நம்பிக்கையப்பா! எடுத்துக்காட்டாக அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா எதிர்வரும் சட்டமன்ற தேர்தல்களில் தனது அணி வெற்றி பெற்றால், தானே முதல்வர் என்று அறிவித்திருக்கிறார். கூட்டணி ஆட்சியும் கிடையாது என்று வேறு கூறிவிட்டார். அதிர்ச்சியுற்ற தமிழ் மாநில காங்கிரஸ், மூன்றாவது அணி அமைக்கலாமா என்று யோசிக்கத் தொடங்கியிருக்கிறது. டான்சி வழக்கில் மூன்றாண்டு கடுங்காவல் தண்டனை பெற்றதைத் தொடர்ந்து ஜெயலலிதா தேர்தல்களில் போட்டியிடும் தகுதியினையே இழந்திருக்கிறார்.

எனவே அவர் இன்னும் இரண்டு மாதங்களில் நடைபெறவிருக்கிற சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவாரா அல்லது அ.இ.அ.தி.மு.க., மற்றும் அதன் தலைமையிலான அணி வேறு எவரையாவது முதல்வராக முன்னிறுத்துமா என்று பல்வேறு ஊகங்கள் தொடர்ந்து எழுந்து வந்தன.

அவற்றிற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைக்கிறாற்போல், ஜெயலலிதா எம்.ஜி. ஆரின் 85வது பிறந்த நாளன்று தனது அறிவிப்பினை வெளியிட்டார். 'நானே கட்சி, நானே ஆட்சி, நானே தமிழகம், நானே எல்லாம்' என்ற ரீதியில்....

'ஆனால் அவர்தான் தண்டனை பெற்றிருக்கிறாரே, இரண்டாண்டுகளுக்கு மேல் கடுங்காவல் தண்டனை பெற்றுவிட்டால் அடுத்து ஆறு ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலிலும் போட்டியிட முடியாது' என்றல்லவா சட்டம் கூறுகிறது?

அவர் கூறிய பதில்- "பொறுத்திருந்து பாருங்கள். எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் இருக்கும் உரிமைகள் எனக்கும் உண்டு. சட்ட பூர்வமாகவே இந்தப் பிரச்சனைக்கு பரிகாரம் காண்பேன்." வெறும் பேச்சுக்காகத்தான் சட்டப்படி என்று கூறிக்கொள்கிறார். சட்டத்தைத் தன் வசதிக்கேற்ப வளைத்துக் கொள்ளலாம் என்று அவர் இன்னமும் நம்புவதாகத்தான் படுகிறது. இரண்டு, மூன்று வழிகளில் அவர் மீண்டும் முதல்வராக முயற்சிக்கலாம். எந்தத் தொகுதியில் அவர் நிற்க முடிவு செய்கிறாரோ, அந்தப் பகுதி தேர்தல் அதிகாரியை சரிக்கட்டி தேர்தலில் போட்டியிடலாம்.

அதிகாரி அனுமதித்துவிட்டால் அதனை எதிர்த்து தி.மு.க. நீதிமன்றம் சென்றாலும், பொதுவாக தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, நீதிமன்றங்கள் தேர்தல்கள் நடக்க தடையாக இருக்கவிரும்பமாட்டா.

ஆனால் இதில் வெறொரு சிக்கல் இருக்கிறது. எந்தத் தொகுதியில் அவர் போட்டியிடக்கூடுமோ அங்கு தங்களுக்கு வேண்டிய தேர்தல் அதிகாரியினை தி.மு.க. அரசு நியமிக்கலாம். அவர் ஒரேயடியாகாக ஜெயலலிதா வின் மனுவினை நிராகரித்து விட்டால், அப்போது நீதிமன்றம் தலையிட மறுக்குமே.

வேறு என்ன செய்யலாம்? தேர்தல்கள் அறிவிக்கப்படும் முன்னரேயே உச்சநீதிமன்றம் சென்று, "எனது தண்டனை நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே நான் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட வேண்டும்" என்று மனுச் செய்யலாம். உச்சநீதி மன்றம் சம்மதித்து விட்டால், பிறகென்ன ராஜபாட்டைதானே?

ஆனால் இதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. நீதிமன்றம் ஜெயலலிதாவின் வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டால் ஒரேயடியாக அவரது கனவுகளெல்லம் தகர்ந்து விடுமே!

இன்னொரு வழியும் இருக்கிறது. ஒருவர் சட்ட மன்றக்கட்சியின் தலைவராக இருக்கவேண்டுமானால், அவர் தேர்தலில் நின்று வெற்றிபெற வேண்டும். இல்லாவிட்டால் கட்சித்தலைவர் போட்டியிடாமல் தனது கட்சியின் கணிசமான வேட்பாளர்கள் வெற்றிபெற வழி தேடவேண்டும்.

அந்த முறையில் அ.இ.அ.தி.மு.க.வோ அல்லது அந்த அணியோ வெற்றி பெற்றால், பிறகு ஜெயலலிதா அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலமைச்சராக ஆகி, அதன் பின் நீதிமன்றத்தின் உத்தரவினைப் பெற்று ஒரு இடைத் தேர்தலில் போட்டியிடலாம். வெற்றி பெற்று, தன் பதவியினைத் தக்கவைத்துக்கொள்ளலாம்.

இந்த முறையில் இன்னொரு அனுகூலமும் இருக்கிறது. தேர்தல்களில் போட்டியிடுவதைத் தவிர்த்து மாநிலம் முழுவதும் மற்ற வேட்பாளர்களுக்காக பிரச்சாரம் செய்யலாம். வஞ்சிக்கப்பட்டுவிட்டார் புரட்சித் தலைவி என்று ஒப்பாரி வைக்கலாம்.

அ.இ.அ.தி.மு.க. அணிவென்று, அவர் முதல்வராகி, அப்போதும் நீதிமன்றங்கள் அவருக்கு பயப்பட மறுத்து, அவர் தேர்தலில் போட்டியிட அனுமதிக்காவிட்டால்? அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

அீவரது தற்போதைய ராஜகுரு இன் னொரு கிறுக்குத்தனமான யோசனையினை யும் கூறியிருக்கிறார். முதல்வரான பிறகும் போட்டியிட அனுமதியில்லாவிட்டால், ராஜினாமா செய்வது... அவசரப்பட வேண்டாம், ஒரே ஒரு நாள்தான், பிறகு மீண்டும் முதல்வராகிக் கொள்வது, அப்புறம் ஆறு மாதங்கள் கிடைக்கிறதே. மறுபடி ராஜினாமா-இப்படி சட்டத்தையே கேலிக்கூத்தாக்கி விடலாம் என்கிறார்.

இப்படி ஆளாளுக்கு மண்டையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜெயலலிதா தன் முன்னே இருக்கும் பிரச்சனைகள் பற்றி கவலைப்படுவதாகவே தெரியவில்லை. கவலைப்பட்டாலும் அதை வெளியே காட்டிக் கெள்ளவில்லை. தான் மீண்டும் முதல்வராவது உறுதியென்ற ரீதியில் தான் பேசிவருகிறார்; நடந்தும் கொள்கிறார். எப்படியோ அவரே முதல்வர் என்றுதான் அ.இ.அ.தி.மு.க. பிரச்சாரம் செய்யப் போகிறது. அவர் பயந்து ஒதுங்கிக் கொள்வார், மக்கள் மத்தியில் பொதுவாக நல்ல பெயர் எடுத்திருக்கும் தங்கள் தலைவரை முதல்வராக்க ஒத்துக்கொள்வார் என்ற தமிழ் மாநில காங்கிரசாரின் நப்பாசையில் மண் விழுந்தாகிவிட்டது.

அதோடு நிற்கவில்லை ஜெயலலிதா. ஆட்சியில் பங்கு என்ற பேச்சிற்கே இடமில்லை என்றும் கூறிவிட்டார். தமிழ் மாநில காங்கிரஸ் தான் கூட்டணி ஆட்சி என்று கோரி வருகிறது என்பதை இங்கே நினைவில் கொள்ளவேண்டும்.

"தமிழ் நாட்டு மக்கள் எப்போதுமே ஒரு கட்சி ஆட்சியினைத்தான் விரும்புவார்கள். இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகியவற்றுடன் எங்கள் கூட்டணி தொடர்கிறது. காங்கிரஸ் தலைவர் பிரணாப் முகர்ஜி என்னை எனது இல்லத்தில் சந்தித்து தொகுதிப் பங்கீடு பற்றி பேசி இருக்கிறார். சோனியாவே என்னிடம் இதனைத் தெரிவித்தார். த.மா.கா.வின் நிலை பற்றி நீங்கள் மூப்பனாரிடம்தான் கேட்க வேண்டும். நாங்கள் எப்போதுமே பேச்சுவார்த்தைக்குத்த தயார்," என்றார் ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் பிறந்தநாளன்று.

அதாவது த.மா.கா.வை சேர்த்துக் கொள்ளத்தயார். நான் ஒதுக்கும் இடங்களை ஏற்றுக்கொண்டு அது கூட்டணயில் இடம்பெறலாம் ஆனால் கூட்டணி ஆட்சி என்றெல்லாம் மூச்சு விடக்கூடாது என்பதே ஜெயலலிதா அன்று விடுத்த செய்தியின் சாராம்சம். வாயடைத்துப் போனார்கள் த.மா.கா.வினர். தேர்தல்களுக்கு இன்னும் இரண்டே மாதங்கள் தான் இருக்கின்றன. முதலில் முரண்டு பிடித்தவர், சில வாரங்களாக "நானே ஆட்சி அமைப்பேன்" என்ற முழக்கத்தை நிறுத்தியிருந்தார்.

எது எப்படியிருந்தாலும், மீண்டும் முதல்வராகி, வழக்குகளை வாபஸ் பெறவைக்காவிட்டால் அவரது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். இன்னிலையில் ஒவ்வொரு வாக்கும் அவருக்கு மிகவும் முக்கியம்.

குறிப்பாக தமாகாவின் உற்ற தோழனாக இருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கணிசமான அளவு தலித் மக்களின் ஆதரவைப் பெற்றுத் தருவர். எனவே ஏதோ ஒரு விதமான கூட்டணி ஆட்சிக்கு ஜெயலலிதா ஒத்துக் கொண்டு விடுவார். அ.இ.அ.தி.மு.க. கூட்டணியிலேயே தொடரலாம், என்றுதான் தமாகாவினர் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தனர்.

இப்போதோ எல்லாம் தவறாகிவிட்டது. ஊழல் வழக்குகளில் தண்டனைபெற்று, சிறைவாசத்தை எதிர்நோக்கியிருக்கும் ஓர் அரசியல்வாதி இன்னமும் என் விருப்பப்படிதான் எல்லாமும் என்று கொக்கரிப்பது எங்கணம்? மக்களின் மடமையின்மீது அவ்வளது நம்பிக்கை! அது ஒரு புறமிருக்க, தமாகாவினர் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி முடிவு செய்ய, ஜெயலலிதா அறிவிப்பு வந்த மறுநாளே கூடி ஆலோசித்தனர். வழக்கம்போல எந்த முடிவும் எடுக்காமல், தலைவர் கருப்பையா மூப்பனாருக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கிவிட்டு கலைந்தனர். மூப்பானாரும் வெற்றிலைபாக்கை மென்றுகொண்டு, நிருபர்களின் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்காமல் நகர்ந்துவிட்டார்.

" கட்சிக்குள் ஒரு சாரார், கடுமையான தி.மு.க. எதிர்ப்பு அலை வீசுகிறது. அரசிற்கு எதிரான மக்கள் மனநிலையினைப் பயன்படுத்தி 30,40 இடங்களையாவது சட்டமன்றத்தில் கைப்பற்றுவோம், தேர்தல்களுக்குப் பிறகு தனக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காவிட்டால் ஜெயலலிதாவே கூட்டணி ஆட்சி அமைக்க முன்வருவார். எனவே அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் தொடருவோம்" என்று வாதிட்டிருக்கிறார்கள்.

இன்னொரு சாரார் 'இந்த அம்மாவிடமிருந்து எந்த மரியாதையும் எப்போதுமே நமக்கு கிடைக்காது. மாறாக கலைஞர் எப்போதும் கண்ணியமாக நடந்துகொள்வார், மாநில தேர்தல்களில் மதவாதம் பற்றி பிரச்சனையே எழாது, எனவே அந்தப் பக்கம் போய்விடு வோம்' என்று கூறியிருக்கின்றனர்.

இன்னும் சிலரோ சாதி ரீதியான சில கட்சிகள், புதிய நீதிக்கட்சி, மக்கள் தமிழ் தேசம் மற்றும் விடுதலைச்சிறுத்தைகள் ஆகியவற்றுடன் இணைந்து மூன்றாவது அணி அமைப்போம் என்று கூறியிருக்கின்றனர்.

புது நீதி முதலியார் சாதியினரை அணி திரட்டும் முயற்சி, முன்னாள் அ.இ.அ.தி.மு.க. எம்.பி ஏ.சி. சண்முகம் தலைவர், தமிழ் தேசம் யாதவர்களின் அமைப்பு, முன்னாள் அ.இ.அ.தி.மு.க. அமைச்சர் கண்ணப்பன் தலைவர். இவர்களுக்கெல்லாம் அந்தந்த சாதியினர் வசிக்கும் பகுதிகளில் கணிசமாக கூட்டம் கூடத்தான் செய்கிறது. இவற்றுப்போன்று இன்னும் சில அமைப்புகளும் உருவாகியிருக்கின்றன. அவையும் மூன்றாவது அணி அமைப்போம், த.மா.கா தலைமை தாங்கட்டும் என்கின்றன. மூப்பானார் என்ன செய்யப்போகிறார் என்பது தெளிவாகவில்லை.

'இந்தியா டுடே' என்ற பிரபல ஆங்கில வார ஏடு நடத்திய கருத்துக் கணிப்பு- அ.இ. அ.தி.மு.க.விற்கு இப்போது ஏறுமுகம்தான். கணிசமான தொகுதிகளில் வெற்றிபெறும், ஆனாலும் தி.மு.க. எதிர்ப்பு அலை ஏதும் வீசவில்லை என்றுதான் கூறுகிறது.

வெற்றி வாய்ப்பு தனக்கிருப்பதாக அவர் நம்ப வேறொரு காரணமும் இருக்கலாம். பாட்டாளி மக்கள் கட்சி அணி மாறலாம் என்ற சூழலும் இருக்கிறதே. தொடர்ந்து வதந்திகள், "ராமதாஸ் ஜெயலலிதாவுடன் பேரம்பேசி முடித்துவிட்டார்" என்று.பாண்டிச்சேரியில் பா.மா.கா.தலைமையிலான அரசிற்கு அவர் ஒத்துக் கொண்டு விட்டார் என்று கூறப்படுகிறது. பா.ம.க., அ.இ.அ.தி.மு.க. அணி பக்கம் வந்தால் வடமாவட்டங்களில் அதனுடைய வெற்றி வாய்ப்புக்கள் பிரகாசமாகத்தான் இருக்கும்.

ஆனால் பாமாகா வந்துவிட்டால், அது விடுதலைப்புலிகளின் ஆதரவு கட்சி என்பதால் காங்கிரசும், த.மா.கா.வும்-ஏன் கம்யூனிஸ்டுகளும் கூட வெளியேறிவிடலாம் என்ற ஆபத்தும் இருக்கிறதே.

அதைப்பற்றியெல்லாம் ஆய்வாளர்களுக்குத்தான் கவலை. ஜெயலலிதாவைப் பொறுத்தவரை- தாம் வெற்றி பெற்று விடுவோம் என்ற எண்ணமே அவரை முழுவதுமாக ஆக்கிரமித்திருக்கிறது.

**கானகன்**

---

# பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

"கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்."

அண்ணர் ஈஸ்வரனாற்ர வீரவிளையாட்டை- வீராப்பான பேச்சைத் தான் குறிப்பிடுகின்றேன்.

"யாழ் மக்களின் துயரங்களுக்கு முடிவு கட்டாவிட்டால் ஐ.நா. சபைவரை எடுத்துச்செல்ல தயங்கமாட்டேன்!" யாழ் மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் மகேஸ்வரன் எண்டு கொட்டை எழுத்தில் வந்த செய்தியை பார்த்தேன்.

உவர் உப்பிடி பல விளையாட்டுக்களை தொடர்ந்து விளையாடப் போறார் போல தான் கிடக்கு. உப்பிடித்தான் முந்தி இவர் மாட்டுக்காரவேலன் எம்.ஜி.ஆர். மாதிரி வேட்டிய சிரச்சுபிடிச்சபடி 'டியோ, டியோ, டியோ டுர்ர்ர்' எண்டு மாட்டுச் சவாரி விட்டுக் கொண்டு பாளிமன்ட் சந்தியில இருந்து பாராளுமன்றம் வரைக்கும் போனவர். இப்ப என்னடா எண்டா மாட்டு சாணகமுத்திரமணம் தாங்கேல்ல எண்டுபோல பத்திரமா ஏ.கே.வாகனத்தில ஓடித்திரியிறார். ரீ.வி.க்காரரும் பேப்பர்காரரும் படம்பிடிச்சு செய்தி போட்டதோட அண்ணற்ர போராட்டம் முடிஞ்சுபோச்சு.

அதுக்கு முன்னால இன்னொரு வீரவிளையாட்டும் விளையாடிப் போட்டார். எலக்ஷனில எம்.பி.யாக வர யானைச் சின்னத்தில வாக்குக்கேட்டவர் தான் கொடுத்த வாக்குறுதியை தலைமையிடம் கோட்டைவிட்டுப்போட்டார்.

'அடுத்த ஆட்சி எங்கடதுதான் எப்படியும் ஒரு ஓட்டமோடி விட்டதைப் பிடிக்கலாம்' எண்டு காசைவிசுக்கி வாக்குக்கேட்டவர் கொடுத்த வாக்குறுதியை காத்தில விட்டுட்டார். அவசரகால சட்டத்துக்கு எதிராக போராடி 'இல்லாமல் செய்வேன்' எண்டு கூத்தாடிப் போட்டு இப்ப மாசா மாசம் பாராளுமன்றத்தில விவாதநேரம் அண்ணர் சூடாத்தான் பேசறார். ஆனால் வாக்கெடுப்பு வரேக்க வாலைச் சுருட்டிப்போடுறார்.

கேட்டால் கட்சிக் கட்டுப்பாடாம். ஏதோ இவர் ஆரம்ப காலத்தில் இருந்தே கட்சி உறுப்பினர் மாதிரியும், கட்சியின் கொள்கை கோட்பாடுகளை தாங்கிப் பிடிக்கிறவர் மாதிரியும் தன்னிலை விளக்கம் கொடுக்கிறார். உவரால் சாதிக்க முடிஞ்சதெல்லாம் யூ.என்.பி.க்கு ஒரு சீற்றை யாழ்ப்பாணத்திலையும் கிடைக்கப் பண்ணினது தான். அதுக்காக எண்டாலும் தலைமை இவரை சுதந்திரமாக செயல்பட விட்டிருக்கவேண்டும். பொதுவாக போட்ட கட்டுப்பாட்டில் பெட்டிப் பாம்பாக அடங்கி அண்ணர் அவசர கால சட்ட விவாத வீராப்பு பேச்சோடை யும், விசர்தனமான, விளக்கம் கெட்ட அறிக்கைகளோடையும் சரி. வாக்களிப்பு நஹி.

தாங்கள் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் பிரதிநிதிகளை கொண்ட கட்சி என்று ரணில் மார்தட்டிக்கூற காரணமான மகேஸ்வரனாருக்கு தலைவற்ர தலையில தட்டி எதிர்த்து வாக்களிக்கமட்டும் முடியாமக்கிடக்குது. இந்த சீத்துவத்திலதான் அவர் ஐ.நா. சபைக்கு போகப்போகிறாராம்.

ஏதோ குருடன் பெண்டிலுக்கு அடிச்சமாதிரி கிடைச்ச பதவியைகூட தலைமையிடம் அடிபணியச் செய்தவர் இப்ப ஐ.நா. சபை பற்றி பிதற்றுகிறார்.

மக்களின் கஷ்டங்களைப்பார்த்து இப்ப முதலைக் கண்ணீர் விடுகிறவர் கடந்த ஆறு வருடங்களாக அந்த நிலைமைய தனக்கு சாதகமாக்கித்தான் மகாலச்சுமியை மடிநிறைய கட்டி கோடி கோடியா சேர்த்தவர். விலைகளை கூட்டிவித்தது, கிடைச்சது எல்லாத்தையும் இப்ப நினைக்கமாட்டார்தான். ஏனெண்டா இப்ப அவர் மக்கள் பிரதிநிதி.

இப்படிப்பட்ட பிரதிநிதிகள் முந்தியும் பாராளுமன்றத்தில இருந்தவ. வீரவசனங்கள், வாய்ச்சவால்கள் எல்லாம் விட்டு போட்டு பிறகு பின் கதவால தங்கட, தங்கட ஆக்களின்ர வேலைகளை சுலபமாக பிடரியை சொறிஞ்சபடி "சொறிசேர் அந்த பேச்சுக்கள், சவால்கள் எல்லாம் உங்களுக்கெதிராக இல்லை; எங்கட மக்களைப் பேக்காட்டத்தான்!" எண்டு கூறி செய்விச்சுப்போடுவினம்.

கடைசியாக பொங்குதமிழ் பற்றியும் அண்ணர் பொங்கியிருக்கிறார். 'கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுதல்' எண்டுறது உதைத்தான்.

இதுக்குள்ள இன்னொரு விசயத்தையும் எழுதவேணும்.

'ஆய்.... ஒய்.... மீனாட்சியின் எலிகள் பட்டாளம். அங்கும் இங்கும் ஒடி ஒடி ஒரே கும்மாளம். வாலறுந்துபோனாலும் வம்புகளில் தாராளம்....' எண்டு ஏ.ஈ. மனோகரன் பாடிய பொப்பாடல்தான் நினைவிற்கு வருகிறது. பல எலி சேர்ந்தால் புத்துக்கு மண் எடுக்காதென்பார்கள். அது சரியோ பிழையோ எனக்கு தெரியேல்ல.

பல கட்சிகளை கூட்டிக்கொண்டு முதல்வர் எலி அடிக்கும் கூத்தைத்தான் குறிப்பிடுகிறேன். 'ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி வள்ளி' எண்டு சொல்லிப் போட்டு பெஞ்சாதி பிள்ளையளை பெரிய கண்டமொண்டில் செட்டிலாக்கிப் போட்டு இஞ்ச எப்படியெண்டாலும் பாராளுமன்றத்துக்குள்ள புகுந்து விடவேண்டும் எண்டுதான் பலவிதமான புலுடாக்களை விட்டுக் கொண்டு திரியிறார்.

முந்தி அண்ணர் அமிர்தலிங்கம் மாதிரி பேசி வாக்குக் கேட்டு தோத்தவர் இப்ப அவர்மாதிரி காரசாரமாக, திட்டவட்டமாக, சுடச்சுட ரி.வி.க்கும் பேப்பருக்கும் பேட்டி கொடுக்கிறத பாக்கேக்க கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி செய்த செயல்தான் ஞாபத்திற்கு வருகுது.

பதவி அரசியல் எண்டா மட்டும்தான் அவர் பாஞ்சு ஓடுவார்போல. முந்தியும் மாகாணசபை தேர்தலில் கலந்து கொள்ளாம இருந்துபோட்டு பிறகு பின் கதவால வரப்பாத்தவர். இவருக்கு மாகாணசபை தலைவர் பதவியை கொடுக்க பெருமாள் அருள் பாலிக்காததால "சீச்சீ இந்தப் பழம் புழிக்கும்" எண்டு போனவர்.

உள்ளுக்குள்ளையும் தன்னை மற்றவர்கள் முக்கியத்துவப்படுத்தாத வேளையில் விட்டுட்டு போகப்போறன் எண்டு வெருட்டுறதும் "அண்ணர் நீங்க அப்படி செய்யக்கூடாது" எண்டு செல்வத்தார் சமாதானப்படுத்துவதும் சர்வசாதாரண நிகழ்ச்சி. ஆனால் இப்ப செல்வத்தாரும் துணிஞ்சிட்டாப்போல. அவரோட இப்ப முகமதுவின்ர கனி இருக்கிறதால மொழிப்பிரச்சனை இல்லை எண்டு பலரையும் தனியே முதல்வரை விட்டுவிட்டு சந்திக்கத் தொடங்கிட்டார். எத்தனை நாளைக்குத்தான் முதல்வற்ற பயறு அவியும்.

எல்லாக் கட்சிகளையும் கூட்டிப் போட்டு தான் மட்டும்தான் தலைமை தாங்கவேண்டும், கருத்துச் சொல்ல வேண்டும் எண்டு இவற்ற நிலைப்பாட்டை அடிக்கடி பத்திரிகையாளர் மாநாட்டில் பார்த்து பார்த்து புளிச்சுப்போச்சு.

இடையால யாராவது மற்ற கட்சி தலைவர் ஏதாவது கருத்தை புலிகளை முன் நிலைப்படுத்தி சொல்லிப்போட்டா முதல்வற்ற விலாசம் உடனடியாக வெளிப் பட்டுவிடும். அண்மையில் அவ்வாறான கருத்து காங்கிரஸ் எம்.பியால முன்வைக்கப்பட்டபோது முதல்வர் விழுந்தடிச்சு "இஞ்ச கூடி இருக்கிற எங்களுக்கு பல விடயங்களில ஒத்தகருத்து இல்லை. சில விசயங்களை மட்டும்தான் ஒற்றுமையா செய்ய முற்படுகிறம்" எண்டு தங்கள் இரண்டும்கெட்டான் நிலையை பகிரங்கப் படுத்திப்போட்டார்.

'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி' வாய்ச்சவடால் விடும் இவர்களைத்தான் நம்பி நடுத் தெருவில் நிற்கிறது நம் இனம். இவர்களுக்கு தெரிந்ததெல்லாம் கூட்டத்தில் கூடி நின்று கூவிப்பிதற்றல் மட்டும்தான்!

**~குத்தியன்~**

# அலசுவது - இராஜதந்திரி

# புலிகளைத் தடைசெய்யுமாறு கோரிக்கை:

## நோர்வேயின் நட்பு நாடான பிரிட்டன் இணங்குமா?

இலங்கை இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான அரசியல் நடவடிக்கைகளில் சர்வதேச சமூகத்தின் கரிசனை அதிகரித்து வரும் இத்தருணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு பிரிட்டனிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிக்கும் விதத்தில் பிரிட்டன் விரைவில் புதிய சட்டங்களைக் கொண்டுவரவுள்ளதாக செய்திகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. இதனையடுத்தே இலங்கை அரசு, குறிப்பாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டனிடம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகள் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து சந்திரிக்கா அரசு, மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் முறையில் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்யுமாறு பிரிட்டனிடம் கோரிக்கை விடுப்பதன் மூலம் இலங்கையின் ஆட்சியாளர்கள் எதனைச் சாதிக்க நினைக்கின்றனர்? இக்கோரிக்கையின் பின்னணி யாது? என்பவை கோள்விக்குரியவையாகவே இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த டிசம்பர் மாதம் 24ம் திகதி ஒரு தலைப்பட்சமான முறையில் யுத்த நிறத்தமொன்றை அறிவித்திருந்தனர். இந்த யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியானதையடுத்து அரசியல் நடவடிக்கைகள் துரிதமடையலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறான விதத்திலேயே யுத்த நடவடிக்கைகள் முறுக்கேறியுள்ளன.

புலிகளது ஒருதலைப்பட்சமான யுத்த நிறத்த அறிவிப்பு வெளியான கடந்த ஒரு மாத காலத்தில் தென்மராட்சியில் இடம்பெற்ற 'கினிஹிர' இராணுவ தற்சமயம் புலிகளைத் தடைசெய்யுமாறு பிரிட்டனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச அரங்கில் பிரிட்டன் அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியாக மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனுக்கு எதிராக உலக அரங்கில் எந்தவொரு நாடும் இயங்கி வருவதாக இல்லை. வல்லரசுகள் என்ற அந்தஸ்த்தில் இருக்கும் உலக நாடுகள் பலவும் பிரிட்டனின் நேசநாடுகளாகவே இருக்கின்றன.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் நோர்வே நாட்டின் கடல் பகுதியை அண்டிய பிரதேசத்தில் ரஷ்யாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலொன்று ஆழ்கடலில் விபத்துக்குள்ளாகியிருந்தது.

இந்த விபத்தையடுத்து மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய வல்லமையின்றி ரஷ்யா காணப்பட்டது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பட்சத்தில் நோர்வே மட்டுமல்ல, பிரிட்டன் கூட அரசியல் தீர்வு நடவடிக்கைகளில் அதீத ஆர்வத்தை வெளிப்படுத்தி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

அண்மைக் காலங்களில் இலங்கை வந்திருந்த பிரிட்டனின் முக்கிய அரசியல் புள்ளிகளான லியாம் பொக்ஸ், பீட்டர் ஹெய்ன் ஆகியோர் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக எடுத்துக் கொண்ட நிலைப்பாடுகளை கவனத்தில் கொள்வது அவசியமானதாகும்.


திரு.லியாம் பொக்ஸ் சந்திரிக்கா அரசு ஐந்து வருடங்களுக்கு முன்னர் முதல் தடவையாகப் பதவிக்கு வந்த காலகட்டத்தில் கொழும்பு வந்திருந்தார்.

அப்போது அவர் இலங்கையின் பிரிட்டனின் உதவியைக் கூட சமரச முயற்சிகள் தொடர்பாக நோர்வே எதிர்பார்ப்பதையுமே திரு.பீட்டர் ஹெய்ன் கொழும்பு வந்திருந்த போது வெளியிட்ட கருத்துக்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது.

எனவே நோர்வே, பிரிட்டன் ஆகியன தமிழீழ விடுதலைப் புலிகளோடு இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தி அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முன்வர வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இக்கட்டத்தில் பிரிட்டிஷ் அரசிடம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு கோரிக்கை விடுத்து வரும் இலங்கை அரசின் நிலைப்பாடு ஆச்சரியத்துக்குரியதாகவும், வேடிக்கையானதாகவுமே இருக்கின்றது.

அண்மைக்காலங்களில் நோர்வே,





இயக்கம் ஆகியன சமரசப் பேச்சக்களை நடத்துவது தொடர்பாகப் பரஸ்பரம் சாதகமான கருத்துக் கண்ணோட்டங்களையே வெளியிட்டிருந்தன.

சமரச முயற்சிகளில் இறங்கியுள்ள நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இலங்கை அரசு, மற்றும் புலிகளின் அரசியல் தீர்வு குறித்த நிலைப்பாடுகளை வரவேற்றிருந்ததுடன், கொழும்பு, லண்டன், ஒஸ்லோ நகரங்களுக்கிடையே அடிக்கடி சஞ்சரித்து தமது சமரச முயற்சிகளையும் மேற்கொண்டு வருபவராக இருக்கின்றார்.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டிஷ் அரசிடம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு கோரியிருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமாகவே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக ஓர் அரசியல் தீர்வை எட்ட முடியாதென்பதை இலங்கையில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவை மட்டுமல்ல, பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட, ஆசனங்களைக் கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளுமே தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் அவசியமென்பதை வலியுறுத்தி வருபவையாகவே இருக்கின்றன.

அண்மைக் காலங்களில் தமிழ் அரசியல் கட்சிகள் கூட வடக்கு-கிழக்குப் பிரச்சனையில் புலிகள் நிராகரிக்கப்படமுடியாத ஒரு சக்தியாக மாறியுள்ளார்கள் என்பதை ஏகோபித்த நடவடிக்கைகளில் இரு தரப்பிலுமே நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகியிருப்பதுடன் மேலும் நூற்றக்கணக்கானவர்கள் படுகாயங்களுக்குமுள்ளாகியுள்ளனர்.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமரச நடவடிக்கைகள் என்ற ரீதியில் புதிய தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இடம்பெற்று வரும் மோதல்கள் அநாவசியமான உயிரிழப்புக்களுக்கே இடமளிப்பவையாக இருக்கின்றன.

புலிகள் அறிவித்த யுத்த நிறத்தத்தை சந்தேகக் கண்ணோடு நோக்கிய இலங்கையின் ஆட்சியாளர்கள், ஆரோக்கியமான விதத்தில் அரசியல் பேச்சுக்கள் முன்னேற்றமடையும் பட்சத்திலேயே தம்மால் யுத்த நிறுத்தமொன்றுக்கு உடன்படுவது பற்றிப் பரிசீலிக்க முடியுமெனத் தெரிவித்திருந்தனர்.

யுத்தநிறுத்தத்தை புலிகள் தமது விருப்பத்துக்கமைய அறிவித்ததைப் போல, அரச தரப்புக்கு அந்த யுத்த நிறுத்தத்தை நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ பூரண உரிமையுண்டு. ஏனெனில் புலிகள் அறிவித்த யுத்த நிறுத்தமென்பது அவர்களது தனிப்பட்ட முடிவாகும். அரசதரப்புடன் இணங்கிய நிலையிலோ அல்லது மத்தியஸ்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நோர்வேயின் வேண்டுகோளின்படியோ உத்தியோக பூர்வமாக யுத்தநிறுத்தமெதுவும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே புலிகளது யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்காவிடினும், அந்த அறிவிப்பின் மூலம் வெளிப்பட்ட அரசியல் தீர்வுபற்றிய சமிக்ஞையை அரசு சாதகமான முறையில் ஏற்றுக் கொண்டுள்ளதா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

ஏனெனில் ஆரோக்கியமான பேச்சுவார்த்தைகளையே புலிகளிடமிருந்து எதிர்பார்ப்பதாக அறிவித்துள்ள சந்திரிக்கா அரசு, நாடுகளுக்கும் இவற்றோடு நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளுக்கும் ஏட்டிக்குப் போட்டியாகவே ரஷ்யா இருந்து வந்தது.

ஆனால் தற்போது ரஷ்யா ஒரு பலவீனமான நிலையில் இருந்துவருகின்றது.

எனவே அதன் அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் ஆழ்கடலில் விபத்துக்குள்ளாகி, அதிலிருந்த 600 பேர்வரையிலான கடற்படைச் சிப்பந்திகள் உயிரிழந்தபோது, செய்வதறியாத ரஷ்ய அரசு பிரிட்டனிடமும், நோர்வேயிடமுமே உதவிகோரியிருந்தது.

இதனையடுத்து நவீன நீர்மூழ்கிக் கப்பலொன்றை மீட்பு வேலைகளுக்காக பிரிட்டன் அனுப்பிவைத்தது. நோர்வே தனது கடற்படையின் சுழியோடிகளை நவீன சாதனங்கள் சகிதம் மீட்புப் பணிகளுக்காக பிரிட்டனுடன் ஒத்துழைக்க அனுமதித்திருந்தது.

இறுதியாக நோர்வே நாட்டின் சுழியோடிகளே அந்த அபாயகரமான ரஷ்ய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலினுள்ளே சென்று அதனுள்ளிருந்த கடற்படைச் சிப்பந்திகள் இறந்திருந்ததை உறுதிப்படுத்தியிருந்தனர்.

கடந்த ஆண்டில் பூகோளத்தின் வடகடல் பகுதியில் இடம்பெற்ற இந்த நடவடிக்கை பிரிட்டனுக்கும், நோர்வேக்குமிடையிலான நெருக்கத்தையும், அவற்றின் தொழில்நுட்பத் திறனையும் மட்டும் வெளிக்காட்டவில்லை.

சர்வதேச விவகாரங்கள் எத்தகையதாகினும் அவற்றில் ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கக் கூடிய வல்லமையை மேற்படி இரு நாடுகளும் கொண்டுள்ளன என்பதையும் அந்த வடகடல் நீர்மூழ்கி விவகாரம் எடுத்துக்காட்டியிருந்தது.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்சனையை எடுத்து நோக்கும் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் பிரிட்டனை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு வட அயர்லாந்துப் பிரச்சனை கையாளப்படும் பாணியில் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்சனையையும் கையாளுமாறு வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் இலங்கையின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றுக்கிடையே வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக கருத்தொருமிப்பைக் கொண்டிருக்கச் செய்யும் விதத்தில் தமது பெயரைக் கொண்டதாகவே உடன்படிக்கையொன்று ஏற்படவும் திரு.லியாம் பொக்ஸ் வழிவகுத்திருந்தார்.

வடக்கு-கிழக்கு பிரச்சனை அரசியல் ரீதியாவே தீர்க்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்திய திரு.லியாம்-பொக்ஸ் அப்பிரச்சனையோடு சம்பந்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியான பேச்சுக்களில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பமளிக்கப்படவேண்டுமென்பதையும் வலியுறுத்தியிருந்தார்.

இது தவிர கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் கொழும்புக்கு வந்திருந்த பிரிட்டனின் துணை வெளிவிவகார அமைச்சர் பீட்டர் ஹெய்ன் கூட வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக துணிச்சலான மற்றும் ஆணித்தரமான கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் ஆரோக்கியமான முறையில் இடம்பெற வேண்டுமென அவர் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் நோர்வே நாட்டின் மத்தியஸ்த நடிவடிக்கைகளுக்கு பிரிட்டன் மனப்பூர்வமான முறையில் தனது ஆதரவை வழங்குமெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை நோர்வே இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த மத்தியஸ்த நடவடிக்கைகள் தொடர்பாக பிரிட்டனுக்கு அவ்வப்போது விளக்கமளித்து வருவதையும், பிரிட்டன் ஆகியவற்றின் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த ஆர்வத்தின் வெளிப்பாடு அதிகரித்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதன் மூலம் சமரச முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்க பிரிட்டன் முன்வராது என்றே எதிர்பார்க்க முடிகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடையைக் கொண்டு வரும் உத்தேசம் பிரிட்டனிடம் காணப்படுமானால், அதுபற்றி இலங்கை இனப்பிரச்சனை பற்றிய மத்தியஸ்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நோர்வேயுடன் பிரிட்டிஷ் அரசு கலந்தாலோசனைகளை நடத்தியே தீரும் எனக்கருதலாம்.

ஏனெனில் தான் எடுக்கும் முடிவுகளின் மூலம் நட்பு நாடான நோர்வேயின் சமாதான முயற்சிகளைக் களங்கப்படுத்த அரசியல் முதிர்ச்சி பெற்ற பிரிட்டன் ஒரு போதும் முன்வரமாட்டாது.

இதேவேளை நோர்வே இலங்கையின் சமரச முயற்சிகள் தொடர்பாக பின்னடைவுகள் எதுவும் ஏற்படலாகாது என்பதிலேயே அவதானமாக இருக்கின்றது.

எனவே பிரிட்டன், நோர்வே ஆகியவற்றின் அரசியல் பின்னணி, அவை இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக வெளிப்படுத்தி வரும் தெளிவான, அப்பழுக்கற்ற அரசியல் அணுகுமுறைகள் என்பவற்றை இலங்கை அரசு நன்கறிந்திருக்குமென்றே கருத முடியும்.

இந்நிலையில் பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு விடுக்கப்படும் கோரிக்கை மதியுகமற்றதொன்றாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**முன்னாள் தமிழக** முதல்வர் எம்.ஜி.ஆர். தமது அமைச்சரவை பற்றி இப்படி வர்ணித்ததாக கூறுவதுண்டு: "நான் மட்டுமே ஒன்று. என்னுடன் இருப்பவர்கள் எல்லாம் பூஜ்யங்கள். ஒன்றுடன் பூஜ்யங்கள் சேருவதால் பெறுமதி கூடும். எனது சமவணைப்பிலிருந்து வெளியேறும் அனைவரும் வெறும் பூஜ்யங்களாகிப் போவார்கள்." என்பது தான் அது. இங்கு எல்லாப் பூஜ்யங்களையும் ஒன்று கூட்டி தான் மட்டுமே ஒன்றாக முயலும் இரும்பைக் கவரும் பெயருடைய முதல்வரின் பிடியிலிருந்து மெல்ல நழுவி விட்டாராம் சித்தர்.

**அரசியலில் தொழில் ஆண்மை** பற்றி இரு தினங்கள் போதனை செய்தனர், முன்னாள் காலனித்துவ ஆட்சியாள பிரதிநிதிகள். இந்தப் போதனையில் பங்கேற்க இளம் புரட்சியாளர்கள் மறுத்து தமது 'வீரத்தை' வெளிப்படுத்தினர். "ஜனநாயக ரீதியாகப் போராடுவது எப்படி என்பதைச் சொல்லித் தாங்கோ?" என்று விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர். போராடுவது எப்படி என்று ஆலோசனை கூற வரவில்லை. மாறாக பயங்கரவாதத்தை ஜனநாயக வரம்புக்குள் கட்டுப்படுத்துவதே நல்லது என்று வெள்ளையாகப் பதிலளிக்கப்பட்டது.

**சந்தன மரக் கடத்தல் புகழ்** 'வீரப்பன் ஒரு தமிழ்த் தியாகி' எனக் குறிப்பிட்ட பிரசுரங்கள் விநியோகித்தமைதான் ஆளணி, அம்பு, வில்லு எதுவுமில்லாத 'வேந்தன்' அயலகத்திலிருந்து நாடு கடத்தப்படக் காரணமாம்.

**நோர்வேயின் விசேட தூதுவரின்** சமாதானப் பயணம் போல லண்டனிலிருந்து கோஷ்டிச் சண்டைகளுக்கு சமாதானம் காண விசேட தூதுவர்கள் கனடாவுக்கு அனுப்பப்பட்டனவாம். பணம் செலவானது தான்; பயன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.


**பச்சைப் பொய் கூறும்** பிரசுரங்கள் சில வடக்கில் தலைகாட்டியுள்ளன. தத்தம் செல்லப் பிராணிகளுக்கு இடம் கொடுத்த வாசகங்கள் ஒரு 'தவத்'தின் அருட்கொடை. 'மகா ஈஸ்வர' உபயத்தில் தலைகாட்டிய இப் பிரசுரங்கள் யாழ்ப்பாண காற்றில் அடிபட்டுப் போயுள்ளன.

**அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து** ஆவேசமாகக் குரல் கொடுக்கும் சிலர், அதே சட்டத்தின் கீழ் தமக்கு ஆயுதங்கள் தரும்படி பின் கதவுகள் வழியாகக் கோரிக்கை விடுகின்றனராம்.

**"பிரிட்டன் அரசு தயாரிக்கவுள்ள** பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் அவையளைச் சேர்க்கக் கூடாது" என்று பத்தோடு பதினொன்றாகக் குரல் கொடுக்கினமாம். இவையளை தடை செய்த அவையின் கட்டளை இன்னமும் அமுலில் தானே இருக்கிறது என்கிறார் ஸ்ரீமான் பொதுசனம்.

**ஆளுநர் கூட்டிய அபிவிருத்தி** மாநாட்டில் அமைச்சரின் பிரதிநிதியாக ஆனைமுகனின் பெயருள்ளவருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. ஆனந்தமான இச் சங்கதியால் ஆத்திரப்பட்ட மூத்த உப தலைவர் எதிர்ப்புக் குரல் கொடுத்துப் பார்த்தார். ஆனாலும் என்ன? கண்டு கொள்ளப்படாத எதிர்ப்பு புஸ்வாணமாகிப் போனது.

திகில் தொடர்





திகில் கதை மன்னன்

பி.டி.சாமி

வாடிப்போயிருந்த அந்த நிலையிலும் அவள் அழகிதான்!

"என்ன விஷயம் யோகேஷ்?"

"நான் சொல்லப் போவது எல்லாருடைய உயிருக்கும் பாதுகாப்பான அம்சமாகும்."

பீடிகையே எச்சரிப்பது போல் இருக்கவே பட அதிபர் உற்சாகம் குன்றி மிரண்டார்.

"பாதுகாப்பா?"

"ஆமாம்... வாட்ச்மேன் சம்பூர்ணனிடம் நான் பேச்சுக் கொடுத்து பல திடுக்கிடும் அபாயமான விஷயங்களை தெரிந்து கொண்டேன்."

"வாட்ச்மேன் கிழவனா? அவன் ஏதாவது தப்பு தப்பா உளறியிருப்பான். ஒரு சாதாரண வேலையாளை பற்றியெல்லாம் பேசலாமா? நம்மோட மதிப்பு என்னாவது?"

பட அதிபருக்குக் கர்வம் காரணமாக எரிச்சல் ஏற்பட்டது.

"மதிப்பு இருக்கட்டும். அவன் சொன்ன பேய் எச்சரிக்கை அலட்சியப்படுத்தக் கூடாது. ஹீரோ ஆக்டர் சிவப்பிரகாஷ் மரணத்துக்கும், வெறித்தனத்துக்கும் அவன் சொல்லுகிற பேய் ஒரு காரணமாகவும் இருக்கலாம்."

"பேய், பிசாசு என்று நீங்கள் நம்புறீங்களா?"

"நான் கூட பேய் என்றாலே கேலியாகச் சிரிக்கக் கூடியவன் தான்! ஆனால், இங்கே நடந்திருக்கும் கெட்ட நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது நம்பாமலும் இருக்க முடியவில்லை."

பட அதிபர் தலையை தொங்க விட்டபடி பைப்பை எடுத்து உதடுகளால் கவ்விக் கொண்டு சிகார் நெருப்பில் பற்ற வைத்து 'உப்.. உப்ப்....' என்று புகைத்தார். யோகேஷ் சொன்னதைக் கேட்டு தீவிர சிந்தனை வயப்பட்டார்.

'யோகேஷ் கூறுவதை அலட்சியப்படுத்தாதே,' என்றது மனம்.

"வாட்ச்மேன் உங்களுடைய சினிமா பட யூனிட் வந்து இறங்கியவுடனேயே பேய் பற்றி எச்சரித்தானா?" என்று கேட்டான் யோகேஷ்.

"ம்..எச்சரித்தான். அறுபதுக்கு மேல் கிறுகிறுப்பு என்று நினைத்து அலட்சியப் படுத்தி விட்டேன்."

"பரவாயில்லை. நம்மோட யூனிட்டை சார்ந்த யாருமே இனி மங்கள விலாஸ் பக்கமே போக வேண்டாம்."

"போகாமல்?"

"என்னோட நண்பர் தீர்த்தகிரி லேட்டஸ்ட் பாஷனில் 'ஹோட்டல் ஹாலிடே' என்ற பெயரில் லாட்ஜ் கட்டியிருக்கிறார். காட்டேஜ் உட்பட எல்லா வசதிகளும் உண்டு. நீச்சல் குளம் உண்டு. பார் அட்டேச்டு. மினி தியேட்டர், மசாஜ் கிளப், டான்ஸ் ஹால் கூட உண்டு. அங்கேயே தங்குவது பாதுகாப்பு."

பட அதிபர் அவன் சொன்ன 'ஹோட்டல் ஹாலிடே'யை நினைத்துக் கொண்டார். அது ஸ்டார் அந்தஸ்துள்ள தங்கும் ஹோட்டல் தான்!

"ஒக்கே மிஸ்டர் யோகேஷ்....

உங்க விருப்பப்படி நாம் அங்கேயே தங்கலாம்," என்றார் பட அதிபர்.

ஹோட்டல் ஹாலிடே!

இரவு நேரத்தில் அதன் ஒவ்வொரு எழுத்துக்களுமே வானவில்லின் ஏழு நிறத்தில் பளீரென்று பிரகாசித்தன.

பட அதிபரும் யோகேஷும் முன்நின்று அங்கேயிருந்த எல்லா காட்டேஜ்களையும், முக்கியமான அறைகளையும் பதிவு செய்து கொண்டனர்.

படப்பிடிப்பு குழுவினர் எல்லாருமே அவரவர் தகுதிகளுக்கேற்ப தங்க வைக்கப் பட்டனர்.

டைரக்டர் வசீகருக்கும், அவருடைய உதவி இயக்குனர்களுக்கும் ஒரே காட்டேஜ் ஒதுக்கப்பட்டது.

அதை போலவே நடிகை ரத்னாவுக்கும், தாயார் சவுந்திரவல்லிக்கும் தனி காட்டேஜ்.

உள்ளூர்வாசியான யோகேஷுக்கு என்று தனியாக எதுவும் இல்லை.

இரவில் எல்லாரும் ஹாலினுள் கூடினர்.

வீடியோ புகைப்படக்காரர் சுகவதனம் வீடியோவில் எடுத்திருந்த காட்சிகளை சின்னத் திரையில் போட்டுக் காட்டினார்.

ரத்னா, பட அதிபர், யோகேஷ் மற்றும் டைரக்டர் உட்பட அனைவரும் பார்த்தனர்.

முதல் கதாநாயகனான சிவப்பிரகாஷ் ரத்னாவுடன் ஆடிப்பாடியவாறே ஏரியில் மூழ்கியதும், ரத்னா மீட்கப்பட்டதும், சிவப்பிரகாஷ் உடல் சவமாக எடுத்து வரப்பட்டதும் தெரிந்தன.

தொடர்ந்து இடம் பெற்றிருந்த நடனக் காட்சிகளும் திரையில் விரிந்தன.

எல்லாவற்றையும் மிக உன்னிப்பாக கவனித்து கொண்டிருந்த யோகேஷ் பார்வையில் குறிப்பாக ஓரிடம் கவனத்தை ஈர்த்தது.

ஷூட்டிங் நடைபெற்றபோது ஆரம்பத்தில் லயம் பிசகாமல் சிவப்பிரகாஷும், ரத்னாவும் ஒழுங்காகவே ஆடிப்பாடி நடித்து, கட்டிப்பிடித்து கொண்டு உருண்டனர்.

ஓரிடத்தில்...

மனித மண்டை ஓடு ஒன்று, உதிரி அரளிப் பூக்களின் நடுவே வாயைப் பிளந்தபடியே தெரிந்தது. அதன் பக்கத்தில் கொழுத்தக் கருப்புப்பூனை ஒன்று இரு துண்டுகளாக வெட்டப்பட்டு கிடந்தது.

மாந்திரீக வேலை நடந்ததற்கான அறிகுறி.

பார்த்ததும் திடுக்கிட்டான் யோகேஷ்.

ரிப்போர்ட்டர் யோகேஷ் வீடியோ காட்சிகளைப் பார்த்து அதிர்ந்த போதிலும், படத்தில் சம்பந்தப் பட்ட கதாநாயகி மற்றும் அனைவரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்ததால் தன் அதிர்ச்சியை காட்டிக் கொள்ளவில்லை.

தற்போது பட அதிபர் கூட எதுவும் தெரிந்து கொள்ள வேண்டாம். தனியாக இருக்கும் போது சொல்லலாம்.

ரத்னா எந்தவித சலனமும் இன்றி அமைதியாக காட்சிகளை பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் பாடி ஆடிக் கொண்டே, முன்னாள் கதாநாயகனுடன் ஏரிக்கரைச் சரிவில் உருண்டு கொண்டே வந்து தண்ணீரில் விழுந்து நீச்சல் தெரியாமல் மூழ்கியதும், அந்த விபத்தில், தான் யோகேஷால் காப்பாற்றப்பட்டதும், அவன் உயிர் பிரிந்த நிலையில் எடுத்துக் கொண்டு வரப்பட்டதும் மனதில் கிலியான பாதிப்பை உண்டு பண்ணியிருந்தது.

ஆனால், மண்டை ஓடு, அரளிப் பூக்கள், வெட்டிப் போடப்பட்ட கருப்புப் பூனை ஆகியவற்றை கவனித்ததாகத் தெரியவில்லை.

வீடியோ காட்சிகள் முடிந்ததும், சிவப்பிரகாஷ் அகால மரணமடைந்ததை நினைத்து எல்லாரும் கண்கலங்கினர்.

வீடியோ காட்சிகள் முடிவடைந்ததும் கதாநாயக நடிகன் சிவப்பிரகாஷின் அகால மரணத்துக்காக எல்லாருமே இரக்கப்பட்டனர்.

சிலருடைய கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்து பொங்கி கன்னங்க்ளில் கோடுகளாக வழிந்த வண்ணம் இருந்தது.

ரத்னாவுக்கு நிலைமை மிகவும் தெளிவாகப் புரிந்தது. தன்னுடைய அத்து மீறிய செயல்கள் காரணமாகத்தான் அவன் மரணம் அடைந்திருக்கிறான் என்று தெரிந்து கொண்டாள்.

அவள் கண்ணீரே வடிக்கக் கூடாது, அழுகையை அடக்கிக் கொள்ள வேண்டும் என்ற உறுதியில் இருந்தாள்.

ஆனால், வீடியோ கேசட் ஒளிபரப்பிய சின்னத்திரையில் அவனையும், தன்னையும் இணையாக பார்த்ததும் மனம் பொருமி, கண்ணீர் குளம் உடைந்து விட்டது.

திடீரென்று குரலெழுப்பி அழுது விட்டாள்.

இது எல்லாருடைய கவனத்தையுமே திருப்பியது.

அவள் இந்த மாதிரியாக இதற்கு முன்பு அழுது யாருமே பார்த்திருக்க முடியாது.

பட அதிபர் தர்மசங்கடமான நிலையில் 'திருதிரு' என்று விழித்தார். வீடியோ காட்சிகளைப் பார்க்க அவளை அனுமதித்தது முட்டாள்தனம் என்று தெரிந்தது.

அவர், ரத்னாவுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி தேற்ற முன் வந்தார்.

ஆனால், ரத்னா அமைதியடையும் நிலையில் இல்லை.

ரத்னாவின் இந்த திடீர் செய்கை படப்பிடிப்புக் குழுவினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. குகா நர்சிங்ஹோம் நிகழ்ச்சி மறுபடியும் தொடர்ந்து விடுமோ என்று பயந்தனர்.

தாயார் சவுந்திரவல்லி அவள் பக்கமாக நெருங்கி அமர்ந்து கொண்டு தேற்ற முயன்றாள். தன் மகளுக்கு மீண்டும் அப்படியொரு நிலை வந்துவிடக் கூடாது என்று கடவுளை வேண்டினாள்.

(திகில் தொடரும்)

## உலகம் போற போக்கு



உலகம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. ஆணும் பெண்ணும் காதலிப்பது, கல்யாணம் முடிப்பது இப்போது குறைந்து பெண்ணும் பெண்ணும், ஆணும் ஆணும் குடும்பம் நடத்துவது அதிகரித்து விட்டது.

அமெரிக்கா, ஃபிரான்ஸ், பிரிட்டன் நாடுகளில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களுக்குத்தான் ஏனையவர்களை விட அதிக வேலைவாய்ப்பு மற்றும் அதிக சம்பளம்.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் சாதாரண வேலைகளில் இருந்து திரையுலகம் வரை இந்த ஓரினச் சேர்க்கையாளர்கள் தான் பணத்தை அள்ளுகிறார்கள். சாதாரண ஆண், பெண்களை விட ஓரினச் சேர்க்கையாளர்கள் நன்றாக வேலை செய்கின்றனர் என்றொரு அபிப்பிராயம் அங்கு நிலவி வருகின்றது.

ஹொலிவூட்டில் சினிமாத்துறையில் இப்போது சாதாரண பெண்களை விட ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் பெண்கள் தான் அதிகளவில் பணிபுரிகின்றனர்.

ஸ்டீபன் ஸ்பீல்பேர்க்கின் 'ஈ.டி.' படத்தில் நடித்த பேரிமூர் தான் இப்போது கொடிகட்டிப் பறக்கிறார். ஹொலிவூட்டில் பிரபலமான இந்த நடிகை 'ஓர் ஆணைத் திருமணம் செய்ய மாட்டேன்' என்று பகிரங்கமாகவே அறிவித்து விட்டார்.

சினிமாவில் நடிகர்-நடிகைக்கு கொடுக்கும் முத்தங்களை விட ஒரு நடிகை இன்னொரு நடிகைக்குக் கொடுக்கும் முத்தத்திற்குத்தான் அதிக வரவேற்பாம்.

சாதாரணவேலைகளில் இருந்து ஹொலிவூட் வரை ஓரினச் சேர்க்கையாளர்கள் அதிகமாக சேர்க்கப்படுவதற்கு என்ன காரணம்?

'சரியான நேரத்திற்கு வந்து வேலைகளை முடித்துக் கொடுக்கின்றனர். எந்தக் குறையும் வைப்பதில்லை. இதற்கெல்லாம் காரணம் அவர்களுக்கு எந்தக் கவலையும் இருப்பதில்லை' என்று பலரும் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட விருப்பம் தெரிவிக்கும் மாணவிகள் தான் படிப்பில் தீவிர கவனம் செலுத்துபவர்களாக இருக்கின்றனர்.

இது சரியா, பிழையா என்ற விவாதத்திற்குப் போகாமல், இப்படி ஓரினச் சேர்க்கையில் ஈடுபட விரும்புவதற்கு என்ன காரணம் என்று ஆராயப் பட்டால்,

'அவர்களுக்கு பாலியல் ஈர்ப்பு, வெறி எல்லாம் இன்னொரு பெண்ணிடம் கிடைப்பதால், தேவையில்லாத பிரச்சனைகளை வாழ்க்கை முழுவதும் ஏன் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து விட்டது. அதாவது திருமண பந்தத்திற்குள் புகுந்து ஏன் கஷ்டப்பட வேண்டும் என்ற எண்ணமே அது,' என்கிறது மேரிலாண்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் ஆய்வு ஒன்று.

இப்படியே போனால்.....?

## சிறையில் சித்திரவதைகள்

அமெரிக்காவுடன் போட்டி போடுமளவுக்கு வல்லரசாக இருந்த சோவியத் யூனியன், இன்று பல துண்டுகளாகச் சிதறி சின்னாபின்னப் பட்டுக் கொண்டிருக்கிறது.

இதில் ரஷ்யாவின் நிலை படு மோசம். பொருளாதாரத்தில் அதல பாதாளத்தில் வீழ்ந்து, போதைப் பொருட் கடத்தல், விபசாரம், இலஞ்சம் என்று கொடி கட்டிப் பறக்கிறது. இப்போது அங்கு இராணுவம் வைத்ததுதான் சட்டம்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்கு 1500 கிலோமீட்டர் தூரத்தில் இருப்பது லோஸ்வா சிறை. இதுதான் முன்பு அரசியல் கைதிகளைச் சிறை வைத்து சித்திரவதை செய்யும் சிறைக்கூடமாக இருந்தது.

இப்போது இச் சிறைச்சாலை தூக்குத் தண்டனைக் கைதிகளை வைத்திருக்கும் கூடமாக இருக்கிறது. முன்னாள் ரஷ்ய அதிபர் கோரிஸ் யெல்சின் ரஷ்யாவில் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்து விட்டதால், தூக்குத்தண்டனைக் கைதிகள் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இந்தக் கைதிகள் இப்போது, தங்களைத் தூக்கில் போட்டுவிடும்படியும், சாகத் தயார் என்றும் கூறுகின்றனர். இந்தச் சிறைக் கூடத்தில் ரஷ்ய இராணுவம் செய்யும் சித்திரவதைகளைத் தாங்காது தான் இப்படிக் கூறுகின்றார்கள் கைதிகள்.

தினமும் இச்சிறைச்சாலையில் இந்தக் கைதிகள் 90 நிமிடங்கள் மரணவாசலுக்குப் போய் விட்டு வருகிறார்கள்.

இந்தக் கைதிகள் படும் கொடுமைகளை ரஷ்ய அரசு கண்டுகொள்வதில்லை. காரணம், சிறைக்கூடத்தைச் சரியாக நிர்வகிப்பதற்குக் கையில் பணமில்லை. தூக்குத் தண்டனையை அமுல்படுத்த பாராளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு.

பல்வகையிலும் தத்தளித்து வரும் ரஷ்யாவில் இப்போது சட்ட விரோதச் செயல்கள் பல்கிப் பெருகி வருகின்றன. தூக்குத் தண்டனையை மீண்டும் அமுலாக்காவிட்டால் இன்னும் பல கைதிகள் பெருகி விடுவார்கள். இதற்காக ஆயிரக் கணக்கான சிறைச்சாலைகளை அமைக்க வேண்டும் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## காதல் இளவரசர்கள்



பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸின் காதல் விவகாரம் இன்னும் தீர்ந்தபாடில்லை. இதற்கிடையில் இளரசர் சாள்ஸுக்கும் இளவரசி டயானாவுக்கும் பிறந்த இரு புதல்வர்கள் வில்லியம் மற்றும் ஹரி ஆகிய இருவரும். இளம் பெண்களுடன் காதல் விவகாரங்களில் ஈடுபடுவது தொடர்பாக இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் பரபரப்பான கிசுகிசுக்கள் வெளியாகியவண்ணமுள்ளன.

ஹரிக்கு இப்பொழுது வயது 16. இலண்டன் மாநகரில் புறநகர்ப் பகுதியான செல்ஸியா என்ற இடத்தில் அண்மையில் நடைபெற்ற ரக்பி விளையாட்டுப் போட்டியொன்றைப் பார்ப்பதற்காக அழகிய இளம் மங்கையொருத்தியுடன் ஹரி வந்திருந்தார். விளையாட்டைப் பார்ப்பதில் அவர்களிருவரும் கவனம் செலுத்தினரோ என்பது வேறு கதை. ஆனால் அவர்களிருவரும் ஒருவரையொருவர் அணைத்தவண்ணம் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந்ததை அங்கு திரண்டிருந்த அத்தனை கண்களும் பார்த்தன.

விளையாட்டு முடிந்ததும் இருவரும் வண்டியில் ஏறிக் கொண்டனர். அருகிலுள்ள உணவு விடுதியில் உணவு உட்கொண்ட பின்னர் அதே வண்டியில் ஏறி, எங்கோ பறந்து சென்றனர்.

இதற்கிடையில் ஹரியின் அண்ணன் வில்லியம் (18 வயது) பல இளம் சிட்டுக்களுடன் காதல் வானில் பறந்தவண்ணமிருக்கிறார். இவருடைய உண்மையான காதலுறவு எந்த அழகியிடம் உள்ளதென்பது இவ்வருட கிறிஸ்மஸ் காலத்தில் பக்கிங்ஹாம் அரண்மனை மூலம் வெளியாகுமென்று தெரியவருகிறது.

அண்மையில் வெளியாகிய அமெரிக்கச் சஞ்சிகையொன்றில் 22 வயதான ஓர் அழகிய நங்கை இளவரசர் வில்லியமின் குழந்தைக்குத் தாயாகி இருப்பதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறது.

தனக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கு இளவரசர் வில்லியம் பராமரிப்புச் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இப்பெண்மணி பக்கிங்ஹாம் அரண்மனைக்கு பல கடிதக் கணைகளை எய்த வண்ணமிருப்பதாக அச்சஞ்சிகை கூறுகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை வில்லியம் மறுத்து வருகிறார்.



## சி(ற்றா)(ல்லா)டை

விளையாட்டுக் கார்களின் சில்லுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆடையை அணிந்தபடி அலங்கார அணிவகுப்புக்கு வந்த பெண் இவரோ என்று யாரும் எண்ண வேண்டாம்.

ரேஸ் கார்களின் மாதிரி (மொடல்)களில் உள்ள சில்லுகளைக் கொண்டு உருவாக்கிய சிற்றாடை அணிந்து கொண்டு இருக்கும் மொடல் அழகிதான் இவர்.


அவுஸ்திரேலிய நாட்டில் நடந்த ஒரு போட்டியின் போதுதான் சில்லாடையை அணிந்து கொண்டு காட்சியளித்தாள் இந்த அழகி.

## மவு(த்)ஸ்

கம்பியூட்டர்களின் முன்னால் இருக்கும் மவுஸ் மூலம் அப்படி இப்படி நகர்த்தியும், 'க்ளிக்' செய்தும் கம்பியூட்டர்களுக்கான பணிகளை செய்வதைப் பார்த்திருப்பீர்கள்.

இப்போது மவுஸ்போன்றதொரு கருவியை வாயில் வைத்து ஆணைகள் பிறப்பித்து, கம்பியூட்டர் பணிகளைச் செய்யலாம். இந்தக் கருவியை ஜப்பான் பல்கலைக் கழகம் ஒன்று உருவாக்கியுள்ளது.

இந்தக் கருவி மூலம் பெண்ணொருவர் கம்பியூட்டர் பணிகளை மேற்கொள்வதையே படத்தில் காண்கிறீர்கள். வாயில் வைத்து இயக்கப்படும் இக்கருவியை இனி 'மவுத்ஸ்' என்று அழைக்கலாம் போலும்.



## பென்சில் சேகரிக்கும் பெண்

கின்னஸ் புத்தகத்தை எடுத்துப் பார்த்தீர்கள் என்றால் முத்திரை சேகரிப்பதிலிருந்து, பல்வேறு பொருட்களைச் சேகரித்துச் சாதனை படைத்தவர்கள் பெயர்கள் இடம்பெற்றிருக்கும்.

இப்படிச் சேகரிப்பாளர்கள் வரிசையில் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற முயற்சிக்கிறார் இந்தியாவின் ஸ்ரீநகரில் வசித்துவரும் இந்தர் பரீத் பிந்த்ரா என்ற பெண். இவர் பலவிதமான பென்சில்களைச் சேகரித்துள்ளார். இவரிடம் இப்போது 5 ஆயிரம் விதமான பென்சில்கள் உள்ளன.

இவரது இந்தச் சாதனை இந்திய அளவில் சாதனைகளைப் பதிவு செய்யும் 'லிம்கா' சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.



## ஆடை அணிவகுப்பு

கண்டபடி உடுத்திக் கொண்டு 'அலங்கார அணிவகுப்பு' என்ற பெயரில் அலங்கோலமாக உலாவரும் காட்சிகளை இப்போதெல்லாம் அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது.

கட்டிளம் காளைகளும், கனவுக்கன்னிகளும் கண்கவர் உடை(?)களில் கண்றாவியாக வந்தார்கள். இந்தக் கலாசாரம் உலகெங்கும் பரவிவிட்டது.

சில மாதங்களுக்கு முன் ரோம் நகரில் உடல் ஊனமுற்றவர்கள் கலந்துகொண்ட 'ஆடை அணிவகுப்பு'க் காட்சியே இது. 'ஆடை அணிவகுப்பின்' போது சக்கர நாற்காலியில் நகர்ந்து வந்து தங்கள் ஆடை அலங்காரத்தைக் காட்டுகிறார்கள் இவர்கள்.

## நாறடித்த போராட்டம்

பலவிதமான போராட்டங்களைப் பார்த்திருக்கும் உங்களுக்கு இந்தப் போராட்டம் சற்று வித்தியாசமானதொன்றாகும்.

ஃபிரான்ஸ் நாடு பெட்ரோல் மற்றும் டீசல் போன்ற எரிபொருட்களின் விலையைப் பலமடங்கு அதிகரித்து விட்டது.

இதனால் அட்லாண்டிக் மற்றும் மத்தியதரைக் கடல்களில் மீனவர்கள் அதிவேக விசைப்படகுகளை அடிக்கடி எடுத்துச் சென்று மீன்பிடிக்க முடியாத நிலை.

இதன் காரணமாகத் தமது தொழிலில் ஏற்பட்ட பாதிப்பை அரசாங்கத்திற்கு உணர்த்தத் திட்டமிட்டுவிட்டார்கள் மீனவர்கள்.

தாங்கள் பிடித்த பெருந்திரளான மீன்களைக் கொண்டு வந்து, கடற்தொழில் அமைச்சகம் முன்பு கொட்டிப் பரப்பினார்கள் மீனவர்கள்.

இதற்குப் பதிலடியாக அரசு தரப்பு மௌனம் காத்தது. நாற்றத்தைச் சகித்தது.



# தகவல் பெட்டி



## குண்டுக் குழந்தை

படத்தில் இருக்கும் இந்தக் குழந்தையின் பெயர் சாலிஸ் அஹமட் தாஹீர். வயது வெறும் 15 மாதங்கள்தான். ஆனால் இதன் எடையோ 23 1/2 கிலோ கிராம். பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் உள்ள இந்த குழந்தை தினமும் இரண்டரை லீட்டர் பால், பிஸ்கட், பழங்கள்தான் சாப்பிடுகிறதாம்.

அழுது கொண்டிருக்கும் இந்தக் குழந்தையின் அருகில் அமர்ந்திருப்பவர் இந்தக் குழந்தையின் 6 வயது அக்கா மரியம்.





## இப்படியும் ஒரு தற்கொலை முயற்சி

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நீதிராஜன் என்ற 21 வயது இளைஞன் வேலை பார்த்த இடத்தில் கொடுமைப்படுத்தப்பட்டதால், இரும்புத்துண்டுகள், ஆணிகள், கண்ணாடித் துண்டுகள் உள்ளிட்ட பொருட்களை விழுங்கித் தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுக் காப்பாற்றப் பட்டார். 4 மணிநேர அறுவைச் சிகிச்சைக்கும் பின், இவரது வயிற்றிலிருந்து எடுக்கப்பட்டவை இவை:

4 அங்குல நீளமுள்ள 22 கம்பிகள், 6 அங்குல நீளமுள்ள ஒரு மின்சோதனைக் கருவி (டெஸ்டர்) 13 சோடா போத்தல் முடிகள், 2 போல்ட் நட்டுகள், இவற்றை விட பிளேட் துண்டுகள், டியூப்லைட் கண்ணாடித் துண்டுகள்.

## பாம்புக்குக் கால்

பாம்புக்குக் காது இருக்கிறதா இல்லையா? என்று விவாதிப்பவர்கள் அதற்குக் கால்கள் இருக்கிறதா இல்லையா? என்று விவாதம் செய்வதில்லை.

பாம்புக்குக் கால்கள் உண்டு. நம்ப முடியவில்லையா? தமிழ்நாட்டில் உள்ள ஈரோடு அருகேயுள்ள உத்தண்டி பாலையம் அருகே, வயிற்றுப் பகுதியில் இரண்டு கால்களுடன் இருந்தது கட்டு விரியன் பாம்பு ஒன்று.

கட்டுவிரியன் பாம்பு என்றால் விஷப்பாம்பு அல்லவா? அதனால் அதிசயமான பாம்பென்றும் பார்க்காமல் அடித்தே கொன்று விட்டார்கள் அவ்வூர் மக்கள்.



திரையுலக மறுபக்கம் 184 தமிழ்நாட்டிலிருந்து மயன்

# உல்லாசம் தேடி ஊக்கமருந்துடன் அலையும் இயக்குநர்!

பழம்பெரும் நடிகரான தியாகராஜ பாகவதர் கதாநாயகனாக நடித்த படத்தின் பெயர் அது. அதில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் நடித்திருந்தார். அப்படத்தின் பெயரைக் கொண்ட ஒரு திரையுலக ஜாம்பவான் பற்றிய செய்திகள் இப்போது கோடம்பாக்கத்தில் பரபரப்பாகப் பேசப்படுகின்றன.

ஒரு காலத்தில் பிரமாண்டமான கதைகளையும், கதைக்களங்களையும் தன் கமராக் கண்களால் அப்படியே அள்ளித்தந்தவர் இந்த ஒளி ஓவியர். இப்போது இவரது கமராக் கண்கள் சதைகளின் மேடு பள்ளங்களையும் தெளிவு சுழிவுகளையும் படம் பிடிப்பதில் முனைப்பாக இறங்கியிருக்கிறது.

இந்தப் பெரியவரிடம் பயின்ற பெண்கள் இருவர் இன்று தமிழ்த் திரையுலகில் முன்னணியில் இருக்கிறார்கள். ஒளிப்பதிவில் இவருக்கு நிகர் இவரே, என்று பேசப்பட்ட காலத்தில் ஓரிரு படங்களையும் இயக்கி இருக்கிறார்.

மறைந்த கவர்ச்சி நடிகையை வைத்து இவர் இயக்கிய படம் ஒன்று அப்பட்டமாக அங்கங்களைப் படம்பிடித்துப் படமாக்கப்பட்டதால் அப்படம் வசூலை வாரிக் குவித்தது.

அதன்பின் ஒளிப்பதிவில் கவனம் செலுத்திய இவரது கமரா மடைசியாக உலக அதிசயங்கள் ஏழையும் அழகாகப் படம்பிடித்தது. என்ன நடந்ததோ தெரியவில்லை இவருக்கு? பழையபடி 'பலான' படங்களை எடுக்க ஆரம்பித்தார்.

அதுவும் தனது மகனை நாயகனாக வைத்து. அப்போது வெளியான சூப்பர் நட்சத்திரத்தின் படத்திற்கு அடுத்தபடியாக இவர் எடுத்த படம் விலை போனது. ஆயினும் 'பலான'காட்சிகள் அப்பட்டமாக இருந்ததால் தணிக்கைக் குழுவினரின் கத்தரிக்கோல் கண்டபடி குதறிவிட்டது. இதனால் 'காமாசோமா'வாகிப் போன அப்படம் சுமாராக ஓடியது.

இப்போது உடலுறவுக் காட்சிகளைச் சிறப்பாகச் செதுக்கி வைத்திருக்கும் கோலியின் பெயரில் படமெடுத்து அதனை தணிக்கைக் குழுவுக்கு அனுப்பாமல் இருக்கிறார் இவர். தணிக்கைக் குழுவின் பார்வைக்குப் போனால் படத்தில் ஏகப்பட்ட வெட்டுக்கள் விழும் என்று விழித்துக் கொண்டிருக்கிறார்.

இந்தப் படத்தில் பல புதுமுகங்களைப் பகலில் நடிக்க வைத்துப் படம் பிடித்த இவர், இரவில் புதுமுகங்கள் தங்கியிருக்கும் அறைக் கதவுகளைத் தட்டுகிறார். கதவைத் திறந்தால் இயக்குநர்- ஒளிப்பதிவாளர், கையில் ஊக்கமாத்திரையுடன்.


போதை மருந்துகளுக்கு அடிமையானவர்களைப் போல் இளம் பெண்களும் ஊக்கமருந்தும் இல்லாவிட்டால் இவர் படும் பாட்டைப் பற்றிப் பலரும் கிசுகிசுத்து வருகிறார்கள்.

கிசுகிசுப்பாகப் புகைந்து கொண்டிருந்த இந்த விஷயம் உண்மை என்று தெரியவர, இவர் மேல், இவரது திறமை மேல் அபிமானம் கொண்ட திரையுலகப் புள்ளிகள் இப்போது இவரைக் கண்டு ஒதுங்கிச் செல்கிறார்கள்.

## ரேவதியின் உபதொழில்

சின்னத்திரைத் தயாரிப்பில் ஈடுபட்டுவரும் ரேவதி இப்போது உபதொழில் ஒன்றையும் தொடங்கவிருக்கிறார்.

இவர் சென்னையில் உள்ள பிரபல திரையரங்கு ஒன்றை குத்தகைக்கு எடுத்து நடத்தவிருக்கிறார்.



மாதவன் - ஸ்நேகா
படம்: என்னவளே

## சினி ...

- 'தெனாலி' படத்தை அடுத்து தெலு... கில் நாகார்ஜுனாவை வைத்து... படமொன்றை இயக்கி வருகிற... கே.எஸ்.ரவிக்குமார். இவர் அடுத்து... இயக்கும் தமிழ்ப்படத்தில் சரத்கு...
- அஜித் பல கெட்-அப்களில் ந... ஷமிரா ஷெட்டி என்ற புதுமுக... இப்போது அவருக்குப் பதிலாக... நடிக்கவுள்ளார்.
- 'வாஞ்சிநாதன்' படத்தை அடுத்... படத்தின் பெயரை 'தென்னரச... மிட்டுள்ளார் படத்தின் தயாரிப்...
- பிரசாந்த்-ஸ்நேகா இணைந்து ந... படம் 'விரும்புகிறேன்'. இந்தப்பட... பெயரிடப்பட்டுப் பின்னர் மாற்ற...
- 'என்னம்மாக் கண்ணு' பட... நைகாண்டியும் கலந்த கதாப... 'ஜூட்டி', 'மிஸ்டர் நாரதர்'... படமொன்றுக்கு 'வொன்னரசு'...
- வெகுவேகமாக முன்னணிக்கு ... அடுத்து நடிக்கும் புதிய படமொ... மாணவி என இரட்டை வேடங்க...
- 'ஸ்டாலின்' தமிழ்-தெலுங்கு ஆ... தயாரித்து நடிக்கும் படம் இது. இ... நடிக்கும் படமொன்றைத் தயாரி...
- விக்ரம்-சௌந்தர்யா நடித்து ... தில்' தான் 'கண்டேன் சீ... மொழிமாற்றப்பட்டு அண்மையில்...

## இரட்டை வேடத்தி...

ஆர்.பி.சௌத்ரி தமிழ்-தெலுங்கு ... 'பாப்பா' படத்தின் மூலம் தமிழில் ... நடிகர். இதில் இரட்டை வேடம் ஏற்...

இப்படத்திற்காக சுமார் 48 ... அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப்பட... கிராமிக்ஸ் காட்சிகள் பிரமாண்டமா... முதல் முறை.

இப்படத்தின் கதை-திரைக்கதை ... இயக்குநர் கோடி. ராமகிருஷ்ணா ...

## மாந்திரீக ...

காதல் விவகாரத்தில் கவர்ச்சி நடி... அவரது மனதை மாற்ற, அவரை ... துச் சென்று மந்திரித்து வந்திருக்... கிறார்கள்.

மாந்திரீகரின் ஆலோசனைப்படி ... போட்டுவிட்டார்கள் அவர்கள்.



பிரசாந்த் - ஷாலினி
படம்: பிரியாத வரம் வேண்டும்

## அஜித் படத்திற்கு ஒரு கோடி ரூபாவில் அரங்கு

'வானத்தைப் போல' வெள்ளிவிழாப் படத்தைத் தயாரித்த ஆஸ்கார் பிலிம்ஸ் வி. ரவிச்சந்திரன் அடுத்து அஜித்குமார்-ஜோதிகா நடிக்கும் 'பூவெல்லாம் உன்வாசம்' என்ற படத்தைப் பிரமாண்டமாகத் தயாரிக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்புக்காக ஒருகோடி ரூபா செலவில் அரங்கு ஒன்றை அமைத்துள்ளார் கலை இயக்குநர் பிரபாகர். 185 தொழிலாளர்களின் இரண்டுமாத உழைப்பின் பலனாக உருவான இந்த அரங்கில் முதலில் பாடல் காட்சி ஒன்று படமாகியுள்ளது.

'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தை இயக்கிய எழில் இப்படத்தை இயக்கி வருகிறார்.

## துண்டு துக்கடாவில் மீனா

மீனா ஏற்கனவே ஒப்புக் கொண்ட படங்களைத்தவிர வேறெந்தப் படங்களும் அவரது கையில் இல்லை. 'தெனாலி'யில் சிறிய வேடமொன்றிலும் 'அன்புடன்' படத்தில் ஒரு பாடல் காட்சியிலும் நடித்த மீனாவுக்கு அதைப் போன்ற துண்டு துக்கடா வேடங்கள்தான் கிடைக்கின்றன.

அஜித் பலவித கெட்-அப்களில் நடிக்கும் 'சிட்டிசன்' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாட வாய்ப்பு வந்தது மீனாவுக்கு. மறுக்காமல் அதில் நடனமாட சம்மதித்துவிட்டார் மீனா.



சத்யராஜ் - ரம்பா
படம்: குங்குமப் பொட்டுக் கவுண்...

## காதோடு சொல்லுகிறோம்

பார்ட்டிக்குப் பேர் போன நட்சத்திரக் குடும்பத்தில் ஓர் அங்கமாகி விட்டாராம் 'கறுப்புக் கலரை விரும்பும்' மா நடிகை. இரண்டெழுத்துத் தாடிக்கார இயக்குநர் மூலம் நட்சத்திரக் குடும்பத்திற்குப் போக ஆரம்பித்ததும் நடிகைக்குப் புதுப்புதுப் பெரும் புள்ளிகளின் நட்புக் கிடைக்க ஆரம்பித்துள்ளதாம்.

அண்மையில் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கும் 'நண்பர்கள்' படத்தின் விளம்பரப் பொறுப்பை அப்படத்தின் நாயகரான இளம் முன்னணி நடிகரின் தந்தைதான் ஏற்றிருக்கிறாராம். இவர் பத்திரிகைகளில் இருந்து சகல விதமான படம் சம்பந்தப்பட்ட விளம்பரங்களிலும் இப்படத்தில் நடித்திருக்கும் மற்றொரு இளம் நடிகரான 'மாக்கன்டேய' நடிகரின் மகனை இருட்டடிப்புச் செய்து வருகிறாராம்.

வளவள பளபள தொடையழகிற்குப் பேர்போன நடிகை, தற்போது தமிழில் முன்னணியில் இருக்கும் 'ஜோதி' மயமான நடிகைமீது கடுங்கோபத்தில் இருக்கிறாராம். 'தன்னைப்போலவே அரைக்காற்சட்டை, குட்டைப்பாவாடை அணிந்து தனது உடையலங்காரத்தைக் காப்பியடிக்கிறார்' என்று 'ஜோதி' மயமான நடிகை மேல் பகிரங்கமாகவே குற்றஞ் சுமத்துகிறாராம் தொடையழகி நடிகை.

ஒளிவைக்கு நெல்லிக்கனி கொடுத்த மன்னவின் பெயரைக் கொண்ட இயக்குநர் நடிகராக அறிமுகமான படத்தில் இவருக்கு ஜோடியாக அறிமுகமான 'லட்சுமிகர'மான நடிகை இப்போது தனது பெயரை மாற்றிக் கொண்டு நடித்து வருகிறார். இவர் இப்போது தமிழகத்தில் வளர்ந்துவரும் கட்சித் தலைவர் ஒருவரின் அன்புப் பிடிக்குள் சிக்கியுள்ளாராம்.

... சிட்

# ...மினி சினி

...தாநாயகனாக நடிக்கவுள்ளார்.

... வரும் 'சிட்டிசன்' படத்தில் ...நாயகியாக நடிக்கவிருந்தார். ...ராம்' நாயகி வசுந்தரா தான் ...

...ஜயகாந்த் நடிக்கும் 'நரசிம்மா' ...என்று, மாற்றி வைக்கத் திட்ட... ...த்து.

... கவி கனேசன் இயக்கிவரும் ... முதலில் 'திக்திக்கும் தீ' என்று ...ட்டு.

... பின் சத்யராஜ் நக்கலும், ...ங்களில் நடித்து வருகிறார். ...னையடுத்து இவர் நடிக்கும் ... பெயரிடப்பட்டிருக்கிறது.

... கொண்டிருக்கும் மும்தாஜ், ... திமிர் பிடித்த பணக்காரி... ...நடிக்கவுள்ளார்.

...இருமொழிகளில் பிரகாஷ்ராஜ் ...த்து இவர் மூன்று வேடங்களில் ...ளார்.

...கில் வெற்றி பெற்ற 'தம்பதி ... என்ற பெயரில் தமிழில் ...ரிக்கிறது.

## ...ல் வெங்கடேஷ்

... இருமொழிகளில் தயாரிக்கும் ...கமாகும் பிரபல தெலுங்கு ...ளார்.

...கள் கிராபிக்ஸ் காட்சிகள் ...ளில் இவ்வளவு அதிக நேரம் ...அமைக்கப்பட்டிருப்பது இதுவே ...

...த்து இயக்குகிறார் தெலுங்கு ...

## ...மாட்டை

... அல்போன்சா சிக்கியிருப்பதால் ...ான மாந்த்ரீகரிடம் அழைத் ...ர் அல்போன்சாவின் உற...

...ல்போன்சாவுக்கு மொட்டையும் ...



விஜய்- தேவயானி
படம்: ப்ரண்ட்ஸ்

# ரித்திகா–கனகா நடிக்கும் 'அம்மா 1ந் திகதி'

'அவள் பாவம்' என்ற குறுகிய காலத்திற்குள் எடுக்கப்பட்ட படத்தைத் தயாரித்த கே.ஆர். பிலிம்ஸ், அடுத்து 'அம்மா 1ந் திகதி' என்ற படத்தைத் தயாரிக்கிறது.

தெலுங்கில் சுரேஷ் நடித்து வெற்றி பெற்ற 'அம்மா ஏக்கட தனி' என்ற படமே 'அம்மா 1ந் திகதி' என்ற பெயரில் தமிழில் தயாராகிறது.

சுரேஷ், பிரபுகாந்த், ரித்திகா, கனகா, பானுப்பிரியா, ஜனகராஜ், வடிவேலு, வெண்ணிற ஆடை மூர்த்தி, மதன் பாப், டயானா, ஐசரி கணேஷ் உட்பட பலர் நடிக்கின்றனர்.

இ.வி.வி. சத்யநாராயணாவின் கதை திரைக்கதைக்கு கே.ராஜன் வசனம் எழுத, பாபுகணேஷ் இயக்குகிறார்.

இப்படத்திற்கு 'வந்தே மாதரம்' சீனிவாஸ் இசையமைக்கிறார்.

## வருகிறார் வாசுவின் வாரிசு

நீண்ட காலமாக தன் மகன் பிரசாந்தை (தமிழில் இன்னொரு பிரசாந்த் இருப்பதால் இப்பெயர் மாற்றப்படக் கூடும்) கதாநாயகனாக ஆக்கும் திட்டத்தில் இருக்கும் பி.வாசு, விரைவில் தனது திட்டத்தைச் செயலாக்கப்போகிறார்.

'சின்னத்தம்பி' (சிறிய வயது பிரபுவாக) உட்பட பி.வாசு இயக்கிய பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்த பிரசாந்த் கதாநாயகனாக அறிமுகமாகும் படத்தை வாசுவே தயாரிக்கிறார்.

இப்படத்தின் கதாநாயகியும் புதுமுகம்தான். ஆனால் ஏற்கனவே பி.வாசு இயக்கிய பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியின் ஸ்ரீதேவிதான் அந்த நாயகி.

இப்படத்திற்கான அறிவிப்புகள் விரைவில் தயாரிப்பாளர் தரப்பிலிருந்து வெளிவரும்.

## 'பத்ரி'க்காக பிரமாண்ட அரங்கம்

தெலுங்கில் 'தம்முடு' என்ற பெயரில் வெற்றி பெற்ற படம் தற்போது 'பத்ரி' என்ற பெயரில் தமிழில் தயாராகி வருகிறது. கதாநாயகனாக நடிக்கும் விஜய் இதில் குத்துச்சண்டை வீரர் வேடம் ஏற்கிறார்.

இதில் விஜய்க்கு ஜோடியாக பூமிகா-சிம்ரான் தங்கை மோனல் ஆகியோர் நடிக்கின்றனர். இவர்களுடன் விவேக், சஞ்சய், தாமு, ரியாஸ்கான், கிட்டி போன்றோர் நடிக்கின்றனர்.

பூபேந்தர் என்ற இந்தி நடிகர் இதில் வில்லனாக நடிக்கிறார்.

இப்படத்திற்கு பிரமாண்டமான அரங்குகள் போடப்பட்டு படப்பிடிப்புக்கள் நடந்து வருகின்றன. இதற்காக 'இண்டர்நெட் வேர்ல்ட்' என்ற அரங்கம் ஒன்றும் பல இலட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

திரைக்கதை அமைத்து இயக்கும் பொறுப்பை புதியவரான அருண்பிரசாத் ஏற்றுள்ளார். ரமணகோகுலா என்ற புதியவர் இசையமைப்பாளராக இப்படத்தின் மூலம் அறிமுகமாகிறார்.

## பெயர் மாறும் பிரபு படம்

'பட்ஜெட் பத்மநாபன்' வெற்றிப்படத்தைத் தந்த பிரபு-டி.பி. கஜேந்திரன்-கே.ஆர்.ஜி. கூட்டணி மறுபடி இணைந்து வழங்கும் படத்திற்கு 'பந்தா பரமசிவம்' என்று பெயரிட்டிருந்தார்கள்.

இப்போது இப்படத்தின் பெயரை 'மிடில் கிளாஸ் மாதவன்' என்று மாற்றி விட்டார்கள்.



## கழன்று கொண்ட நடிகைகள்

'செம்பருத்தி' படத்தில் அறிமுகமான ரோஜாவுக்கு 'பொட்டு அம்மன்' நூறாவது படம். நூறாவது படத்தில் நடித்ததை யொட்டி ரோஜாவுக்கு சென்னையில் பாராட்டு விழா நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று நடனமாட வேண்டி முன்னணி நடிகைகள் சிலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எல்லோரும் ஆளுக்கொரு சாட்டுச் சொல்லி விட்டு, நடனமாடச் செல்லாமல் கழன்று கொண்டனர்.

## சின்னத் திரையில் கங்கை அமரன்

'கரகாட்டக்காரன்' உட்பட பல வெற்றிப்படங்களை இயக்கிய கங்கை அமரன், அவரது மகன் வெங்கட் பிரபுவை வைத்து இயக்கிய 'பூஞ்சோலை' படத்தை இன்னமும் வெளியிட முடியாத நிலையில் இருக்கிறார்.

பெரியதிரை போனால் என்ன? இருக்கவே இருக்கிறது சின்னத்திரை என வெங்கட் பிரபுவை சின்னத்திரையில் களம் இறக்குகிறார் கங்கை அமரன்.

'குண்டக்க மண்டக்க' என்ற பெயரில் அமரன் இயக்கும் இந்தத் தொடர் 'சன்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக வுள்ளது. 'சன்' வழியாக 'சக்தி'யில் கண்டுகளிக்கலாம் நாம்.



சக்தி - ஒலியா
படம்: மனக

## முகப்பில்

**அஜித்**
படம்: தீனா

**ரோஜா**
படம்: லூட்டி

## உலகை விலைபேச வரும் கார்த்திக்–அபிராமி

பிரபு-கார்த்திக் நடித்த 'உரிமை கீதம்' படம் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் ஆர்.வி.உதயகுமார். அதன் பின் இவர் கார்த்திக்கிற்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய 'கிழக்கு வாசல்' படத்தின் மூலம் பிரபலமானார்.

இப்போது உதயகுமாருக்குக் கைவசம் படவாய்ப்புக்கள் இல்லை. கார்த்திக் இவருக்குக் கைகொடுத்திருக்கிறார்.

பல மாதங்களுக்கு முன் 'உலகை விலை பேசவா' என்ற பெயரில் தொடங்கப்பட்ட இப்படத்தில் படப்பிடிப்புக்கள் இப்போது ஆரம்பமாகி யுள்ளன.

கதை, திரைக்கதை அமைத்து ஆர்.வி. உதயகுமார் இயக்கும் இப்படத்தில் கதாநாயகனாக கார்த்திக் நடிக்க, இவருக்கு ஜோடியாக 'வானவில்' நாயகி அபிராமி நடிக்கிறார்.

## தமிழுக்கு வரும் ஷபானா ஆஸ்மி

இந்தி நடிகை ஷபானா ஆஸ்மி இந்தியத் திரையுலகில் சிறந்த நடிகைகளில் ஒருவர். இவர் பல படங்களில் நடித்திருந்தாலும் 'பயர்' படத்தில் நடித்தவர் என்றால் உடனே யாரும் விளங்கிக் கொள்வார்கள்.

இவர் முதல் முறையாக தமிழ்ப் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். இவரை இயக்கப்போவதும் ஒரு பெண் இயக்குநர்தான். 'புரட்சிக் காரன்' இயக்குநர்-நடிகர் வேலு பிரபாகரனின் மனைவி ஜெயதேவிதான் அப்பெண் இயக்குநர்.

பல படங்களை இயக்கியுள்ள ஜெயதேவியிடம்தான் 'காதல் தேசம்', 'காதலர் தினம்' போன்ற படங்களை இயக்கிய கதிர் முதலில் உதவி இயக்குநராகப் பணியாற்றினார். ஷபானா ஆஸ்மியை வைத்து ஜெயதேவி இயக்கும் படம் தமிழ்-இந்தி ஆகிய இருமொழிகளில் வெளிவரவுள்ளது.

# யார் இவர்?



**அ**ன்னையின் அரவணைப்பில் ஆர்ப்பரிக்கும் இந்தப் பிஞ்சு இன்று ஒரு பிரபல பின்னணிப் பாடகர். கர்நாடக சங்கீதத்தில் தேர்ச்சி பெற்ற இவர் சினிமாவில் பாடிய முதல் பாடலுக்கே இவருக்கு சிறந்த பின்னணிப் பாடகருக்கான இந்திய தேசிய விருது கிடைத்தது.

இவர் பாட வராமல் இருந்திருந்தால் சிறந்த கிரிக்கெட் வீரராகப் பரிணமித்திருப்பார். மெட்ராஸ் கிரிக்கெட் கிளப்பில் மட்டை வீச்சாளராகவும், விக்கெட் காப்பாளராகவும் இருந்திருக்கும் இவரது அணித்தோழன் ரொபின் சிங்.

சரி இப்போது தெரிகிறதா இவர் யாரென்று? கண்டுபிடிக்காதவர்கள் பக்கம் 18ஐப் புரட்டுங்கள்.

# இப்படி இரு!



அன்பை அபகரிப்பதில்
***திருடனாய் இரு...***
அறிவைப் பெருக்குவதில்
***பேராசைக்காரனாய் இரு...***
முன்னேற முயற்சிப்பதில்
***பிடிவாதக்காரனாய் இரு...***
கர்வம் கொள்வதில்
***கஞ்சனாய் இரு...***
கவலைப்படுவதில்
***மறதிக்காரனாய் இரு...***
தீய பழக்கங்களைத் தெரிந்து கொள்வதில்
***முட்டாளாய் இரு...***
வன்முறையில் ஈடுபடுவதில்
***கோழையாய் இரு...***
தேசம் மீது கொள்ளும் பற்றில்
***தீவிரவாதியாய் இரு...***

# நில் கவனி முன்னேறு

**உ**றுதி என்ற ஆணிவேர்தான் மரம். அது காய் காய்த்து பழம் பழுப்பதற்கு முன் பூப்பூப்பது போன்று எல்லா வெற்றிகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது. அது என்ன வென்றால் திடமான உறுதியே.

அதனால்தான் ஓர் அறிஞர் கூறுகிறார் 'மனித இனத்தின் இதயத்திலிருந்து இந்த உறுதி போயிருந்தால் மானிட இனத்தின் வரலாறு தற்போது உள்ளது போன்று இருக்காது.'

கண்ணுக்குத் தெரியாத நம்முடைய ஆற்றலின் மீது உறுதி வைக்கும் பொழுது உற்சாகம் தோன்றுகிறது. அதன் காரணமாகத்தான் அரும்பெரும் செயல்களை எல்லாம் எளிதாக செய்து வெற்றி பெற முடிந்தது.

பயம் அவர்கள் உள்ளேயே வரவில்லை. நாம் எவ்வளவு தான் நம் மனத்தை வல்லமையுடையதாகவும் நம்பிக்கையுடையதாகவும் ஆக்கி வைத்திருந்தாலும் சிறுசிறு துன்பங்கள், ஏமாற்றங்களை எல்லாம் கண்டு மனச் சோர்வு ஏற்பட்டு விடுகிறது.

அதன் பின் ஊக்கமும் உற்சாகமும் உறுதியும் கொள்வதற்கு நமக்கு பெரும்பாடாக இருக்கிறதே. இதற்கு என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம். இடையில் ஏற்படும் இடையூறுகளை எண்ணி சோர்ந்து உட்கார்ந்துவிட வேண்டாம்.

நம்முடைய உறுதி இடையூறுகளை எல்லாம் உடைத்து எறிந்து விடும் ஆற்றலுடையது. நம்மை நாம் முழுவதும் நம்பினால் இவை எலலாம் விடியற்காலை பனிபோல மறைந்துவிடும்.

நம்முடைய வலிமை வரலாற்று ஏடுகளில் பெயரை பதிவு செய்யும் சக்தியுடையது. நீண்ட தூரம் பயணம் செல்லும் போது இடையில் பல இடங்களில் நின்றுவிட்டு மீண்டும் புறப்பட்டு செல்கிறோம்.

பயணம் பாதியில் நின்று விடாமல் இருக்க தொடர்ந்து சென்று கொண்டே இருப்போம். இதே மாதிரிதான் இடையூறும் நீடித்து இருக்காது.

இதுவரையில் உலகிற்கு புதுப் பொருளை உருவாக்கிக் கொடுத்த

## இறுதி வெற்றிக்கு உறுதி தேவை!

இந்த அடிப்படையில் தான் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். மேற்குப் பகுதியில் திட்டாக ஒரு நாடு இருக்கிறது.

நான் கொண்ட உறுதியை விடாமல் இடையில் ஏற்பட்ட இடையூறுகளை பொருட்படுத்தாமல் உயிரைப் பணயமாக வைத்து மலை அளவு உயர்ந்த அலையையும் கர்ச்சிக்கும் பெரும் கடலையும் ஒரு துரும்பெனக் கருதி தொடர்ந்து சென்று இறுதியில் புதிய நாட்டை அடைந்தார்.

இந்த உறுதி நம்மை இரும்பு மனிதனாக்கும்பொழுது சந்தேகம் நம்மைக் கோழையாகவும் நாடிதளர்ந்த நடைப் பிணமாகவும் ஆக்கி விடுகிறது. அதனால் தான் ஆஸ்கார் ஒயில்டு கூறுகிறார் 'நான் என் உள்ளக்கோட்டையை நம்பிக்கையால் அரண் செய்து வைத்திருந்த போதிலும் எப்படியோ சந்தேகம் என்ற வெடிகுண்டு அதன் மீது விழுந்து தூளாக்கி விடுகிறது'

நம்முடைய மனக்கோட்டையை நாமும் அரண்செய்து வைத்து சந்தேகம் என்னும் வெடிகுண்டு விழாமல் இருக்கும்படி செய்துவிட வேண்டும்.

ஏற முடியாது என்று கருதப்பட்ட எவரெஸ்ட் சிகரத்தையும் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் ஏறி தங்களால் முடியும் என்பதை உலகிற்குக் காட்டினார்கள்.

அவர்கள் முழுவதுமாக நம்பிச் செயல்பட்டார்கள். எனவே வெற்றி பெற்றார்கள்,

வர்கள் எவரை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் எவருமே தங்களை குறைவாக எடை போட்டுக் கொண்டதே கிடையாது.

ஏன் நம்மால் முடியாது என்ற வினாவிற்கு விடையாக இருந்தார்கள். நம்மால் முடியாதது ஒன்றுமே இல்லை என்ற அழுத்தத்துடன் செயலாற்றினார்கள். தாங்கள் எடுத்துக் கொண்ட செயலில் வெற்றி பெறாமல் இடையில் நின்றுவிட்ட அறிஞர்களையும் விஞ்ஞானிகளையும் உலகில் எங்கும் பார்க்க முடியாது.

ஏன்? அவர்கள் இடையில் தங்களுடைய செயலை நிறுத்தவில்லை. அதற்குக் காரணம் என்ன? தங்களை தாங்களே முழுவதும் நம்பியதுதான். தங்களால் முடியும் என்று இருக்கும் பொழுது நடுவில் ஏன்? நிறுத்த வேண்டும் என்று நினைத்தார்கள்.

அதன் பயன், என்ன நினைத்து செயலில் இறங்கினார்களோ அதில் வெற்றியும் பெற்றார்கள். ஏன்? நாமும் இவர்களுடைய வழியை பின்பற்றக் கூடாது? அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களும் இடுக்கண்களும் எண்ணற்றவை.

ஆனாலும் அதனை எல்லாம் தூசியாக கருதி செயல்பட்டார்கள். நாமும் நம்முடைய திறமையில் உறுதியுடன் இருந்தால் முடியாது என்று எண்ணப்பட்டவைகளைத் தகர்த்துவிடமுடியும்.

# ஏ... மில்லேனியமே!

*புதிய சகத்திரமே*
*ஏது கொணர்ந்தாய்*
*எமக்கு...!*
***
*உடல்கள் புதைக்க*
*சவக்குழியா*
*இல்லை*
*நாங்கள் சுமக்க சிலுவையா!*
***
*அடுத்த அத்தியாயமும்*
*இன்னுமொரு*
*கோர யுத்தமா*
*கொண்டு வந்துள்ளாய்...?*
***
*அகிம்சைக்கு*
*வழி அமைப்பாயா*
*இல்லை*
*இன்னுமொரு*
*அழிவுக்கு*
*வழி வகுப்பாயா...!*
***
*உருப்படாத அரசியலும்*
*உருக்குலைந்த ஆட்சியும்*
*எப்போது மாறும்...?*
***
*மெஞ்ஞானம் அழிந்து*
*விஞ்ஞானம் பிறந்து*
*மனித மனங்களில்*
*பதிந்த அஞ்ஞானம்*
*தலை தூக்கி*
*ஆரவாரிக்குது*
*மனித இனம்!*
***
*எங்கள்*
*மனங்களில் விதைத்த*
*யுத்தப் பயிர்கள்*
*எப்போது அழியும்?*
***
*தொலைந்து போன*
*நிம்மதிகளும்*
*தேடித்திரியும்*
*அமைதியும்*
*உதயமாகுமா*
*இந்த நூற்றாண்டில்....?*

வீ. ஸ்ரீதரன்–மூதூர்.

# நிம்மதி என்று வரும்?

*இருள்*
*எலும்பைக்கண்டால்*
*'பக்'கென்று*
*கவ்விக் கொள்கிறது*
*பயநாயின் வாய்!*
***
*பொரித்த*
*அப்பளத்தில்*
*பூரிக்கட்டை*
*விழுந்தது போல்*
*செல்லும் வாகனம்*
*சென்றிகளில்*
*தரித்த நிமிஷங்களில்*
*நொருங்கிப் போகிறது*
*மனசு!*
***
*கசாப்புக் கடைக்காரனின்*
*அரிவாளுக்கு*
*கழுத்தைக்*
*கொடுத்தது போல்*
*கையில்*
*அடையாள அட்டை*
*இல்லாத*
*பொழுதுகளில்*
*பொல்லாத நகர்வுகள்!*
***
*பொலிஸ் பதிவு*
*புதுப்பிக்கப்*
*படாதபோது*
*புலன்களில்*
*குருதிக்குப் பதிலாக*
*பதற்றம் ஓடும்!*
***
*சத்தமாய் இருந்தாலும்*
*சுற்றி*
*வளைப்பென்றால்*
*நெற்றி வியர்வை*
*நிலத்தை நீராட்டும்!*
***
*சீருடை வர்ணங்கள்;*
*செருப்புச் சத்தங்கள்;*
*செருக்கள*
*உபகரணங்கள்;*
*எதைக் கண்டாலும்*
*நெஞ்சப் பஞ்சில்*
*பதைபதைப்புத் தீ*
*பற்றிக் கொள்ளும்!*
***
*இமைகளின்*
*சகவாசத்துடன்*
*சுகவாசம்*
*கொண்டிருந்த*
*உறக்கத்திற்கும்*
*தசாப்தங்களாய்*
*சிறைவாசம்!*
***
*யுத்தக் குடை*
*பிடித்துக் கொண்டு*
*சமாதான மழையில்*
*நனையாமல்*
*தப்பிக்கும்*
*தப்பிதங்களை*
*நம்பி கண்ணீரில்*
*குளிக்கின்ற*
*மனசை விட்டு ஓடி*
*நிம்மதியாய் இருக்கும்*
*நிம்மதியைத் தேடி*
*நம்மதியற்றுத்திரியும்*
*நிலைக் கென்று வரும்*
*நிம்மதி?*

கட்டாரிலிருந்து–
பூண்டுலோயா
மெய்யன் நட்ராஜ்.

# சொன்னது நீதானே!

*'கடல் வானம் கூட*
*நிறம் மாறிப் போகும்*
*உன் மீது நான் கொண்ட நேசம்*
*ஒருபோதும் மாறாமல் வாழும்'*
*என்று சொன்னது நீதானே?*
***
*'பணமா பெரிசு?*
*மனந்தானே பெரிசு?*
*அழகா பெரிசு?*
*அகந்தானே பெரிசு?'*
*என்று சொன்னது நீதானே?*
***
*கண்ணாடி பார்க்கையில்*
*என்முகந்தான் தெரியுதென்று*
*ஆசைமொழிகள் பல*
*இதழ்விரித்து சொன்னது யார் நீதானே?*
***
*உன் இதயம் என்னிடம்*
*உயிர்போனாலும் தரமாட்டேன்*
*உன்னிடத்தில் என்னையள்ளிக்*
*கொடுத்தபின்னும்*
*உன் நிழலில் என்னைநான்*
*தொலைத்தபின்னும் நீயும் நானும்*
*வேறல்ல என்றெல்லாம் அடுக்கு*
*மொழிக்கவிதைகள் சொன்னது யார்*
*நீதானே?*
***
*ஆனால் இப்போது*
*'ஊறிய என்கழுத்தில் தாலிகட்டு'*
*என்று நான் கேட்டதற்கு*
*சீதனமாய் சில லட்சம்*
*கட்டாயம் தரவேண்டும் என*
*சொன்னதும் யார் நீதானே?*

இராகவன்–கரவெட்டி.

# தேன் கிண்ணம்

## எங்கே உன் புன்னகை?

*தொலைத்து விட்டாயா?*
*ஏன்..*
*என்னைக் கண்டதும்*
*புன்னகை செய்ய*
*மறுக்கிறாய்....?*
***
*உதிர்த்து–விடு*
*உன்..*
*புன்னகையில்தான்*
*எந்தன்..*
*இதயத்துடிப்பு*
*துடித்துக்கொண்டிருக்கிறது.*
***
*ஓ...*
*உந்தன்*
*உறவுகளின் உத்தரவா*
*உதறி–எறிந்துவிடு*
*என்முன் வந்து*
*உன்...*
*புன்னகையை*
*உதிர்த்துவிடு!*
***
*மனிதனுக்கு மட்டுமே*
*மகத்துவமாய்க் கொடுத்த*
*கொடைதான்,*
*புன்னகை*
*அதை...*
*தொலைத்துவிடாதே,*
***
*உன்...*
*முகத்தின் அழகு*
*ஒருபடி*
*சரிந்து விட்டதை*
*ஏன்...*
*இன்னும்... நீ*
*உணரவில்லை*
***
*முகம் பார்க்கும்*
*கண்ணாடி முன்*
*உன்...*
*முகத்தைக் காட்டு*
*அது கூட...*
*நிச்சயம்*
*முகம் சுழிக்கும்,*
*என்மீது கோபமென்றால்*
*பாவம்..*
*புன்னகை மேல்*
*ஏன்..*
*கோபப்படுகிறாய்,*
***
*உன்னை விட்டு–நான்*
*வெகு தூரம் போகின்றேன்*
*எங்கே!*
*இப்போதாவது*
*உன்...*
*புன்னகையை*
*உதிர்த்து விடு.*

புதிய காத்தான்குடி முஸம்மில்–குவைத்.

# பேனா நண்பர்கள்



பெயர்: எம். அமீர்
வயது: 17
முகவரி: எஸ்.கே.லேன், எஸ்.கே. ஹவுஸ், ஏறாவூர்.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எஸ். கவிதா
வயது: 18
முகவரி: 103, மீள்குடியேற்றத் திட்டம், சிதம்பரபுரம், வவுனியா.
பொழுது போக்கு: வழமையானவை.

# இந்தவாரம் உங்கள் பலன்

**28.01.2001 முதல் 03.02.2001வரை**

ஜோதிடர் *'கார்னர்'*

### மேடம்:

மாற்றம் நிகழும். எதிர்பார்த்த உதவிகள் சீராக அமையும். தடைகள் விலகும். மாமன் வழியோக சந்தோஷ நிகழ்வுகளை நிகழ்த்தும். அச்சுவினிக்காரர்கள் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02
அதிஷ்ட திகதிகள் : 01, 02.

### இடபம்:

பிணக்குகள் தீரப்பெறும். நோய் துன்பங்கள் மாற்றமடையும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். திருமணப் பேச்சுக்கள் தொடங்கும். கல்வி சம்பந்தப்பட்ட விடயங்கள் ஓரளவு திருப்தியைத் தரும். ரோகினி நட்சத்திரக்காரர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 07
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

### மிதுனம்:

முதலீடுகள் உதவிகளைக் கொடுக்கும். மனைவிவழி யோகமுண்டு. கடன் பிரச்சனைகள் சொத்துப் பொருள் சேர்க்கைக்கு இடமுண்டு. பிரயாண சம்பந்தப்பட்ட நிலையில் நல்ல முடிவுகளை எடுப்பீர்கள் புனர்பூசக்காரர் நிம்மதி பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : ரோஸ்; எண்: 09
அதிஷ்ட திகதிகள் : 30, 03.

### கடகம்:

இடமாற்றங்களுக்கு இடமுண்டு. பிள்ளைகளின் செயற்பாடு முறைகளைக் காட்டும். சகோதர வழியால் உதவிகள் ஏற்படும். எதிலும் தயக்கம் தென்படும்... பிரயாணம் வெற்றியைக் கொடுத்தாலும் பணச் செலவுகள் அதிகரிக்கும். பூச நட்சத்திரக்காரர் தளப்பமான நிலை தென்படலாம். வாகனப்பிரயாணத்தை தவிர்க்கவும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 06
அதிஷ்ட திகதிகள் : 30, 31.

### சிம்மம்:

நீண்ட நாள் கனவு பலிக்கும். பண வரவுடன் செலவுகளும் கூடும். வாகனத் தொடர்புடன் தொழில் செய்வோர் ஏற்றம் பெறுவர். சுப கரும சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடரப் பெறலாம்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 28, 03.

### கன்னி:

குடும்பப் பொறுப்புகள் கூடும். நோய் துன்பங்கள் விலகும். சிக்கல்கள் பலரின் உதவியால் மாற்றம் காட்டும். பெரியோர்களின் ஆசீர்வாதமும் போசன சௌக்கியமும் உத்தர நட்சத்திரக்காரருக்கு நற்செய்தி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், திங்கள்
அதிஷ்ட நிறம்:வெண் மஞ்சள்;எண்: 03
அதிஷ்ட திகதிகள்: 29, 01.

### துலாம்:

மனமகிழ்ச்சி. முக்கிய முடிவுகளில் மாற்றங்கள் தென்படும். துணிகரமான செயற்பாடும், உறவினர்களின் ஒத்துழைப்பும் தொழில் வசதிப் பெருக்கமும் காணப்படும். சிங்க மேட இராசிக்காரர்களால் பெரிய நன்மை ஏற்படலாம்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்:மருண் வர்ணம்;எண்: 01
அதிஷ்ட திகதிகள்: 28, 01.

### விருட்சிகம்:

வெற்றிகள் வந்து சேரும். எதிர்பார்த்த புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். வெளியாட்கள் ஆதரவு கிட்டும். முக்கிய ஆலோசனைகள் இடம் பெறும். கடன் பிரச்சனைகள் தீரும். கேட்டை நட்சத்திரக்காரர்களுக்கு இடமாற்றங்கள் வரலாம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 06
அதிஷ்ட திகதிகள் : 30, 02.

### தனுசு:

வாகனத்துறை தொழில் செய்வோர் வெற்றிகளைப் பெறுவார்கள், வெளியிடத் தொடர்புகள் நன்றாக இருக்கும். மூல நட்சத்திரப் பெண்கள் அவதானமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 04
அதிஷ்ட திகதிகள்: 31, 29.

### மகரம்:

இழுபறியான நிலை தொடர்ந்தாலும் கருமவிடயங்கள் கை கொடுக்கும். உடலில் நோய் துன்ப அளவு மாற்றம் ஏற்படும். குடும்பப் பெண்கள் மன மகிழ்ச்சியைப் பெறுவர். திருவோண நட்சத்திரக்காரர் திடீர் மாற்றங்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம்: மண் நிறம்; எண்: 08
அதிஷ்ட திகதிகள்: 28, 31.

### கும்பம்:

கடன் பிரச்சனைகள் தீரும். பிள்ளைகளின் நற்செய்தி கிடைக்கும். பெரியோர்களின் உதவியுண்டு. இரும்பு சம்பந்தப்பட்ட தொழில் செய்வோர் இலாபம் பெறுவார்கள். நோய் துன்பம் வரக்கூடிய பலன் காட்டுகிறது.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 02
அதிஷ்ட திகதிகள்: 29, 02.

### மீனம்:

புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். பணவரவுடன் பொன் பொருள் சேர்க்கைகள் காணப்படும். பெரியோர்களின் உதவியும் நாட்பட்ட விடயங்கள் கைகூடும். உறவினர்களைக் காணும் வாய்ப்பும் காணப்படும். உத்திரட்டாதிக்காரர் மனமகிழ்ச்சி பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 03
அதிஷ்ட திகதிகள் : 30, 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## ஆஸ்துமாவை விரட்டுவது எப்படி?



குளிர்காலம் என்றாலே ஆஸ்துமா எனப்படும் மூச்சிறைப்பு நோய் அதிகமாவது வழக்கம். இதில் பல வகைகள் உள்ளன. இதனை வீசிங் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். குளிர்காலத்தில் இது அதிகம் தாக்கும்.

✲ குளிர்ந்த தட்பவெப்பத்துடன் தூசி, ஒட்டடை போன்றவையும் அதிகரித்தால் இவை ஆஸ்துமாவை அதிகரிக்கும்.

✲ குழந்தைகளின் படுக்கை விரிப்புகள் தலையணை உறைகளை இரண்டு நாட்களுக்கு ஒரு முறையேனும் துவைப்பது அவசியம்.

✲ தூங்கும் அறையைச் சுத்தமாக தூசு இன்றி வைத்திருக்க வேண்டும். வீட்டில் உள்ள மின்விசிறிகளில் தூசு தங்காமல் துடைக்க வேண்டும்.

✲ குளிர் காற்றில் இருந்து காத்துக் கொள்ள கம்பளி உடை தேவைதான். ஆனால் சிலர் தேவைக்கு மிக அதிகமாக குழந்தைகளுக்கு கம்பளி ஆடைகளைப் போட்டு அவற்றைப் போர்த்தி மூச்சை அடைக்கும்படி செய்வர். இப்படிச் செய்வது தவறு. குழந்தைகள் மூச்சு விட எளிதாக மெல்லிய கம்பளி ஆடைகளை அணிவித்தால் போதும். உள்ளே லிக்ரா எனப்படும் லினன் வகைத் துணிகளிலான ஆடையை அணிவது நல்லது. (குளிர் காலத்தில் மட்டும் தான்)

✲ பாண், பயறு வகைகள், பால், தயிர், சொக்லேட், சொக்லேட் பவுடர், புளித்த பண்டங்கள், வறுத்த உணவுகளைத் தவிர்ப்பது நலம்.

✲ தேனீர், மோர், வேகவைத்த காய்கள், சூடான சூப் போன்றவற்றைச் சாப்பிடலாம், இடியப்பம், ரொட்டி போன்றவற்றைச் சாப்பிடலாம். மோரைக் கூட சுடவைத்துச் சோற்றில் ஊற்றிச் சாப்பிடலாம். பூசணி, கத்தரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டிக்காய் போன்ற நீர்ச்சத்துக் காய்களைத் தவிர்ப்பது நலம்.

✲ இரவில் நித்திரைக்குப் போகும் முன்பாக வயிறு நிறைய 'பாரமான' உணவுகளைச் சாப்பிடுவது தவறு. இரவு வேளைகளில் அரைவயிற்றுக்குச் சாப்பிடுவது நல்லது. பெரும்பாலும் 'லைட்டாகச் சாப்பிடுவது நல்லது.

✲ வயிற்றுத்தசைகளுக்கு வேலை கொடுக்கும் வகையில் போசனம் செய்வதும், மூச்சை உள்ளிழுத்து வெளியே விடும் மூச்சுப் பயிற்சிகள் செய்வதும் நல்லது.

## அருந்திப் பாருங்கள்
## அன்னாசிப்பழப் பாயாசம்



இனிப்பான அன்னாசிப்பழத்தின் தோலை அகற்றி விட்டு, தேங்காய்த் துருவியில் வைத்து துருவியோ அல்லது சிறு சிறு துண்டுகளாக நறுக்கியோ எடுத்துக் கொள்ளுங்கள். அதில் தண்ணீர் விட்டு நன்றாகப் பிசைய வேண்டும். பின் அதனை மெல்லிய துணியால் வடிகட்டிக் கொள்ளுங்கள்.

250 கிராம் சீனியை அன்னாசிப்பழச் சாற்றில் கலந்து, அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். அடிப்பிடியாமல் கிளறி விட வேண்டும்.

பாதாம்பருப்பை ஊறவைத்து தோலை நீக்கிவிட்டு, அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்து 1/4 லீட்டர் பாலில் கலந்து வைக்க வேண்டும்.

அன்னாசிப்பழச்சாறு கொதித்துக் கெட்டியானதும், கீழே இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, தயார் செய்து வைத்துள்ள பாலை அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். அது நன்றாகக் கொதித்ததும் இறக்கி, தயார் செய்து வைத்திருக்கும் அன்னாசிப் பழச்சாற்றில் கலக்க வேண்டும்.

பேரீச்சம்பழத்தின் கொட்டையை நீக்கி, சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப் பாயாசத்தில் போட வேண்டும். வறுத்த முந்திரிப் பருப்பையும் பாயாசத்தில் போட வேண்டும்.

இந்தப் பாயாசத்தை அருந்திப் பாருங்கள். சுவையோ சுவை என்பீர்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள், ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IZ

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-02-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

72

# மோனிக்கா என் மோனிக்கா

வாஷிங்டனில் தான் வசித்த 'வாட்டர் கேட்' இல்லத்தை விட்டு நியூயோர்க்கில் வசித்த தனது தாயார் மார்சியாவின் இருப்பிடத்துக்குப் புறப்படுவதற்காக தன்னுடைய பல பொருட்களை மோனிக்கா முன்னதாகவே பொதியாக்கி அனுப்பியிருந்தாள். அப்பொருட்களுடன், தனது உடைகளையும், அனுப்பியிருந்தாள். தொலைக்காட்சியில் அன்று காட்டப்பட்ட 'அந்த உள்ளாடை'யும் தனது தாயாரின் வீட்டுக்குப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்திருக்கும் என்றே மோனிக்கா நம்பியிருந்தாள். ஆனால் 'அந்த உள்ளாடை இன்று தொலைக்காட்சியில் காட்டப்படுகிறதே. இது எவ்வாறு சாத்தியப்படும்?' என்று மோனிக்கா சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, மார்சியாவின் எண்ணங்கள் வேறு விதமாக ஓடிக்கொண்டிருந்தன.

'இது என்ன புதுக்கரடி? மோனிக்காவின் உள்ளாடை ஏன் தொலைக்காட்சியில் காட்டப்படுகிறது?' என்று முதலில் யோசித்தாள். சற்று நேரத்தில் நிலமையை சுதாகரித்துக் கொண்டு, மகளிடம் உண்மையை எவ்வாறு கேட்டறியலாம் என்று தயங்கினாள். ஓரளவு துணிந்து, "மோனிக்கா இந்த ஆடை உன்னுடையது தானா? அது இப்போது எங்கே?" என்று கேட்டாள்.

"என்னுடைய ஆடைகளுடன் தான் வைத்திருக்கிறேன்!" என்றதும், மார்சியாவுக்கு பெரும் அச்சம் தோன்றியது. நியூயோர்க்கிலுள்ள தனது இல்லத்தை புலனாய்வுத்துறையினர் உடைத்து உள்ளே புகுந்து 'அந்த ஆடை'யை எடுத்திருப்பார்களோ?' என்றுதான் மார்சியா சந்தேகித்தாள்.

வாஷிங்டனுக்கு தனது சகோதரியுடன் புறப்படும்போது தனது வீட்டை பத்திரமாகப் பூட்டி சாவிகளை தன்னுடன்தான் எடுத்துச் சென்றிருந்தாள். சந்தேகம் ஏற்பட்டமையினால் உடனடியாகவே தன் கைப்பையைத் திறந்து, சில நாட்களுக்கு முன்னர்தான் வைத்திருந்த வீட்டுச் சாவிகள் இருக்கின்றனவா; என்று பரிசோதித்துப் பார்த்தாள். அவை அத்தனையும் பத்திரமாகவே இருந்தன.

புலன் விசாரணை அதிகாரிகள் நியூயோர்க்கிலுள்ள மார்சியாவின் இல்லத்தை உடைத்து உள்ளே புகுந்து பல பொருட்களை எடுத்துச் சென்றிருப்பார்கள். அங்கு வைக்கப்பட்டிருந்த மோனிக்காவின் ஆடைகள் உட்பட அவளுடைய அன்றாடம் பாவனைக்குரிய பொருட்கள் யாவும் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கும். மோனிக்காவின் ஆடைகள் அனைத்தும் கூட எடுத்துச் செல்லப்பட்டிருக்கும். அவற்றுள் இருந்த 'அந்த ஆடை'யும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கும்! மோனிக்கா அந்த ஆடையை எதற்காக தன்னுடன் வைத்திருக்க வேண்டும்? அதனை இல்லாமல் செய்திருக்கலாம் அலலது சலவைக்குப் போட்டிருக்கலாம். அதை எதற்காக இவள் பத்திரப்படுத்தியிருக்கிறாள்?' என்று மார்சியா நொந்து கொண்டாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பேர்ணி லிவின்ஸ்கி, தனது மகளுடைய சட்டச்சிக்கலிலிருந்து அவளை விடுவிக்க ஏற்பாடு செய்திருந்த சட்டவல்லுநர் பில் கின்ஸ்பேர்க் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து வாஷிங்டன் வந்து மோனிக்காவைப் பார்த்து, அவள் மீதான குற்றச்சாட்டுகளை அறிவதற்கு ஆறு தடவை விமானப் பயணத்தை மேற்கொள்ள முயன்றார். ஆனால் எந்த விமானத்திலும் அவருக்கு பயணம் மேற்கொள்ள முடியவில்லை. அவருடைய வாஷிங்டன் பயணத்தை மறைமுகமாக தடுப்பதற்காகவே புலனாய்வுத் துறையினர் விமான நிலையத்தில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதனை அறிந்ததும் கின்ஸ் பேர்க் ஆத்திரமடைந்தார். வேறு வழியில்லாமல் பிற்ஸ்பேர் சென்று அங்கிருந்து வாஷிங்டன் புறப்பட்டார்.

மோனிக்காவின் குற்றச்சாட்டுக்களைப் பற்றி விசாரித்தறிய அவளிடம் செல்வதற்கு இடம் தரலாகாது என்று மத்திய புலனாய்வுத் துறையினரான F.B.I. இத்தகைய சிக்கல்களை ஏற்படுத்தி இருப்பதனால், 'மோனிக்கா மிகப் பயங்கரமான அரசியல் குற்றம் செய்திருப்பாள் போல் தெரிகிறது' என்று சிந்திக்கலானார்.

செப்டெம்பர் மாதம் 17ம் திகதி சனிக்கிழமை விமான நிலையத்தில் கின்ஸ்பேர்க் வந்திறங்கியதும், அவரை வரவேற்க மோனிக்காவும் தாயாரும் வந்திருந்தனர். மூவருமாக றிட்ஸ் கார்ல்டன் ஹொட்டலில் கின்ஸ்பேர்க்குக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் கொண்டு போய் விட்டனர். விமான நிலையத்திலிருந்து ஹொட்டல் வரும் வழியிலெல்லாம் மார்சியாவும் மோனிக்காவும் தங்களை ஒற்றர்களுடைய கண்கள் வட்டமிடுகின்றனவோ என்று சந்தேகப்பார்வை பார்த்துக்கொண்டே இருந்தனர்.

கின்ஸ்பேர்க்குக்காக ஒதுக்கப்பட்ட அறையை மூவரும் சென்று அடைந்ததும் மோனிக்கா அங்கிருந்த தொலைபேசி ஒன்றை நாடி லொஸ் ஏஞ்சல்சிலுள்ள தனது தந்தையார் பேர்ணி லிவிங்ஸ்கியுனுடன் பேசுவதற்கு ஒழுங்கு செய்தாள். சற்று நேரத்துக்கெல்லாம் பேர்ணி தொடர்பு கொண்டார். அவரால் தனக்கு உதவுவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட அவருடைய நண்பரான கின்ஸ் பேர்க் வாஷிங்டன் வந்துவிட்டதாகத் தெரிவித்தாள்.

அப்பாவும் மகளும் இவ்வாறு உரையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த கின்ஸ்பேர்க் ஓடிச் சென்று தொலைபேசியைப் பறித்தார். இதனால் மோனிக்கா அதிர்ச்சி அடைந்தாள். கின்ஸ்பேர்க் லிவின்ஸ்கியிடம் "தயவு செய்து உங்கள் மகளுடன் இன்றுள்ள நிலையில் எதுவும் பேச வேண்டாம். உங்கள் மகள் உங்களுடன் மட்டுமல்ல, வேறு எவருடன் தொடர்பு கொண்டாலும் கென்னத் ஸ்டாரின் ஆட்கள் அவர்களையும் கைது செய்யத் தயங்க மாட்டார்கள். எனவே மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியங்களை நான் கவனிக்கிறேன். அமைதியாக இருங்கள்!" என்று கூறிவிட்டு அவர்களுடைய அலுவலகத்துக்கு சென்றிருந்தார். அப்போது அந்த அலுவலகத்தில் கிடந்த அன்றைய திகதி இட்ட 'நியூஸ்வீக்' சஞ்சிகையைப் புரட்டிப் பார்த்தார். அதில் மைக்கேல் இசிக்கொ .ப் எழுதிய கிசுகிசு கதை ஒன்றும் அவருடைய கண்களை உறுத்தியது. 'வெள்ளை மாளிகை பயிலுனர் பயிற்சிக்காகச் சேர்ந்த இளம் பெண்ணுடன் ஜனாதிபதியின் லீலைகள்' என்ற தலைப்புடன் அந்தக் கிசுகிசு பிரசுரமாகி இருந்தது.

இந்தக் கிசுகிசுவைப் படித்த கின்ஸ் பேர்க், மோனிக்கா-கிளின்டன் பற்றிய இந்தத் தகவல் தான் தனது கட்சிக்காரரான மோனிக்காவை கென்னத் ஸ்டாரிடம் மாட்டிவிட்டுள்ளது என்று உணர்ந்து கொண்டார். இதனை மனதில் வைத்துக்கொண்டே மோனிக்கா விசாரணையில் அவளுடைய கட்சிக்காக தான் வாதாடப் போவதாக அறிவித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

## "கிளின்டன் உன்னைக் கெடுத்து விட்டார்"



மோனிக்காவிடம், "இவ்வாறு எவருடனும் நீ தொலைபேசியில் எதுவும் பேசாதே!" என்று கூறி, தொலைபேசியை வைத்துவிட்டு "இனி மேல் நீ எது செய்வதானாலும், எங்கு செல்வதானாலும் எவருடன் பேசுவதானாலும் என்னுடன் முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும்!" என்று கடுமையாக எச்சரித்தார்.

இதற்கிடையில் பேர்ணியும் அவருடைய இரண் டாவது மனைவி பார்பறாவும் ஹவாய்க்கு விடுமுறையைக் கழிப்பதற்காக அப்போது திட்டமிட்டிருந்தனர்.

தன்னுடைய மகளுடைய விவகாரங்களைக் கவனிப்பதற்காக வாஷிங்டனுக்கு வருவதற்கு அவர் விரும்பினார்.

ஆனால் அவ்வாறு வாஷிங்டனுக்கு வந்தால் மோனிக்காவின் நிலைமை மேலும் சிக்கலாகலாம் எனவே கணவனும் மனைவியும் திட்டமிட்ட படி ஹவாய்க்கே செல்லலாம் என்றும், தான் விசாரணை தொடர்பாக நடைபெறும் சம்பவங்களை தொலைபேசி மூலம் அவ்வப்போது தெரியப்படுத்துவதாகவும் கின்ஸ்பேர்க் லிவின்ஸ்கியிடம் கூறினார்.

ஜனவரி 18ம் திகதி கின்ஸ்பேர்க் கென்னத் ஸ்டாரின் உதவியாளர்களைப் பார்ப்பதற்காக சென்றார்.

கென்னத் ஸ்டாரின் குழுவினர் கூறிய விவரங்களையும் மனதில் போட்டுக் கொண்டார்.

அடுத்த நாள் வெளியாகிய மற்றுமொரு பத்திரிகையில், 'ஜனாதிபதி கிளின்ரனின், விவகாரத்தில் மோனிக்கா என்ற பெண்மணியும் மாட்டிக் கொண்டாள்' என்ற கருத்துப்பட ஒரு தகவல் வெளியாகி இருந்தது. கின்ஸ் பேர்க் நேற்றுப் படித்த கிசுகிசுவுடன் இன்று வெளியாகிய தகவலையும் பொருத்திப் பார்த்து, தான் கருதியபடிதான் மோனிக்கா மாட்டியிருக்கிறாள் என்று தீர்மானித்துக் கொண்டார்.

மார்சியாவையும் மோனிக்காவையும் அழைத்துக்கொண்டு ஓர் உணவு விடுதிக்குச் சென்றார். அங்கு தனியானதோர் அறையை எடுத்து அதனுள் மூவரும் சென்று அமர்ந்து கொண்டனர். மூவரும் அமர்ந்ததும் கின்ஸ் பேர்க் சற்றுக் கடுமையாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் மோனிக்காவின் உள்ளம் உறைந்து கொண்டது. சில நிமிட நேரங்கள் அவளால் மயக்க நிலையிலிருந்து மீள முடியாமல் போய்விட்டது. அப்படியே தன்னுடைய தாயாரின் தோள்மேல் சாய்ந்து விட்டாள்.

"மோனிக்கா அந்தக் கிழட்டுப்பயல் கிளின்டன் இளவயது மங்கையான உன்னை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி விட்டான் என்றுதான் நான் உனக்காக வழக்காடப் போகிறேன்!"

இவ்வாறு கின்ஸ்பேர்க் மோனிக்காவின் தலையில் ஓங்கிக் குத்தியதைப்போல் கூறினார்.

**(வருவாள்)**


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**நானுஓயா வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | திருமதி கி. மாலினி, இல. 20, சேர்ச் வீதி, பலாங்கொடை. |


பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# காந்தி கொடுத்த மதிப்பு

பாப்பா முரசு சிறுகதை



பிறர் மனம் துன்பப்படக் கூடாது என்பதற்காக எத்தனையோ கஷ்டங்களை இன் முகத்துடன் ஏற்றுக் கொண்டவர் மகாத்மா காந்தி.

அவரது வாழ்வில் நடந்த ஒரு சம்பவம் இது:

ஒரு சமயம் வெள்ளையரை எதிர்த்து அவரது 'யங் இந்தியா' என்ற பத்திரிகையில் சில கட்டுரைகளை எழுதியதாக, வெள்ளையர், மகாத்மா காந்தியை அவரது சபர்மதி ஆசிரமத்தில் கைது செய்து வழக்குத் தொடர்ந்தனர்.

நீதிமன்றத்தில் மகாத்மா காந்திக்கு ஆறு ஆண்டுகள் சிறை தண்டனை கிடைத்தது.

காந்தி சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒரு நாள்–

ஒரு வெள்ளை அதிகாரி மிடுக்கான உடை அணிந்து காந்தியைச் சந்தித்துப் பேசுவதற்காக சிறைக்கு வந்தார்.

காந்தியின் அறைக்கு அவர் வந்த போது, காந்தி ராட்டையால் நூல் நூற்றுக் கொண்டிருந்தார்.

'டக்... டக்...' என்று பூட்ஸ் சத்தம் தன் அறைக்குள் கேட்டதும், சற்று நிமிர்ந்து பார்த்தார் காந்தி.

ஒரு வெள்ளை அதிகாரி தன்னை நாடி வருவதை அறிந்து, எழுந்து அவரை வரவேற்று அமர்த்தினார் காந்தி. பிறகு வெள்ளை அதிகாரி ஏதேதோ கேள்விகள் கேட்க, ஒவ்வொரு கேள்விக்கும் காந்தி தெளிவான பதிலைச் சொன்னார்.

இருவரும் நெடு நேரம் பேசினார்கள்.

அதிகாரி விடை பெற்றுச் சென்ற பின், காந்தி ஒரு வாளியில் தண்ணீர் எடுத்து வந்து, அதிகாரி வந்து சென்ற இடத்தைக் கழுவிச் சுத்தம் செய்தார்.

சிறை அறையில் அவருடன் இருந்த சிலர், அவரின் இந்த செயலைப் பார்த்து ஆச்சரியமடைந்தவர்களாக, "பாபுஜி! இந்த இடத்தை எதற்காகக் கழுவி சுத்தம் செய்கிறீர்கள்?" என்று கேட்டனர்.

"இது நான் எப்பொழுதும் அமர்ந்து என் பணியைச் செய்யும் இடமல்லவா? இது சுத்தமாக இருக்க வேண்டாமா?" என்றார் காந்தி.

மற்றவர்களுக்கோ இன்னும் ஆச்சரியம்.

"இந்த இடம் எவ்வித அசுத்தமும் படாமல் மிகவும் சுத்தமாகத்தானே இருக்கிறது!" என்று கேட்டனர்.

"இல்லை! இப்பொழுது இங்கு வந்து என்னுடன் பேசிவிட்டுப் போன அதிகாரி தனது பூட்ஸ் கால்களால் இந்த இடத்தை அசுத்தம் செய்து விட்டுப் போய் விட்டார். அதைத்தான் சுத்தம் செய்து கொண்டிருக்கிறேன்!" என்றார் காந்தி.


"நீங்கள் பூட்ஸ் காலோடு உள்ளே வர வேண்டாம். வெளியே கழற்றி வைத்துவிட்டு வாருங்கள் என்று அவரிடம் நீங்கள் சொல்லியிருக்கலாமே பாபுஜி!" என்று கேட்டனர் மற்றவர்கள்.

காந்தி ஒரு புன்னகையோடு அவர்களை பார்த்து, "நான் அப்படிக் கேட்டிருந்தால், அவர் மனது எத்தனை துன்பப்பட்டிருக்கும். அதனால்தான், அவரது செயலுக்கு எவ்விதத் தடையும் செய்யாமல், அவர் வந்து சென்ற பின், இடத்தைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறேன்." என்றார்.


"தன்னைத் துன்புறுத்தும் வெள்ளையருக்கும் மதிப்புக் கொடுக்கிறாரே!" என்று காந்தியின் செயலைக் கண்டு மற்றவர்கள் பெரிதும் ஆச்சரியப்பட்டனர்.



பசியோடு இருக்கும் சிலந்தியிடம் பூச்சி ஒன்று வசமாகச் சிக்கிக் கொண்டு விட்டது. கையில் கத்தி, கரண்டியோடு பூச்சி இருக்குமிடத்தைத் தேடிச் செல்லும் சிலந்திக்கு வழிகாட்டுங்கள்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **03.02.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **379**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 377

பரிசுக்குரியவர்:
இராஜேந்திரன் நிர்மலராஜ்,
அல்–ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சி.தினேஸ்குமார்,<br>தோணிக்கல், வவுனியா. | சோ. அம்பிகைராஜ்,<br>விபுலாநந்த தமிழ் மகா வித்., தெமட்டகொட. |
| ரசீது ஒமர்டீன்,<br>நியங்கம வீதி, நேகம்பஹ. | என்.கோகுலராஜன்,<br>கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |
| ஏ. டில்ஷான்,<br>நம்மாதா பாடசாலை, நுவரெலியா. | பி. ஷர்மிலி,<br>சாந்த கிளேயர் மகளிர் மகா வித்., வெள்ளவத்தை. |
| ஏ. சசிகலா,<br>சரஸ்வதி மகா வித்தியாலயம், புஸல்லாவ. | என். ஹரிசங்கர்,<br>இந்து தேசிய பாடசாலை, மாத்தளை. |
| கு. சுஜீவன்,<br>தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | வே. புனிதராஜ் (கோபு),<br>இரத்னீலகல, தெவசிறிபுர, தலவாக்கலை. |

## புத்திசாலிப் பிராணிகள்

சில புத்திசாலிப் பிராணிகள் தங்களுக்கு எதிரிகளால் வரும் ஆபத்தைச் சக பிராணிகளுக்கு ஏதாவது ஒரு விதத்தில் தெரிவித்து விடுகின்றன. இதேபோல் உணவு இருக்கும் இடத்தையும் தமது சகாக்களுக்குத் தெரிவிக்கின்றன.

தண்ணீரில் வாழும் 'பீவர்' என்ற பிராணி தனது வாலால் தண்ணீரில் அடித்து, தனது எதிரியின் அபாயத்தைத் தனது சகாக்களுக்கு அறிவித்து விடும்.





லெமூர் குரங்குகள் ஓரிடத்தில் இருந்து, இன்னொரு இடத்திற்குச் செல்லும் முன்பு தன் கையில் பெய்து தெளித்துக் கொள்ளும். இதனால் அது கையூன்றி நடக்கும் போது, அதன் அடையாளத்தை ஏனைய லெமூர்கள் கண்டுபிடித்து விடும். இதன் மூலம் ஒரு லெமூரின் இடத்தை ஏனைய லெமூர்கள் அறிந்து கொள்கின்றன.




ஒஸ்ரியா நாட்டைச் சேர்ந்த சில தேனீக்கள் ஒரு பூவில் தேன் அதிகம் இருப்பதைக் கண்டால், மற்றத் தேனீக்களை வரவழைக்க 'உய்ங்' என்ற சத்தத்துடன் '8' போடுவது போல வட்டமடித்துக் கொண்டிருக்கும். இதைப் பார்க்கும் மற்றத் தேனீக்கள் அந்த இடத்திற்கு விரைந்து செல்லும்.

## தெரிந்துகொள்ளுங்கள்

| | |
|---|---|
| மதுபானம் அதிகளவு உற்பத்தி செய்யும் நாடு | -சிலி |
| போதைபொருள் அதிகளவு உற்பத்தி செய்யும் நாடு | -கொலம்பியா |
| மதுவுக்கு அடிமையானவர் எடுக்கவேண்டிய விட்டமின் | -விட்டமின் 'பி' |
| முதல் விமான தபால் சேவை ஆரம்பமான நாடு | -ஐக்கிய அமெரிக்கா |
| உலகில் முதல் அணு ஆயுதத்தைக்கொண்ட நீர்மூழ்கிக்கப்பல் | -நெலடில்ஸ் சப்மேரினர் |
| கணிதத்தின் தந்தை | -ஆக்கிமிடிஸ் |
| பத்திரிகை அச்சடிக்கும் இயந்திரத்தின் பெயர் | -ரோட்டரி |

தொகுப்பு: மு.சக்திலேந்திரன், கொழும்பு-12



## மர்மத் தொடர்

“நிவேதிதா...! கொலையான தேவேந்திரனைப் பத்தி சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேல் விசாரணை பண்ணி என்கிட்ட முதல் ரிப்போர்ட்ட கொடுத்துட்டார். அந்த ரிப்போர்ட்டில் தேவேந்திரன் நார்ம்லஸ் பர்ஸன்... அப்பாவின்னு சொல்லியிருக்கான். கல்யாணத்துக்கு வந்திருந்த அத்தனை ரிலேடீவ்ஸையும் கதிர்வேல் என்கொயர் பண்ணியதில் ஒருத்தர் கூட தேவேந்திரனைப் பத்தி தப்பா சொல்லலையாம்... பட் என்னோட கேள்வி இதுதான். ஒரு நல்ல மனிதர் அதுவும் கல்யாண நாள் அன்னிக்கே தாலி கட்டறதுக்கு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மிகவும் கொடூரமான முறையில் எதுக்காக கொலை செய்யப்படணும்...? தேவேந்திரன் மேல யார்க்கு என்ன கோபம் இருந்திருக்க முடியும்....?”

“ஸார்... இன்னிக்கு கொலை நடந்த முதல்நாள். இந்த ஒரு நாளிலேயே எல்லா உண்மைகளும் வெளியே வந்துடாது. இன்னும் ரெண்டு நாள் போனா போதும் தேவேந்திரனுக்குப் பின்னாடி ஒளிஞ்சிகிட்டிருக்கிற ஒவ்வொரு உண்மையும் வெளியே எட்டிப்பார்க்க ஆரம்பிச்சுடும்....”

09

# மேனகாவின் மேகம்



கல்யாண மண்டபம் வந்தது. மண்டபம் வெறிச்சோடி போயிடுச்சு. காவல்துறை தடவியல் துறை சம்பந்தப்பட்ட ஆட்கள் மட்டும் ஆங்காங்கே தெரிந்தனர்.

இன்ஸ்பெக்டர் பராத்தகன், ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதா இரண்டு பேரும் இறங்கி கல்யாண மண்டபத்துக்குள் நுழைய, சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேல் எதிர்கொண்டார்.

பராத்தகன் கேட்டார்.

“என்ன கதிர்வேல்....! ஃபர்தரா யாரையாவது என்கொயர் பண்ணீங்களா.... ஏதாவது யூஸ்புல் க்ளு கிடைச்சுதா.”

கதிர் சொன்னார்.

“ஸார்! ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முந்திதான் ஒரு தகவல் கிடைச்சுது!”

“என்ன தகவல்....”

“இந்த கல்யாண மண்டப மானேஜரை என்கொயர் பண்ணும் போது அவர் ஒரு விஷயம் சொன்னார் ஸார். நேத்து ராத்திரி பதினொரு மணி சுமாருக்கு கல்யாண மண்டபத்துக்கு ஒரு ஃபோன்கால் வந்ததாகவும் ஒரு பெண் பேசினதாகவும் அந்தப் பெண் தேவேந்திரனுடன் அவசரமா பேச விரும்பினதாகவும் சொன்னார். மானேஜர் உடனே மாப்பிள்ளை தேவேந்திரனுக்கு தகவல் கொடுத்திருக்கார். அவரும் வந்து ஃபோன்ல பேசியிருக்கார்.”

“யார் அந்தப் பெண்....?”

“பேர் சொல்லியிருக்கா. மானேஜர் அந்தப் பேரை ஒரு துண்டு சீட்ல எழுதி மேஜை மேல வெச்சிருந்தாராம். பேர் ஞாபகத்துக்கு வரலை, தேடிக்கிட்டிருக்கார் அந்த துண்டுச்சீட்டை”

மானேஜர் அறை இருந்த பக்கம் மூன்று பேரும் நடக்க நடக்கவே எதிரே அந்த வழுக்கைத்தலை மனிதர் வந்தார். கதிர்வேல் சொன்னார்.

“அதோ...! மானேஜரே வந்துட்டார்!” அவர்களை நெருங்கிய மானேஜரின் முகம் லேசாக வியர்வையில் பொடித்திருந்தது. கதிர்வேல் ஆர்வமாய் ஏறிட்டார்.

“ஸார்... அந்த் துண்டுசீட்டு கிடைச்சுருச்சு....”

“ஃபோன் பண்ணின பெண்ணோட பேர் என்ன?”

“மேனகா.. ஸார்”

.......

இன்ஸ்பெக்டர் பராத்தகன் அந்தக் கல்யாண மண்டப மானேஜரிடம் நிமிர்ந்தார்.

“பேர்... என்ன சொன்னீங்க... மேனகாவா?”

“ஆமா...ஸார்...”

“கல்யாண மாப்பிள்ளை தேவந்திரன் ஃபோன்ல அந்த மேனகாகிட்ட என்ன பேசினார்...?”

“அவங்க பேசினதை நான் கேட்கலை. ஃபோன் வந்திருக்கிறதா கூப்பிட்டு விட்டுட்டு நான் மண்டபத்துக்கு பின்பக்கமா இருக்கிற ஜெனரேட்டரை ரிப்பேர் பார்க்கப் போயிட்டேன்.”

“சரி... அந்த மேனகா எந்த ஃபோன் நெம்பரிலிருந்து பேசினாங்கிற விபரமாவது தெரியுமா?”

“தெரியாது ஸார்...”

“தேவேந்திரன் மேனகாகிட்ட ஃபோன்ல பேசும்போது ஆபீஸ் ரூம்ல வேற யாராவது இருந்தாங்களா?”

“இல்லை...”

“கதிர்வேல்...!” பராத்தகன் சப் இன்ஸ்பெக்டர் கதிர்வேலிடம் திரும்ப அவர் “எஸ்...ஸார்...” என்றபடி அட்டென்ஷனுக்கு வந்தார்.

“மண்டபத்துல தேவேந்திரனோட ஃபேமிலி மெம்பர்ஸ், ஃப்ரண்ட்ஸ் யாராவது

**கிரைம்சக்கரவர்த்தி**

**ராஜேஷ்குமார்**

இருக்காங்களா...?”

“இருக்காங்க ஸார்... விசாரணைக்காக சில நபரை நிறுத்தி வெச்சிருக்கேன்.”

“அவங்களைக் கூட்டிக்கிட்டு வாங்க...”

கதிர்வேல், தலையசைத்துவிட்டு வேகவேகமாய்ப் போய் மண்டபத்தின் முன்பக்க ஹாலில் இருந்த பதினைந்து பேர் அடங்கிய ஒரு சின்ன கும்பலைக் கூட்டிக் கொண்டு வந்தார். அதில் ஐந்து பேர் பெண்கள். எல்லோரும் ஏறக்குறைய அழுது களைத்திருந்தார்கள்.

பராத்தகன் எல்லோரையும் பொதுவாய் ஒரு பார்வை பார்த்துக்கொண்டு கேட்டார்.

“நேத்து ராத்திரி பதினொரு மணி சுமாருக்கு மேனகாங்கிற ஒரு பொண்ணு இந்தக் கல்யாண மண்டபத்துக்கு ஃபோன் பண்ணி தேவேந்திரன் கிட்ட பேசியிருக்கா. அந்தப் பொண்ணு யார்ன்னு உங்கள்ல யார்க்காவது தெரியுமா?”

கும்பலில் மௌனம்.

பராத்தகன் சில விநாடிகள் கழித்து மறுபடியும் கேட்டார். “ம்... சொல்லுங்க... தெரியுமா... தெரியாதா...?”

எல்லோரும் ‘தெரியாது’ என்கிற மாதிரி தலைகளையாட்ட பராத்தகன் சின்னதாய் ஒரு புன்னகை பூத்தார். எல்லோரையும் பார்வையால் நனைத்தபடியே நடை போட்டவர் அந்த இளைஞனுக்குப் பக்கத்தில் வந்து நின்றதும் கேட்டார்.

“உம் பேர் என்ன...?”

“பூபால் ஸார்...”

“நீ தனியா அப்படி போய் நில்லு...”

“எ...எதுக்கு ஸார்...?”

“போய்..நில்லு... சொல்றேன்.”

அந்த பூபால் தயக்கமாய் நடந்து போய் தள்ளி நிற்க இன்ஸ்பெக்டர் பராத்தகன் எதிர்திசையில் நின்றிருந்த இன்னொரு இளைஞரிடம் போனார்.

“உம் பேர் என்ன...?”

“மோகன் ஸார்”

“நீ பூபாலுக்கு பக்கத்துல போய் நில்லு.”

“மோகன் தயங்க பராத்தகன் அவன் தோள் மேல் கையை வைத்து “ம்...போ..! காரணம் இல்லாமே நான் எதையும் சொல்லமாட்டேன்...”

மோகன் பூபாலுக்குப் பக்கத்தில் போய் நின்றதும், பராத்தகன் மற்றவர்களை போகும்படி சொல்லிவிட்டு, அந்த இரண்டு பேரிடமும் திரும்பி வந்தார். சில விநாடிகள் வரை அவர்களை மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மெல்லியக் குரலில் கேட்டார்.

“இப்ப சொல்லுங்க...! அந்த மேனகா யாரு?”

பூபால் படபடத்தான்.

“நாங்கதான் தெரியாதுன்னு சொல்லிட்டோமே ஸார்?”

“ரெண்டு பேருமே தெரியாதுன்னு தலையாட்டினீங்க. நான் பார்த்தேன். அதுக்கு முன்னாடி இன்னொன்னையும் நான் பார்த்துட்டேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கும்பலை நான் பொதுவா ஒரு பார்வை பார்த்தபடி மேனகாவை உங்கள்ல யார்க்கு தெரியும்னு கேட்டேன். கேள்வியைக் கேட்டு முடிச்ச அந்த விநாடியே நீங்க ரெண்டு பேரும் மட்டும் கத்தி வீசினா மாதிரி சரேல்னு ஒரு பார்வை பார்த்துக்கிட்டீங்க. கண்களாலேயே ஏதோ ஜாடை காட்டிக்கிட்டீங்க. போலிஸ்காரன் ஒரு கேள்வியை கேட்கும்போதே அவரோட பார்வை எல்லாருடைய முகத்தையும் படிக்கும்னு உங்களுக்குத் தெரியலை. நான் உங்க ‘ரெண்டு பேரோட முகத்தையும் படிச்சுட்டேன்...”

பூபாலும் மோகனும் இப்போது நெற்றி நிமிர்ந்து உதடுகள் உலர்ந்து போயிருந்தார்கள்.

“ஸார்...ஸார்... அது... வந்து...”

“எனக்கு வேண்டியது உண்மை. சால்சாப்பு வேண்டாம். உங்க ரெண்டு பேர்க்கும் மேனகாவை தெரியுமா தெரியாதா...?”

“தெரியாது ஸார்...”

“கதிர்வேல்...”

“ஸார்...”

“இவங்க ரெண்டு பேரையும் ஜீப்ல ஏத்தி ஸ்டேஷனுக்கு கொண்டு போய் லாக்கப்புல உட்கார வையுங்க. உடம்புல துணி இருக்கக்கூடாது.”

பூபாலும் மோகனும் பதட்டமாய் கிறீச்சிட்டார்கள். “ஸ்டேஷனுக்கெல்லாம் எங்களை கொண்டு போகாதீங்க ஸார்...”

“அப்படீன்னா... உண்மையைச் சொல்லுங்க...”

பூபால் சில விநாடிகள் தயங்கி விட்டு, பின் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான்.

★★★

இன்ஸ்பெக்டர் குணசேகர் கேட்ட கேள்வியில் நிலை குலைந்துபோன பாட்ஷா எக் கச்சக்கமாய் பயந்தான்.

அவர் தன் கையில் வைத்திருந்த லாட்டியால் பாட்ஷாவின் தாடையை நிமிர்த்தி “ம்...சொல்லு” என்றார்.

பாட்ஷா அவஸ்தையாய் எச்சில் விழுங்கிவிட்டு தொடர்ந்தான்.

“ஸார்...ஸார்... இந்த மோதிரத்தை ரமேஷ்கிட்டயிருந்து நான் விலைக்கு வாங்கினேன்.”

“மோதிரத்துல ‘எம்’ன்னு போட்டிருக்கு. யார் இந்த ‘எம்’...?”

“எனக்குத் தெரியாது ஸார்...”

*மர்மம் தொடரும்....*

---

# இதுவும் ஒரு நடிகையின் கதை

09

ராணிஸ்ரீயின் மூக்கு பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் செப்பனிடப் பட்டது. ஒரு லட்சம் செலவு! ராணிஸ்ரீ வியர்வையில் கசங்கி, கொண்டு வந்த பணம்.

மூக்கு ஆப்பிரேஷனுக்குப் பிறகு ராணிஸ்ரீ லட்சணமாகி விட்டாள். போட்டோவில் பார்க்கும் போது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

திருத்தப்பட்ட மூக்கினால் பயன் தான் இல்லை. படம் வரவில்லை காத்திருந்ததில் இரண்டு வருடங்கள் விரயமானது தான் மிச்சம்.

மூச்சுத் திணறியது அவளுக்கு. அத்தனை மூர்க்கம்.

ஆனாலும் சகித்துக் கொண்டாள். இவன் தயவில் படம் கிடைக்கும் என்ற நப்பாசை! அது ஓடினால் நாலு படம் வரும். அதில இரண்டு ஓடினால் பத்து படம் வரும்.

களைத்து, கலைந்து கிடந்த ராணிஸ்ரீ மனசுக்குள் கணக்குப் போட்டாள்.

ராணிஸ்ரீயின் கணக்கு பிழையாகி விட்டது. இல்லை... தேவகாந்தன் பிழையாக்கி விட்டான்.



**சில திரைப்படங்களில் கதாநாயகிகளைப்பார்த்து அவர்கள் பெறும் பொருளாதார வசதிகளைப் பற்றி கேள்வியுற்று மூக்கின் மேல் விரலை வைக்காத எவருமிருக்க முடியாது. சுவரொட்டிகளிலும் விளம்பரங்களிலும் அந்த. நாயகியின் உருவத்தைப் பார்த்து கனவுகாணும் இளைஞர்கள் எத்தனைபேர் ஆனால் அந்த அழகு ஜொலிப்பில் பெண்ணின் வாழ்க்கையின் பின்னால் மறைந்துகிடக்கும் மர்மமான சோகங்களைப் பற்றி எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை.... பணமும் புகழும் படைத்த பல நடிகைகள் தற்கொலை செய்து தங்கள் உயிரையே மாய்த்து விடுகிறார்கள். இன்று முன்னணியில் ஜொலிக்கும் நடிகைகள் பலரின் பின்னணியை எடுத்துக் காட்டும் கதைகள் சிறிதளவு கற்பனைக் கலப்புடன் தொடராகத் தரப்படுகின்றன.**

மனசொடிந்து போனாள் ராணிஸ்ரீ. இப்படியே இருந்தால் சினிமா உலகம் என்னை மறந்துவிடும். அப்புறம் அம்மாவாகத்தான் நடிக்கக் கூப்பிடுவார்கள். பேசாமல் டி.வி. சீரியலில் நடிக்கப் போய்விடலாமா?’ என்ற சூழநிலையில்தான் தேவகாந்தனின் படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்தது. ஆனால் கதாநாயகி இல்லையாம். ஒரே ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆட வேண்டுமாம்!

“கால்ஷீட் இல்லைன்னு தட்டிக் கழிச்சிடலாம்... டான்ஸ் மட்டும் பண்ணினா அப்புறம் ஜென்மத்துக்கும் ஹீரோயின் சான்ஸ் வராது!”

“போடி பைத்தியம். வர்ற சான்ஸை ஏன் விடணும்? தேவகாந்தன் பத்துப் படம் கையில வைச்சிருக்கான். அவனோட பழக்கம் கெடச்சால் ரெண்டு படத்துக்காவது ரெகமண்ட் பண்ணுவானே... படத்துக்குப் படம் புதுசு புதுசா பாக்கற ப்ய அவன்!”

அம்மாவின் கணிப்பு மிகச் சரி.

“ரூம்ல தனியாத்தான் இருக்கேன். ப்ரீயா இருந்தா வாயேன் பேசிக்கிட்டிருப்போம்...”

பொள்ளாச்சியில், ஷூட்டிங் முடித்து ஹோட்டலுக்கு வந்ததும் இன்டர்காமில் கூப்பிட்டான் தேவகாந்தன். அவனது அழைப்பை அம்மாவிடம் சொன்னாள்.

“பார்த்து பக்குவமா நடந்துக்க... அப்பதான் சான்ஸ் குடுப்பான்.”

ராணிஸ்ரீயைப் புதுப் பெண்ணைப் போல் அலங்கரித்து அனுப்பி வைத்தாள்.

“பேருக்கேத்த மாதிரி ராணியாட்டம் இருக்கே... உனக்குப் படம் இல்லைங்கிறதை நினைச்சால் வருத்தமா இருக்கு. கவலைப் படாதே... அடுத்து என் ப்ரண்டுக்குத்தான் படம் பண்றேன். பேருக்குத்தான் அவன் புரட்யூஸர். என்னோட சொந்தப் படம்தான். அதுக்கு இன்னும் ஹீரோயின் பிக்ஸ் பண்ணலை உன்னையே கமிட் பண்ணச் சொல்றேன்.”

அவன் தந்த நம்பிக்கையிதான் அன்று நரக வேதனையைத் தாங்கிக் கொண்டாள். தொப்பையும், தெந்தியுமாக.. உடம்பா அது?

‘எனக்கு சான்ஸ் தருவதாக நம்பிக்கை தந்துவிட்டு, பம்பாய்க்காரிகளுக்கு சான்ஸ் கொடுத்திருக்கிறான். ராஸ்கல்! கருப்பன்னி!’

ஏமாற்றத்தை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. வன்மம் நெஞ்சுக்குள் நெருப்பாகக் கனன்றது.

ஏதோ தீர்மானத்துக்கு வந்தவளாக எழுந்தாள். ‘என்னை ஏமாற்றிய அவன் உருப்பட மாட்டான்.’ பீரோவைத் திறந்து, துணிக் குவியலைக் கிளறி எதையோ தேடினாள். அவன் படங்கள் ஓடக்கூடாது. அவனுடைய மார்க்கெட் தரைமட்டமாக வேண்டும். அந்த ஆல்பத்தைக் கண்டெடுத்தாள். ‘சோத்துக்கு லாட்டரி அடிக்கிற நிலமை வரணும் அவனுக்கு.’

**ஜெ.பிஸ்மி**

ஆல்பத்தைப் பரபரவென அவசரகதியில் புரட்டினாள். ‘என்னை மாதிரி எத்தனை பேரை ஏமாத்தி இருப்பான்.’ பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கொண்ட போட்டோகளுடன் பொள்ளாச்சியில் தேவகாந்தனுடன் எடுத்துக் கொண்ட போட்டோவும்இருந்தது.

‘அவனை நிக்க வச்சுச் சுடணும். ஆல்பத்திலிருந்த அந்த போட்டோவைச் சரக்கென்று பிய்த்தெடுத்தாள். சுடக்கூடாது. பொசுக்குனு செத்துடுவான். துண்டு துண்டா வெட்டிப் போடணும்.’

சமையலறையில் நுழைந்து, கேஸ் ஸ்டவ்வைப் பற்ற வைத்தாள்-‘பொறுக்கி, பொம்பளப் பொறுக்கி!’

தேவகாந்தனின் போட்டோவை, நீல ஜ்வாலையில் திணித்தாள். தீ பற்றியதும் போட்டோவைத் தூக்கிப் பிடித்தாள். குரூர திருப்தியுடன் அதையே வெறித்தாள்.

தேவகாந்தனின் உருவத்தை மெல்ல மெல்ல தீ அரித்தது. அணைந்தது. அதிலிருந்து பிணவாடை அடிப்பதுபோல் தோன்றியது ராணிஸ்ரீக்கு!

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 39

# எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

இரா. பத்மநாதன்

என்று தணியுமிந்த
சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள்
அடிமையின் மோகம்?
என்றும்
பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே
-வெள்ளைப்
பரங்கியைத் துரை என்ற
காலமும் போச்சே
என்றும்
அன்னியர் தமக்கடிமை
அல்லவே-நான்
அன்னியர் தமக்கடிமை
அல்லவே
என்றும்
சொந்த நாட்டிற்
பரர்க் கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி
அஞ்சிடோம்
என்றும்
ஆயிரம் உண்டிங்கு ஜாதி
-எனில்
அன்னியர் வந்து
புகலென்ன நீதி?
என்றும்,

இரண்டு வருடங்களுக்குப் பின்னர் சுதந்திர முழக்கம் செய்த பாரதியார்தான் 1906ம் ஆண்டில் வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்புப் பாடினார் என்றால், ஆச்சரிய மாக இல்லையா? அதுவும் எப்படி வாழ்த்தினார்....!?

வருக செல்வ!
வாழ்கமன் நீயே
வடமேற்றிசைக் கண்
மாபெருந் தொலையினோர்
பொற் சிறு தீவகப்
புரவலன் பயந்த
நற்றவப் புதல்வ!
நல்வர வுனதே.

மேதகு நீயும் நின்
காதலங் கிளியும்
வந்தினிது வாழ்ந்தீர்! என்
மனம் மகிழ்ந் ததுவே.

இப்படி பிரிட்டிஷ் முடியரசின் சின்னமாக வந்த வேல்ஸ் இளவரசரை ஏற்றிப் போற்றிய பாரதியார் பின் மன நிலையில் முற்றும் மாறுபட்டவரானார்.

1908ம் ஆண்டில் அவர் வெளியிட்ட 'ஸ்வதேச கீதங்கள்' என்ற நூலின் மற்றொரு பதிப்புக்கு அவரே மீண்டும் ஒரு சமர்ப் பணம் எழுதியிருந்தார். அதில் என்ன கூறினார்?

"ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கிய தொப்ப, எனக்கு பாரத தேவியின் சம்பூரண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தியுற உபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களுக்கு இச் சிறு நூலைச் சமர்ப் பிக்கிறேன்."

இதில் அவர் குறிப்பிட்ட குருவும் சிஸ்டர் நிவேதிதா தேவியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் தெளிவில்லை.

இதைத் தொடர்ந்து 1909 ஆம் ஆண்டில் அவர் மற்றொரு கவிதை நூலினை வெளியிட்டார். அதிலே தான் அவர் 'தேச பக்தி மார்க்கம்' என்பதை முதன் முதலாகக் குறிப்பிட்டார்.

அவர் எழுதியதாவது:

"நாட்டில் ஒரு புதிய ஆதர்சம்-ஓர் கிளர்ச்சி-ஓர் மார்க்கம் தோன்றுமேயானால், மேன் மக்களின் நெஞ்சனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரிய காந்த மலர் போல, அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன.

சென்ற சுபக்கிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமா கிய 'தேச பக்தி' என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல் லாம் உடனே புளகிதமாயின. நல்லோ ருடைய குணங்களிலே குறைவுடையவ னாகிய யானும் தேவியினது கிருபையால் அப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்"



பாரதியாருடைய இந்த வாசகத்தில் எவ்வளவோ விஷயங்கள் அடங்கியிருக் கின்றன. அவற்றை இதுவரை யாரும் என் னுடைய இந்தக் கண்ணோட்டத்தில் ஆராய வில்லை என்பதை இங்கு சுட்டிக் காட்டு வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேற்கூறிய வாசகத்தில் தான் பாரதி யார் முதன் முதலாக 'தேச பக்தி' என்ற நவீன மார்க்கத்தைப் பற்றிக் குறிப்பிடு கின்றார்.

அந்த நவீன மார்க்கத்தில், நவீன சமயத்தில், சேர்ந்து-அதாவது மதம் மாறி-அந்த மார்க்கத்தின் ஒரு முன்னணிப் பிர சாரகனாக பாரதியார் விளங்கியமையினாலே தான், அவர் பாடிய புதுமைக் கவிதைகள், புரட்சிக் கருத்துக்கள் அவருக்கு மகாகவி என்ற அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்தன. பழைய மொந்தையில் புதிய கள்ளை வார்த்த புலவன் தான் 'நான் கண்ட பாரதி!'

இமயம் முதல் குமரிவரையும், குஜ ராத்து முதல் ஹூக்ளி வரையும் பரந்து கிடக்கும் இந்திய உப கண்டத்தை பாரதியார் வெறும் மலையாகவும், மண்ணாகவும், வனமாகவும், நதியாகவும் மதிக்கவில்லை.

பாரதியாரின் தரிசனத்தில் இந்திய தேசம் பாரத மாதாவாகவும், பாரத தேவியாகவும் தெய்வீகத் தோற்றம் அளித்து நின்றது.

அந்த பாரத தேவியிடம், பாரத மாதாவிடம், பாரதியார் பக்திமிகக் கொண் டார். பற்றும் பரவசமும் கொண்டார்.

அந்த பாரத மாதாவை அவர் மிகுந்த பாச உணர்வோடு "எங்கள் தாய்" என்று சொந்தம் கொண்டாடினார்.

"எங்கள் தாய்" என்ற தலையங்கம் சூட்டி பாரத தேசத்தின் சிறப்பை பாரதி யார் பாடியிருப்பதுபோல வேற எந்தக் கவிஞரும் தமிழில் பாடியதில்லையென்று துணிந்து கூறலாம்.

தொன்று நிகழ்ந்த
தனைத்து முணர்ந்திடு
சூழ் கலை வாணர்களும்
-இவள்
என்று பிறந்தவள்
என்று ணராத
இயல் பினளாம்
எங்கள் தாய்
*
முப்பது கோடி
முகமுடையாள் உயிர்
மொய்ம்புற
வொன்றுடையாள்
-இவள்
செப்புமொழி
பதினெட்டுடையாள்
-எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்

என்று அவர் பாரத மாதாவை வர்ணிக்கும் அடிகளைப் படிக்கும் போது மெய் சிலிர்க்கின்றது.

அந்த பாரத மாதாவிடம், பாரத தேவியிடம் பக்தி செலுத்துவதைத்தான் பாரதியார் ஒரு மதமாகக் கொண்டார். அதனால் அவர் ஏனைய மத சம்பிரதாயங் களை எல்லாம் தகர்த்தெறிந்த ஒரு புரட்சி யாளராக விளங்கினார்.

பிராமணர் சமூகத்தில், சமய அனுஷ் டானங்களை எல்லாம் தவறாது கடைப் பிடிக்கும் பிராமணோத்தமரான ஸ்ரீ சின்ன சாமி ஐயருக்கு மகனாகப் பிறந்தவர் பாரதியார். உரிய உரிய வயதில் அவருக்கு சௌளம், உப நயனம் ஆதியாம் சடங்குகள் எல்லாம் நடைபெறத்தான் செய்தன.

ஆனால், பாரதியார் தேசபக்தி என்ற மதத்தில் சேர்ந்ததும் தமது குல ஆசார அனுஷ்டானங்களில் அர்த்தமற்றவையாகக் காணப்பட்டவற்றை எல்லாம் துணிவுடன் விட்டெறிந்தார்.

பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள் தனியாக முறுக்கு மீசை வைத்துக் கொள் வதில்லை. பாரதியார் வீரச் சுவையில் ஈடு பாடுடையவர். தேச விடுதலைக்காகப் போராடுபவர்களிடம் நிமிர்ந்த நெஞ்சம், 'நேர்கொண்ட பார்வையும் இருக்க வேண் டும்' என்று விரும்பியவர் அவர். ஆடவனு டைய வீரத்துக்கு அறிகுறி மீசை என்று சொல்லி முறுக்கிய அழகான மீசையை வைத்துக் கொண்டார். அதே வேளையில் பிராமண குலத்தவர் அணியும் பூணூலை அறுத்தெறிந்து விட்டார்.

தான் பக்தி செலுத்திய பாரததேவி அடிமைத்தளையில் பிணிப்புண்டு கிடைக் கிறாள்-அவள் விலங்கை அறுத்தெறிய வேண்டும். அதற்கு பாரத மாதாவின் புத்திரர்கள் அனைவரும் சாதிபேதம், இனபேதம் இன்றி ஒருமித்துப் போராட வேண்டும் என்பதே அவர் கோட்பாடாக இருந்தது. Home-rule. Independence, Liberation என்ற ஆங்கிலப் பதங்கள் அர சியல் மேடைகளில் அடிபடுவதற்கு ஆரம்ப மான நாட்கள் அவை. சுயாட்சி, சுதந்திரம், விடுதலை என்று தமிழ் நாட்டில் இவை தமிழாக்கப்பட்டு பேச்சிலும் எழுத்திலும் இடம் பெறலாயின.

சுதந்திரத்தையும் விடுதலையையும் தமது தேசியப் பாடல்களில் கொஞ்சம் தாராளமாகப் பயன்படுத்தினார் பாரதி யார். இது வழக்கத்துக்கு மாறான ஒரு புதுமை யாக அமைந்தது.

பாரதியார் தேசபக்தி மார்க்கத்தின் சுவிசேஷப் பிரசாரகரான பின்னர் அவர் கனவு நினைவு எல்லாம் பாரத மாதாவின் விடுதலையைப் பற்றியதாகவே இருந்தன.

தெய்வப் பாடல்கள் பாடினால் கூட அவர் விடுதலை வேண்டும் என்பதை எங்கோ ஓர் இடத்தில் புகுத்தியே பாடினார்.

"ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்" என்பது ஒரு தோத்திரப் பாடல். அதில் முதற் கண்ணி விநாயகருக்கு உரியது. அந்தப் பாடலிலே எதற்கும் தலைவணங்காத பாரதியார் மிகவும் அடிபணிந்து கணபதியினுடைய இரு கால் களையும் பிடித்துக் கொண்டு கெஞ்சுகிறார்.

எதற்கு? லிபரேஷனுக்கு!

"அப்பா விநாயகரே எங்களுக்கு விடு தலை வேண்டும். அப்போது தான் எங்க ளுக்கு மகிழ்ச்சி உண்டாகும்" என்கிறார்.

கணபதி ராயன்
-அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந்திடவே
-விடுதலை
கூடி மகிழ்ந்திடவே,.

என்பது பாரதியார் வாக்கு.

விடுதலை வேட்கைக்கு இப்படிப் பிள்ளையார் சுழிபோட்டு ஆரம்பித்த பாரதி யார் பின்பு சுதந்திரம் என்பதை ஒரு தெய்வமாக்கிப் பொழிந்து தள்ளியிருக்கிறார்.

வீர சுதந்திரம்
வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள் வாரோ?
-என்றும்
ஆரமுது உண்ணுதற்கு
ஆசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ?
**
விண்ணில் இரவிதனை
விற்று விட்டு எவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
-கண்ணிலும் இனிய சுதந்திரம் போன
பின் கைகொட்டிப் பிழைப்பாரோ?
**
மண்ணில் இன்பங்களை விரும்பிச்
சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரமட்
வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?
என்றும்
என்று தணியுமிந்த
சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள்
அடிமையின் மோகம்?
என்றெமது அன்னை கை
விலங்குகள் போகும்?
என்றெமது இன்னல்கள்
தீர்ந்து பொய்யாகும்?
என்றும்
இதந்தரு மனையில் நீங்கி
இடர்மிகு சிறைப் பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத்து இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே.
**
தேவி! நின் ஒளிபெறாத
தேயம் ஓர் தேய மாமோ?
ஆவியங்கு உண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கம் உண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வே தங்கள் உண்டோ?
பாவியர் அன்றோ நின்றன்
பாலனம் படைத்திலாதோர்.
என்றும்
எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு-
நாம்
எல்லோரும் சமமென்பது
உறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி
ஊதுவோமே-இதைத்
தரணிக் கொல்லாம் எடுத்து
ஓதுவோமே
நாமிருக்கும் நாடு நம
தென்பதறிந்தோம்-இது
நமக்கே உரிமையாம்
என்பதறிந்தோம்-இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி
அடிமை செய்யோம்-பரி
பூரணுக்கே யடிமை
செய்து வாழ்வோம்.

என்றும் பாரதியார் சுதந்திர முழக்கம் செய்தார். **(இன்னும் வரும்)**

---

# வாரம் ஒரு வார்த்தை!

## 2. நம்பிக்கை

"நம்ம கையலே என்னங்க இருக்கு! எல்லாம் ஆண்டவன் செயல்"

அப்படின்னு சொல்லிக்கிட்டே காலம் தள்ளுறவங்க கொஞ்சப்பேர்!

"இதோ பாருங்க நீங்க யாரையுமே நம்பாதீங்க!

உங்களையே நம்புங்க! சொந்தக் காலாலே நில்லுங்க! அதுதான் நல்லது!"

அப்படின்னு சொல்லறவங்க கொஞ்சப் பேர்!

இது இரண்டுல எதை நம்பறதுன்னு தெரியாமே, குழப்பத்திலேயே காலத்தை ஓட்டி முடிச்சிடறவங்க நிறையப்பேர்.

நடக்கிறது எல்லாம் 'விதி'யோட கையிலே இருக்கா? நம்ம கையிலே இருக்கா?

ஒரு பெரியவர் சொல்றார்.

"எல்லாத்துக்கும் விதியையே நம்பிக் கிட்டு இருக்கக் கூடாது, சொந்த முயற்சி யும் வேணும்!

இப்ப உதாரணத்துக்கு...

நாம காசிக்குப் போகணும்ன்னு வச்சிக் குங்க!

ரயில்லே போகணும்.

ரயில் நேரப்படி புறப்பட்டு அதுபாட் டுக்கு போய்கிட்டேயிருக்கும்.

அது புறப்படுற நேரத்துக்குள்ளே அதைப் போய் பிடிக்கவேண்டியது நாம தான்.

ரயிலே நம்ம வீட்டு வாசல்லே வந்து நின்னு, நம்மளை தூக்கி வச்சிக்கிட்டுப் போய் காசியிலே இறக்கி விடாது! இறக்கி விட்டுட்டு "பத்திரமா போயி கங்கையிலே குளிச்சிட்டு வாங்க! உங்களை மறுபடியும் தூக்கிக்கிட்டுப் போயி உங்க வீட்டுலேயே விட்டுடறேன்! அப்படின்னு சொல்லாது!

ரயில்-அதுக்குன்னு போட்டிருக்கிற தண்டவாளத்துலே அதுபாட்டுக்குப் போயிக்கிட்டே இருக்கும்.

எந்த நேரத்துலே, எந்த இடத்துலே அதைப் போயி பிடிச்சி ஏறிக்கணுமோ அது உங்க கையிலே தான் இருக்கு!

ரயில்தான் விதி!

அதை சரியா பயன்படுத்திக் கிட்டு போய்ச்சேர வேண்டிய இடத்துக்குப் போறோம்லே-அதுதான் மனித முயற்சி.

எல்லாம் விதிப்படி நடக்கும்ன்னு சொல் லிக்கிட்டு பரீட்சை எழுதாமே நீங்க பாட் டுக்கு வீட்டிலே உட்கார்ந்திருந்தா பாஸா கிறது எப்போ?

ஒரு ஆள்! அவனுக்கு எப்பவுமே தன்மேலே நம்பிக்கை கிடையாது!

அவன் ஒரு தடவை மெட்ராஸ்லே யிருந்து புறப்பட்டு விழுப்புரத்துக்குப் போறான்!

ரயில்லேதான் போறான்.

எக்மோர்லே ராத்திரிக்கு 9 மணி வாக்கிலே புறப்படற ஒரு ரயில்!

சரியான நேரத்துக்கு எழும்பூர் ஸ்டேஷ னுக்குப் போயிட்டான். ரயில் நின்னுக்கிட்டி ருந்தது... கூட்டம் அதிகம். ஏறிக்கிட் டான். மேலே 'பர்த்'லே கொஞ்ச இடம். அதுமேலே ஏறி படுத்துக்கிட்டான்!

அவன் விழுப்புரத்திலே இறங் கணும்!

ஆனா தூங்கிப் போயிடுவோமோங் கற பயம்!

கீழே, சீட்லே சிலபேரு உட்கார்ந்திருந் தாங்க, அதிலே ஒருத்தருகிட்டே "சார் நீங்க எந்த ஊருக்குப் போகணும்?"ன்னு கேட்டான்.

"நான் தஞ்சாவூருக்குப் போறேன்"னாரு அவரு.

"சார் அப்படீன்னா நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்"ன்னான்.



"என்ன செய்யணும்? சொல்லுங் க"ன்னார்!

"சார் நான் விழுப்புரத்துலே இறங்க வேண்டியவன். அதனாலே விழுப்புரம் வந்ததும் என்னை மறந்துடாமே இறக்கி விட்டுடுங்க"ன்னான்.

"ஏங்க... உங்களுக்கு விழுப்புரம் தெரி யாதா?"ன்னார்.

"அப்படி இல்லீங்க! நான் தூங்கிப் போயிடுவேன். தூங்கினா முழிச்சிக்கிறது எனக்க ரொம்ப கஷ்டம்"ன்னார்.

"அப்படீன்னா விழுப்புரம் வந்ததும் நான் உங்களை தட்டி எழுப்பறேன்.. நீங்க முழிச் சிக்கலேன்னா என்ன பண்றது?"ன்னார்.

"சார்... நீங்க அதுக்காக கொஞ்ச மும் கவலைப்படாதீங்க! எழுப்பிப் பாருங்க... நான் முழிச்சிக்கலேன்னா... எப்படியாவது. என்னை உருட்டியாவது பிளாட்பாரத்துலே தள்ளி வுட்டுடுங்க! மறந்துடாதீங்க!"ன்னான்.

'இவரும் சரி'ன்னுட்டார்! ரயில் புறப் பட்டுது. எல்லாரும் தூங்கிட்டாங்க. காலம் பற ரயில் தஞ்சாவூர் ஸ்டேஷன்லே போய் நின்னுது!

தஞ்சாவூர்லே இறங்க வேண்டியவர் இறங்கி பிளாட்பாரத்துலே நின்னார். திடீர்னு வந்து அவரு கையை பிடிச்சான்-அந்த ஆள்! அதுதான் விழுப்புரத்துலே இறங்க வேண்டியவன். தூங்கிட்டே தஞ்சாவூருக்கு வந்துட்டான். அவனுக்கு ரொம்ப கோபம்.

"என்ன சார் இது....? நான் மெட்ராஸ் லேயே படிச்சி படிச்சி சொன்னேன்! விழுப்புரம் வந்ததும் என்னை உருட்டியாவது பிளாட்பாரத்துலே தள்ளிபுடுங்கன்னு!

இப்ப நான் தஞ்சாவூருக்கு வந்துட் டேனே...

இந்த நேரம் நான் கண்டிப்பா விழுப்புரத் துலே இருந்து ஆகணும் சார்!"-இப்படி புலம்ப ஆரம்பிச்சுட்டான். அந்த தஞ்சா வூர்க்காரர் இதை சரியா கவனிக்காமே எதையோ தீவிரமா யோசிச்சிக்கிட்டே இருந்தார். அதைப் பார்த்ததும் இவனுக்கு இன்னமும் கோபம்.

"என்ன சார் நான் பாட்டுக்கு கத்திக் கிட்டே இருக்கேன். நீங்க பாட்டுக்கு எதையோ யோசிச்சிக்கிட்டே நிக்க றீங்க...."ன்னான்.

அதுக்கு அவரு சொன்னாரு....

"அதுக்கு இல்லேப்பா.... தவறுதலா தஞ்சாவூருக்கு வந்த நீயே இவ்வளவு சத்தம் போடறியே....

தவறுதலா நான் விழுப்புரத்துலே ஒருத்தனை வெளியே உருட்டி விட்டேனே! அவன் இந்நேரம் எவ்வளவு சத்தம் போட்டுக் கிட்டிருப்பான்னு யோசிச்சுப் பார்த்துக்கிட்டி ருக்கேன்"னாராம்

"இன்னொருத்தரை நம்பினா இப்படித் தான் சார்."

சரி...

'நம்பிக்கை'யைப் பத்தி நான் சொல்ல வர்றது என்னன்னா....

தென்கச்சி - கோ. சுவாமிநாதன்

இந்த உலகத்திலே நம்மை மீறின செயல்களும் உண்டு...

நம்மால் முடியக்கூடிய செயல்களும் உண்டு.....

இது இரண்டையும் சரியா பயன் படுத்திக்கிட்டு சாமர்த்தியமா வாழ வேண்டியது நம்மோட கடமை.

**(வார்த்தைகள் தொடரும்)**

# தாய் மனசு

அலுவலகம் விட்டு வந்த களைப்பினால் அந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்ட என் நினைவில் அண்ணாதான் வந்து நின்றார். பாவம் அவர். என் அண்ணாவை நினைக்க கவலையாக இருக்கிறது. இன்றும் அலுவலகம் விட்டு வரும் வழியில் என்னைச் சந்தித்த அண்ணா, "தம்பி நான் சொன்னதெல்லாம் அம்மாகிட்ட சொன்னீங்களா? அம்மா என்ன சொல்லுறாங்க...? எனக்கு அம்மாவைப் பார்த்து காலைப்பிடிச்சி அழணும் போல இருக்கு தம்பி. அம்மாவோட பேசி மூணு வருஷமாபோச்சி. நான் செஞ்சது தவறுதான். அதுக்காக அம்மாகிட்ட மன்னிப்பு கேக்கணும். இதையெல்லாம் சொன்னீங்களா தம்பி?" அழக்குறையாக கேட்டார் அண்ணா.

"ஓம் அண்ணா, அம்மாக்கிட்ட நீங்க சொன்னதையெல்லாம் சொல்லிட்டன். ஆனால் அம்மா எனக்கும் ஏசிப்போட்டாங்க. அம்மாவ நீங்க பார்க்க வரவேண்டாமாம். அப்படி நீங்க வந்தால் அம்மா எங்கேயாவது போயிடுவாங்களாம். எண்டு பயமுறுத்தினாங்க அண்ணா அதனால!"

நான் வார்த்தைகளை நிறைவு செய்ய முடியாமல் தவிக்க,

"தம்பி நீ சொல்லுறது விளங்குது. நான் அங்க வரயில்லை... நீ அம்மாவ கவனமா பார்த்துக்கொள்ளு. என்னப்போல நீயும் தவறு செஞ்சிடாத. நான் போயிற்றுவாறன்!" என விழிகளை கசக்கியபடி புறப்பட்ட அண்ணாவை நிறுத்தி, "கவலைப்படாதீங்க அண்ணா, எப்படியாவது உங்கட ஆசய நான் நிச்சயமா நிறைவேத்தி வைப்பன்... நான் கேட்ட அந்த ஃபோட்டோவ தாங்க!" என அதை கேட்டு வாங்கி விட்டு அண்ணாவை அனுப்பிவைத்தேன்.

அண்ணா செய்த தவறு அம்மாவை ரொம்பவும் பாதித்தது உண்மைதான். ஏன் எனக்கும் கூட அண்ணா மேல கோபம்தான். என்ன செய்வது உடன் பிறப்பல்லவா? அண்ணா காதலித்துத் திருமணம் செய்து கொண்டதுதான் அவர் செய்த தவறு. அண்ணாவின் காதல் விடயத்தில் அம்மாவுக்கு விருப்பமில்லை. அம்மா எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் வீட்டை விட்டுப் போனவர்தான் அண்ணா. அண்ணாவுக்கு அம்மா பெண்பார்க்க அவர் தனக்கு விரும்பியவளை அம்மாவின் சம்மதமின்றி, திருமணம் செய்தது தவறுதானே? அம்மாவின் ஆசையில் தப்பில்லை தானே? தன் மூத்தமகன் அவருக்கு தன் விருப்பப்படி பெண்பார்த்து சம்பிரதாயப்படி சடங்குகளோடு கல்யாணத்தை நடாத்திப்பார்க்க ஆசைப்பட்டது நியாயம்தானே? பத்துமாதம் சுமந்து பெற்று வளர்த்து ஆளாக்கிய அம்மாவின் அந்த ஆசையை நிறைவேற்றிவைக்க வேண்டியது மகனின் கடமைதானே...?

"தம்பி வேல முடிஞ்சி வந்திட்டியே?" என்றபடி அம்மா உள்ளே வரவும், நினைவுகள் அறுந்து எழுந்த நான் என் டயறியுள் இருந்த அந்த படத்தை எடுத்து அம்மாவிடம் நீட்டியபடி,

"இங்க பாருங்கம்மா, உங்கட பேத்திய எப்படி அழகாயிருக்கிறாள் பாருங்கம்மா!" என்றபடி அண்ணாவின் மகள் தேனுவின் படத்தை நீட்டிய என்னை கோபமாய் பார்த்த அம்மா,

"எனக்கு மகனுமில்லை பேத்தியுமில்லை... எந்த ஃபோட்டோவையும் நான் பார்க்கவும் மாட்டன்!" அம்மா சத்தம்போட, நான் மௌனமாகி அந்தப் ஃபோட்டோவை டயறினுள் வைத்து என் மேசைமீது வைத்துவிட்டு முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்கு போனேன். தண்ணியை அள்ளிய நான் துவாயை எடுக்க மறந்ததால், மீண்டும் வீட்டுக்குள் நுழைந்த போது மேசையிலிருந்த என்னுடைய டயறியை புரட்டிய அம்மாவை கண்டு அப்படியே நின்றுவிட்டேன். டயறினுள் இருந்து தன் பேத்தியின் படத்தை எடுத்த அம்மா ஆசைதீரப்பார்த்துவிட்டு வாஞ்சையோடு படத்தை முத்தமிட்டார். அதைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு உள்ளம் குதூகலித்தது. தாய் மனசைப் புரிந்து கொண்ட என் திட்டம் பலித்துவிட்டதாக சந்தோசப்பட்டுக்கொண்ட நான் 'நாளை வேலை விட்டு வரும்போது தேனுவையும் வீட்டுக்கு தூக்கிக் கொண்டு வரலாம்,' என்ற நம்பிக்கையோடு துவாயை எடுத்துக் கொண்டு மீண்டும் கிணற்றடிக்கு போகிறேன் நான்.



ஆரையம்பதி
பூ.இதயரெத்தினம்

# அண்ணா



க.ராகுலன்-வெள்ளவத்தை

கடற்கரையோரமாக சந்துரு உட்கார்ந்திருந்தான். கண்கள் அலைகளையே வெறித்துக் கொண்டிருந்தன. அந்த அலைகளைப்போல தான் அவன் மனமும் அமைதியிழந்திருந்தது. 'அண்ணாவை இன்னும் காணவில்லை' அதிகாலையில் மீன் பிடிக்கப்போனவன். வழமையாக ஏழு ஏழரை மணிக்கெல்லாம் திரும்பிவிடுவான். ஆனால் இன்று திரும்பவில்லை. மனம் விபரீத சிந்தனைகளை வளர்த்து 'ச்சீ, அப்படியெல்லாம் நடக்காது!' என்று சமாதானமாகி மீண்டும் விபரீத எண்ணங்களுக்குத்தாவி வட்டமடித்துக் கொண்டிருந்தது.

சந்துரு இன்றிலிருந்து சில வருடங்களுக்கு முன்பு சென்று பார்க்கிறான். அப்பா அமரத்துவம் அடைந்ததைத் தொடர்ந்து படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு தூண்டிலைத் தோளில் போட்டவன்தான் அண்ணா; இன்றுவரை குடும்பப் பொறுப்பு அவன் தோள்களில்தான்.

"அண்ணா, எனக்கும் வேலை கிடைச்சாச்சு, நீ உந்தத் தொழில விட்டுடு!" சந்துரு எத்தனையோதடவை இப்படிக்கூறியதுண்டு; அப்போதெல்லாம் அண்ணா மௌனிப்பான். "அண்ணா, அப்பாவ இந்தப் பாழாய்போன கடல்தானே முழுங்கிச்சு, அதுதான் உன்னை நினைக்கேக்க பயமாயிருக்கண்ணா!" என்று சந்துரு ஒருதடவை சொன்னபொழுது, அண்ணா வெடித்தான்.

"என்னடா சொல்றாய், அப்பா போனதிலயிருந்து எங்களுக்கு எல்லாமே இந்தக் கடல்தாய்தான்ரா, நீ பாக்கிறே உத்தியோகம் அதிலவிருந்து நாங்கள் சாப்பிடற சாப்பாடு வரைக்கும் அவ போட்ட பிச்சைதான்ரா!" அதன்பிறகு சந்துரு இந்தவிடயத்தைப்பற்றிக் கதைப்பதில்லை. அம்மாகூட மௌனமாக உள்ளுக்குள் கண்ணீர் வடிப்பாள்.

'நாங்கள் சொல்லேக்கையே இந்தத் தொழில விட்டிருந்தா, இந்தக்காத்திருப்புகளெல்லாம் இல்லையே'-நினைக்கும்போது அண்ணாமீது கோபம்தான் வந்தது சந்துருவிற்கு. சாரத்தில் ஒட்டியிருந்த மணலைத் தட்டி விட்டபடி எழுந்தான். தொலைவில் கந்தப்புவும் அவர் மச்சானும் தனிப்படகில் வந்துகொண்டிருந்தனர். 'அண்ணாவும் இவர்களோடெல்லோ போறவன்!' என்று மூளையில் பொறிதட்ட நெஞ்சு அடைத்துக் கொண்டது. படகிலிருந்து குதித்த கந்தப்பு,

"தம்பி, ஏன் மலைச்சுப்போய் நிக்கிறா, இத கொஞ்சம் சேர்ந்து தள்ளன்!" என்று படகின்முனையைப்பிடித்துக் கொண்டார். சேர்ந்து தள்ளிக்கொண்டு சந்துரு கேட்டான்.

"ஐயா அண்ணாவும் உங்களோடெல்லே வாறவன்".

"வழமையா அப்படித்தான், ஆனா இந்த முறை தனிப்படகில போனவன் தம்பி," என்றான் கந்தப்புவின் மச்சான். சந்துருவிற்கு தூக்கிவாரிப்போட்டது. அவ்விடத்திலிருந்து நகர்ந்தான்.

"இப்பெல்லாம் ஓட்டல் மீனுக்குத்தான் கிராக்கி, இண்டைக்கு செமலாபந்தான்!" கந்தப்பு சொன்னது அவன் காதுகளில் விழவில்லை; மனம் கனத்தது. தனிப்படகில் போன அசட்டுத்துணிச்சலை நினைக்கும் போது அண்ணனில் இருந்த கோபம் இன்னும் அதிகரித்தது. சந்துரு, அலைகள் சாரத்தை நனைப்பதைக் கூட உணராமல், நேற்றிரவு நடந்ததை நினைத்துக் கொண்டு நடந்தான்.

இரவு ஒன்பதரையிருக்கும். அண்ணா வானொலி கேட்டுக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சுறாவறுவலென்றால் அவனுக்குப்பிடிக்கும். அதில் கொஞ்சம் கோப்பையில் போட்டுவிட்டு வானொலியின் சத்தத்தை சற்றே அதிகரித்தான் சந்துரு; அதில் மீனவர்களுக்கான எச்சரிக்கை அறிக்கையொன்று வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. "அண்ணா, அப்ப இண்டைக்கு போறேல்லைத்தானே?"

"போடா தம்பி, இவங்கள் ஆயிரத் தெட்டுக்கதை சொல்லுவாங்கள். உதுகளை கேட்டா வருஷத்தில முந்நூற்றறுபத்தைஞ்சு நாளும் கடல்ல இறங்கேலாது!" அண்ணா இப்படிச் சொன்னபோதே அவனைத் தடுத்திருக்கவேண்டும் 'தடுத்திருந்தா இந்த நிலை வந்திருக்காது' என்று ஒருகணம் நினைத்தான். 'எல்லாமே என்னால தான்!' என்ற குற்ற உணர்வு அவனைக் கவ்விக்கொண்டது.

சூரியகீற்றுகள் நெற்றியில் அடித்தன. அப்பொழுதுதான் நேரம் நடுப்பகலை அடைந்து விட்டதாக உணர்ந்தான். சந்துரு வீட்டை நோக்கி நடக்கலானான். ஆயிரம் குழப்பங்கள், மனம் உளைந்திருந்தது. கட்டபொம்மன் மீசையும் ஆங்காங்கே கிளியல்களுடன் கூடிய பெனியனுமாய் அண்ணனின் தோற்றம்வேறு கண்முன் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அவன் தென்னைமரத்தை அண்டியிருந்த குடிசையில் நுழைந்தபோது எங்கும் நிசப்தம்; ஒரு மூலையிலிருந்து அம்மாவின் முனகல் மட்டும் கேட்டது.

"அம்மா!" சந்துரு ஓடிப்போய் அவள் முகம் பார்த்தான். "பிள்ளை, வந்திட்டியே... இதொண்டுமில்லை. கொஞ்சம் காய்ச்சல் காயுது!" ஒடித்து ஒடித்து அவள் பேசியது நெஞ்சை உருக்கியது.

'உன்னட்டைபோய் எப்படிம்மா அண்ணா வரலைன்னு சொல்லுவன்!' தவித்தான். அம்மா, "கொல்லைக்கு கொத்தமல்லி அவிக்கப் போன அண்ணாவை வரச் சொல்லு!"

"என்னம்மா, அண்ணா வந்திட்டானா?" சந்துரு எழுந்து கொல்லைப்புறம் ஓடினான் அண்ணாவின் முகம் பார்க்க!

# தொடரும்...!



மு.கலைல

ஜெர்மனியின் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானம் தனது பயணத்தை ஓய்வுக்குக் கொண்டுவந்தது. வருடம் ஒன்றிற்கு மேலாக நீண்ட வைதேகியின் பயணமும் ஓய்வுக்கு வந்துவிட்டதை உணர்ந்தவளுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டது.

சில நிமிட நேரங்களில் தனது காதலனை சந்தித்து விடப்போகின்ற மகிழ்ச்சியும் அவளுக்கு ஏற்பட, விமானத்திலிருந்து இறங்கினாள் வைதேகி.

சுங்க அதிகாரிகளது பரிசோதனைகளைப் பூர்த்தி செய்து கொண்டு, நிம்மதிப் பெருமூச்சுடன் விமான நிலையத்திற்கு வெளியே வந்த வைதேகி, விமானத்தில் வந்தவர்களை வரவேற்க நின்ற கூட்டத்தினுள் கண்களை அலைய விட்டாள். காதலன் ராஜா அவள் கண்ணுக்குள் சிக்கவில்லை தேடினாள்.

இலங்கையிலிருந்து ஜேர்மனிக்கு வரப் புறப்பட்ட வைதேகி பல இடங்களில் தரித்து நின்று, வருடம் ஒன்றிற்கு மேல் கரைத்து விட்டுத்தான் இன்று வந்து சேர்ந்தாள். இறுதியாகத் தரித்து நின்ற இடத்திலிருந்து ராஜாவுக்கும் வைதேகிக்கும் இடையில் தொலைபேசித்தொடர்புகள் இருக்கவில்லை.

விமானநிலையத்திற்கு ராஜா வந்து வைதேகியை அழைத்துச் செல்வான் என முகவர் கூறியிருந்தார். பெரியளவிலான கூட்டம் அங்கில்லாததனால் ராஜா அங்கு இல்லை என்பது வைதேகியால் புரிந்து கொள்ள நேரம் அதிகம் எடுக்கவில்லை.

தொலைதூரத்திலிருந்து வந்து வித்தியாசமான புதிய முகங்களின் மத்தியில் நின்றவளுக்கு அழுகை வந்தது. கண்கள் கலங்க ஆரம்பித்த போது, "எக்ஸ்கியூஸ் மீ!" என்ற குரல் வைதேகியின் கவனத்தை ஈர்த்தது.

அவள் முன்தோன்றிய முகத்தை ராஜா அனுப்பிய புகைப்படம் ஒன்றில் பார்த்த ஞாபகம். உடனே வைதேகிக்கு ராஜாவின் நண்பன் கரன் என்பதை ஊகிக்கக் கூடியதாக இருந்தது.

"நான் ராஜாவின் நண்பன் கரன். உங்களோடை ரெலிஃபோனிலை கூட கதைத்திருக்கிறேன்!" என தன்னை அறிமுகப் படுத்திக் கொண்ட கரன், "ராஜாவுக்கு வர முடியவில்லை. அதுதான் நான் வந்திருக்கிறேன்!" என்றான்.

தொலைபேசி மூலம் கரனுடன் உரையாடிய பழக்கம் இருந்தபடியால், கரனைச் சந்தித்ததே வைதேகிக்கு நிம்மதியைக் கொடுத்தது.

"இத்தனை வருடங்களுக்குப் பிறகு சந்திக்கப்போற என்னை அவர் வந்து கூட்டிச் செல்லமுடியாத அளவுக்கு அவருக்கு என்ன வேலை கரன்?" என அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை வெளிப்படுத்தினாள்.

"ராஜா லீவு எடுக்க முடியாமல் போனபடியால் தான் என்னை அனுப்பினவன். போகப் போக இந்த நாட்டு சட்டதிட்டங்களை நீங்க புரிஞ்சுகொள்ளுவீங்க தானே வைதேகி!" என்ற கரன் அவளை அழைத்துக் கொண்டு கார் ஒன்றில் ஏறினான்.

அது ஜெர்மனியின் வீதிகளில் ஊர்ந்து கொண்டிருந்தது.

இலங்கையின் திருகோணமலையில் உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த போதே ராஜாவுக்கும் வைதேகிக்கும் காதல் துளிர்விடத் தொடங்கியிருந்தது. காதலை வார்த்தைகளால் வெளிப்படுத்தாதபோதிலும், இருவராலும் ஒருவரை ஒருவர் காதலிப்பதை உணர்ந்து கொள்ள முடிந்திருந்தது. உயர்தர வகுப்பிற்கான 'பிரியாவிடை' இடம் பெற்ற நாளிலேயே அவர்கள் தமது காதலை வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தியிருந்தனர்.

காதல் மலர்ந்து ஆறுமாதங்களே பூர்த்தியான நிலையில், ராஜா ஜெர்மனிக்கு வந்து விட்டான். கடிதங்கள், தொலைபேசி மூலமாக அவர்களது காதல் வளர்ந்து கொண்டிருந்தது.

கடும் உழைப்பை ஜெர்மனியில் கொடுத்துச் சம்பாதித்ததிலிருந்து இங்கு வருவதற்குப்பட்ட கடனை தீர்த்து விட்டு, தனது சகோதரிகளில் இருவருக்கு ஊரிலேயே உத்தியோகத்தில் இருப்பவர்களைத்தேடித் திருமணம் செய்து கொடுத்திருந்தான். இளைய சகோதரி மட்டும் படித்துக் கொண்டிருந்தாள். இனி உழைக்க வேண்டியது அவளது திருமணத்திற்குத்தான் என எண்ணி ராஜா உழைத்துக் கொண்டிருந்தான்.

ராஜாவின் வயதும் கல்யாண வயதைத் தாண்டி நின்றதனால் அவனைத் திருமண பந்தத்தினுள் சேர்த்துவிட பெற்றோர் தங்களிடம் வந்த சம்பந்தம் ஒன்றை ராஜாவிடம் தெரிவித்து சம்மதம் கேட்ட போது தான், வைதேகி மீது ராஜா கொண்ட காதல் அவனது பெற்றோருக்குத் தெரிய வந்தது.

வீட்டிற்காக உழைத்துக் களைத்தவனின் உள்ளம் விரும்பிய வைதேகியையே மருமகளாக்க பெற்றோரும் சம்மதம் தெரிவித்தனர். வைதேகியை ஜெர்மனிக்கு அனுப்ப முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

வைதேகி வசதிபடைத்த குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல. அதனால் அவளை ஜெர்மனிக்கு அழைப்பதற்குத் தேவையான இலட்சங்களை கடனாகப் பெற்றிருந்தான். உழைத்தவற்றை வீட்டிற்கே அனுப்பி வைத்ததனால் அவன் கையில் சேமிப்பு இருக்கவில்லை.

வைதேகியை அழைப்பதற்கும் பட்ட கடனை அடைப்பதற்கும், இளைய சகோதரியின் திருமணத்திற்கும், அவர்கள் இல்லற வாழ்க்கை சிறக்கவும் அவன் இன்னும் நீண்ட நாட்கள் ஜெர்மனியில் உழைக்க வேண்டும். உழைப்பதற்குரிய வாய்ப்புக்கள் அங்கு இருப்பதனால் கடன் பெற்று வைதேகியை அழைத்தான்.

வைதேகி இலங்கையிலிருந்து புறப்பட்ட ஒரு வருடங்களின் பின்னரே இன்று ஜெர்மனி வந்து சேர்ந்திருந்தாள். இந்தக்காலங்களில் பட்ட அசௌகரியங்களும் மன உளைச்சல்களும் அவளை வெகுவாகவே பாதித்திருந்தன.

வெளிநாடுகளுக்குத் திருமணத்திற்காக செல்லும் பெண்கள் இடைவழியில் படும் கஷ்டங்களை வைதேகி முன்பே அறிந்திருந்தாலும். காதல் வெற்றி பெறவேண்டுமென்றால் தான் ஜெர்மனி செல்லவேண்டியது கட்டாயம் என்பதை வைதேகி உணர்ந்திருந்தபடியால் தான், 'ஆழமறிந்தும் காலை விட்டாள்.'

அவள் காதல் கல்யாணத்தில் முடியப் போவதனால் உறுதியான சந்தோஷத்துடன் பயணத்தை நிறுத்திக் கொண்ட காரிலிருந்து இறங்கினாள்.

கரன், வைதேகியை அழைத்துக் கொண்டு வீடொன்றின் அழைப்பு மணியை ஒலிக்கச் செய்தான்.

அவர்கள் முன்னால் நெற்றி நிறைய குங்குமம் தரித்த பெண் தோன்றி! "வாங்க... வாங்க.." என உபசரித்தாள்.

'யார்?' என்ற அர்த்தத்துடன் வைதேகி, கரனைப் பார்த்தாள்.

"இது என்னுடைய மனைவி. போன மாசம் தான் கல்யாணம் நடந்தது!" என சொன்ன கரன், வைதேகியை அழைத்துக் கொண்டு உள்ளே இருக்க வைத்தான்.

கதிரையில் அமர்ந்த வைதேகியின் கண்களை அவளால் நம்பமுடியவில்லை. ராஜா பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டான்.

'வேலைக்குப் போய்விட்டான்' என கரன் சொல்லியிருந்தான். ஆனால் ராஜா வீட்டிலேயே இருந்தான். இது வைதேகியை யோசிக்க வைத்தது.

"என்ன சுகமில்லையா?" என அவளருகில் வந்தமர்ந்த ராஜாவிடம் வைதேகி கேட்டாள். "இல்லை ஏன் கேட்கிறீங்க?" என ராஜா கேட்டான்.

"வேலைக்கு லீவு போட முடியாத காரணத்தால் தான் என்னை கூட்டிப்போக தான் வந்ததாக கரன் சொன்னதே!" என்றவாறு கரனைப்பார்த்தாள் வைதேகி.

எவருமே பதில் பேசவில்லை. அமைதி குடியேறியது.

வைதேகிக்குக்காரணம் புரியாமல் குழப்பமேற்பட்டது.

"என்ன ராஜா? பேசாமல் இருக்கிறீங்க?"

"ஒன்றுமில்லை வைதேகி! நீங்க முதல்லை குளிச்சிட்டு சாப்பிடுங்க. பிறகு ஆறுதலாக இருந்து கதைப்போம்" என்றான் ராஜா.

"இல்லை ராஜா. நீங்க என்னை அழைக்க வராததற்குக் காரணமிருக்கு. முதல்லை அதைச் சொல்லுங்க. அப்புறமா நான் குளிச்சிட்டு சாப்பிடுறேனே." என்று வைதேகியும் பிடிவாதமாக இருந்தாள்.

"என்ன வைதேகி வந்ததும் வராததுமாக உங்க பிடிவாத குணத்தைக் காட்டுறீங்களே!" என்றான் ராஜா.

"பிளீஸ் ராஜா என்னைப் புரிந்துகொள்ளுங்க. எனக்கு அதை அறியும்வரை மனசு ஒருநிலைப்படாது. ஏதோ இருக்கு. இல்லாவிட்டால் நீங்க என்னை அழைக்க வந்திருப்பீங்க சொல்லுங்க ராஜா!" என்று தனது பிடிவாதத்தில் உறுதியாகவே நின்றாள்.

ராஜாவுக்கு இதற்குமேல் முடியவில்லை. சொன்னான்.

"ஜெர்மன் நீதிமன்றம் எனக்கு அகதி அந்தஸ்து தர மறுத்து, உடனடியாக ஜேர்மனியை விட்டே வெளியேறச் செல்லிட்டுது. நான் இப்போ மறைஞ்சிருக்கிறன். பொலிஸ் என்னைப் பிடிச்சா உடனடியா சிறிலங்காவுக்கு அனுப்பிவிடும்!"

யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? வைதேகி ஆறுதல் கூற வார்த்தைகள் தேடினாள். ஆனால் கிடைக்கவில்லை. அவள் பயணம் ஓய்வுக்குவரவில்லை. தொடரும்...

# சோழன் கறந்த வரி?

## இலக்கிய நயம்

"கௌசல்யா" வாசலில் நின்று கூப்பிட்டாள் ஆர்த்தி.

வெளியே எட்டிப் பார்த்த கௌசல்யா குடத்தையும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

இருவரும் ஆற்றங்கரை நோக்கி நடந்தனர்.

"ஏனடி இவ்வளவு தாமதம்?"

"வருகிற பௌர்ணமியன்று அல்லங்காடிக்கு விஜயம் செய்யவிருக்கிறாரல்லவா மன்னர். அவருக்குப் புது ஆடைகள் சிலதை நெய்ய வேண்டியிருந்தது. அப்பா தாமதப்படுத்தி விட்டார்..."

"ம்.. அவருக்குப் புத்தாடை இல்லாததுதான் குறை. நீங்களெல்லாம் அணிவித்து அழகு பாருங்கள்...."

"என்னடி கௌசல்யா, மன்னரை இப்படி நகையாடாதே. யாராவது கேட்டுவிடப் போகிறார்கள்..."

"என்னடி செய்துவிடுவார் உங்கள் மன்னர்?"

"அவர் ஒன்றும் செய்யமாட்டார். ஆனால் மன்னரைக் குறை சொன்னால் ஊரார் உன்னை விடமாட்டார்கள். மக்களின் மகத்தான தலைவர் அவர்."

"என்ன மகத்துவத்தைக் கண்டார்கள் இவர்கள். மகிழ்ச்சியான அந்தப்புரம், ஏவல் செய்யப் பணியாட்கள், திறை செலுத்தச் சிற்றரசர்கள்... மன்னனுக்கு என்ன குறை? நமக்கல்லவோ பாடெல்லாம்..."

"அப்படிச் சொல்லாதே கௌசல்யா. நல்ல ஆட்சியாளனுக்கு, சிம்மாசனம் ஒன்றும் மகிழ்ச்சியான இருக்கை அல்ல. 'கம்ப மதயானை கழுத்தகத்தின் மீதமர்ந்து இன்பமும் செல்வமும் இன்னரசும் யான் வேண்டேன்' என்று கதறுவதுதான் மன்னர்கள் நிலை. யானையின் கழுத்தில் அமர்ந்து பவனி வருகிறவனைக் கீழிருந்து பார்க்கும் நமக்குத்தான் மலைப்பு. ஆனால் மேலே அமர்ந்திருப்பவனுக்குத்தான் அதிலுள்ள சிரமம் புரியும். அரசனாயிருக்கும் அனுபவமும் அதுதான்..."

"அந்த அனுபவத்தை நீதானடி ஆர்த்தி மெச்ச வேண்டும். அரசனுக்கென்ன கவலை? தான் கவலைப்படுகிறவனாக இருந்தால் தானே அவன் மற்றவர் கவலையைப் புரிந்து கொள்ள... போடி நீயும் உன் மன்னரும்...."

"நாட்டு மக்களையெல்லாம் தனது நல்லாட்சியால் புரக்கின்ற மன்னனுக்கு எத்தனை கவலைகள் தெரியுமா? மழை பொய்த்தால் கவலை- நீதி தவறியதால் தான் மழை பொய்த்ததோ என்று. மக்கள் துன்பப்பட்டால் அச்சம்-தன் ஆட்சியைக் குற்றம் சொல்வார்களோ என்று. நீதி பிறழக் கூடாதே என்று சதாசர்வ காலமும் மனதுக்குள் அச்சம்- மக்கள் தன்னை கொடுங்கோலன் என்று சொல்லி விடுவார்களோ என்று எப்போதும் அச்சம்... இப்படி நல்ல தலைவனாக இருக்க வேண்டியவன் எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டேதானிருப்பான்.

'மழைவளம் கரப்பின், வான்பேர் அச்சம்
பிழை உயிர் எய்தின், பெரும் பேர் அச்சம்
குடிபுரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்...'

அறிந்துகொள் தோழி. மன்னனாக இருப்பவன் கவலை மற்றவர் கவலைகளை விடப் பெரியதுதான்."

"போடி பைத்தியக்காரி. மன்னன் இருப்பது வருத்தமுறும் குடிகளுக்கு ஆதரவு காட்டுவதற்குத்தான். குடிமக்களை வருத்தி அவர்களிடமிருக்கும் நலன்களையெல்லாம் அபகரித்துக் கொண்டு போவதற்கல்ல..."

"இப்படியொரு பழியை எம் மன்னர் மேல் போடுகிறாயே பாதகி. நாட்டின் பொருள் வளத்தை அதிகப்படுத்தி வைத்திருப்பதற்கு மக்களிடமிருந்து வரி பெற்றுக் கொள்ளுதல் அவசியம்தானே?



ஆனாலும் நம் மன்னர் மக்கள் தொல்லையுற்றுவிடக் கூடாது என்பதில் எவ்வளவு கவனத்துடன் இருக்கிறார் தெரியுமா? இல்லாதவர்களிடமிருந்து எதுவுமே பெறக்கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறார். மலரில் வண்டு தேனைக் கொள்வது போலத்தான் குடிமக்களிடமிருந்து மென்மையாக வரி கொள்கிறான் மன்னன். அதுவும் இல்லாதவர்களின் தேவை கருதி; நாட்டைப் பலமுடன் வைத்திருக்க வேண்டிய அவசியம் கருதி... இப்படி நரம்பில்லாத நாவால் அவர்மீது அவதூறு பேசுகிறாயே..."

"நான் உண்மையைத்தான் பேசுகிறேன். அரசன் குடிமக்களை வருத்திப் பொருள் பெறுவான் என்றால், யானை புகுந்த வயல் போல நாடும் கெடும் என்பதை அறிந்தவர்தானே உங்கள் மன்னரும். அப்படியிருக்க அவர் குடிமக்களின் நலம் கெடுமாறு கொடுமைப்படுத்தி வரி வாங்குதல் எந்த அறத்தில் சேர்த்தி?"

"என்னடி சொல்கிறாய்? நம் மன்னர் அப்படி மக்கள் நலம் கெட வரி வசூலித்தாரா? பொய் பேசாதே, நாக்கு அழுகி விடும்."

"மரத்தை வெட்டி எரித்துக் கரியாக்குவது போல குடிமக்களை வருத்தி வரி வாங்கலாகாது என்றுதானே சான்றோர்கள் எல்லாம் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் அப்படித்தான் வரி வாங்கியிருக்கிறான் அறம் கெட்ட மன்னன், உங்கள் சோழன்..."

"பொறு கௌசல்யா, ஆதாரமின்றி குற்றத்தை மட்டும் திரும்பத் திரும்ப ஒப்புவிக்காதே... மன்னன் எங்கு தவறிழைத்தான் சொல்!"

"நம் நாட்டு நடைமுறை என்ன சொல்? குடிமக்களிடமிருந்து அவர்களது வருமானத்தில் ஆறில் ஒரு பங்கைத்தானே வரியாகப் பெற்றுக் கொள்ளவேண்டும். இதுதானே நடைமுறை ஆர்த்தி?"

"ஆமாம் அதிலென்ன தவறு... எங்கே நேர்ந்தது?"

"ஆறில் ஒரு பங்கே வாங்க வேண்டும் என்று விதி இருக்க, என்னிடம் ஆறில் ஆறு பங்கு வரி வாங்கி விட்டான் உங்கள் மன்னன்!"

"ஐயையோ! உன்னிடமா வாங்கினார். என்ன கொடுமையடி... உண்மைதான் பேசுகிறாயா நீ?"

"நான் ஒன்றும் பொய்க்காரி இல்லை. உண்மையைத்தான் சொல்கிறேன்..."

"என்ன உண்மை? அதைத்தான் விளக்கமாகச் சொல் என்று கேட்கிறேனே..."

"என்னிடம் இருப்பதென்ன? என் மனம், என் நாணம் என் அழகு... மற்றும் என்னிடம் என்னென்னவெல்லாம் இருந்ததோ அத்தனையும் கொண்டு போனார் உங்கள் சோழன். மன்னன் இறுக்கும் வரி ஆறில் ஒன்று ஆறிலொன்று என்று கிளிப்பிள்ளை போலச் சொல்லிக் கொண்டிருக்கிறாயே... என்னிடமிருந்து எல்லாவற்றையும் மொத்தமாகத்தானே அள்ளிக் கொண்டு போய்விட்டான் உங்கள் மன்னன். இது என்ன நீதி?"

**என் நெஞ்சு நாணு நலனு மிவையெல்லாம்**
**மன்னன் புனனாடன் வௌவினான்-என்னே**
**அரவக லல்குலாய ஆறிலொன் றன்றோ**
**புரவலர் கொள்ளும் பொருள்.**

-முத்தொள்ளாயிரம்.

தருவது
முழடில்யன்

# ஸ்போர்ட்ஸ்

## பாகிஸ்தான் பயிற்சியாளராக போய்கொட்

பாகிஸ்தான் இளம் கிரிக்கெட் வீரர்களுக்குப் பயிற்றுநராக இங்கிலாந்து அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் ஜெஃப் போய்கொட் நியமிக்கப்பட்டிருக்கிறார். இங்கிலாந்தைச் சேர்ந்த போய்கொட் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பாக அங்கு பலவித வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

இதற்குக் காரணம் போய்கொட்டுக்கு வழங்கப்படவிருக்கும் பெருந்தொகையான பணம் தான் என்று கருதப்படுகிறது.

பெப்ரவரி மாதம் 4ம் திகதி லாகூருக்கு வந்து சேரும் போய்கொட்டுக்கு 15 நாட்களுக்கான *சம்பளம் 30 ஆயிரம் ஸ்ரேலிங் பவுன்ஸ். ( நம்நாட்டு மதிப்பில் சுமார் 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா)

இப் பெருந்தொகையை சம்பளமாகப் பெற்று பாகிஸ்தான் வரும் போய்கொட் அந்தப் 15 நாட்களுக்கிடையில் எத்தகைய பயிற்சியை வழங்கப் போகிறார் என்பது தான் கேள்விக்குறியாக இருக்கிறது.

இத்தகைய ஒரு பெருந் தொகை முதலீடு அர்த்தமற்றதொன்றாகத்தான் தோன்றுகிறது என்று முன்னாள் கப்டனும் பயிற்றுநருமான இன்டிகாப் ஹலம் தெரிவித்தார்.

இதே வேளை கிரிக்கெட்சபையின் தலைவர் தௌக்கீர் ஸியா, "கிரிக்கெட் துறையில் மிகச் சிறந்த தொழில் நுட்பவியலாளரான போய் கொட்டினால் நாட்டின் கிரிக்கெட்டில் நாட்டம் கொண்ட எதிர்கால வீரர்கள் நிச்சயம் நல்ல பயனை அடைவார்கள் என்று நான் நம்புகிறேன்" என்று கூறியுள்ளார்.

## தொடர்கள் தோல்விகள்

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை கிரிக்கெட் அணி 6 ஒருநாள் போட்டித் தொடரில் 1-5 என்ற கணக்கிலும், 3 டெஸ்ட்கள் அடங்கிய டெஸ்ட் தொடரில் 0-2 என்ற கணக்கிலும் தோல்வியடைந்துள்ளது.

டேர்பனில் நடந்த முதல் டெஸ்டில் தோல்வியை நோக்கிப் போய்கொண்டிருந்த இலங்கை அணியை மழை வந்து காப்பாற்றியதால் அப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கேப் டவுணில் நடந்த இரண்டாவது டெஸ்டில் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 229 ஓட்டங்களால் வெற்றியீட்டியது தென்னாபிரிக்கா. மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றது. ஒரு இன்னிங்ஸ் மற்றும் 7 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இன்னிங்ஸில் 378 ஓட்டங்களைச் சேர்த்தது. முன்னணி ஆட்டக்காரர்கள் சரியாகச் சோபிக்காத போதும், பின்னால் வந்த அணித்தலைவர் ஷோன் பொல்லொக் நான்குகளாகவும், ஆறுகளாகவும் பந்துகளை விளாசியடித்து தனது முதல் டெஸ்ட் சதத்தை 95 பந்துகளில் கடந்தார்.

இவருடன் ஸ்டீவ் மக்கென்ஸியும் சதம் அடித்தார். இவர் 182 பந்துகளை எதிர்க் கொண்டு 103 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் நுவான் சொய்சா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதற்குப் பதிலளித்தாடிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. களுவித்தாரன அதிகபட்ச ஓட்டங்களை (32) எடுத்தார்.

தென்னாபிரிக்கா சார்பில் மக்காயா நிடினி சிறப்பாகப் பந்து வீசி 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

தென்னாபிரிக்காவை விட 259 ஓட்டங்கள் பின்தங்கியிருந்ததால் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

சங்கக்கார மற்றும் ஆர்னோல்ட் ஆகியோர் சிறப்பான மட்டை வீச்சில் 184 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள் என்ற நிலையில் இருந்த இலங்கை, மேலும் 75 ஓட்டங்கள் எடுத்தால் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கலாம் என்றிருந்தது.

துரதிஷ்டவசமாக 68 ஓட்டங்களுக்குள் அதன் கடைசி 7 விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. சங்கக்கார 98 ஓட்டங்களும் ஆர்னோல்ட் 71 ஓட்டங்களும் எடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய நிடினி இரண்டாவது இன்னிங்ஸிலும் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். தென்னாபிரிக்கக் கப்டன் பொல்லொக் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்

## இவர்தான் அவர்



உன்னி கிருஷ்ணன்

# சிந்தியா பதில்கள்

**தென்னாபிரிக்காவில் ஆரம்பம்தான் அப்படியிப்படி இருக்கும். போகப் போக வெளுத்துக் கட்டுவார்கள் என்று என்னமோ சவடால் பேசினீரே, என்னாச்சு?**

ம.கலைச்செல்வன், கண்டி.

கடைசி ஒருநாள் போட்டி பார்த்தீர்கள்தானே! அதிபயங்கர 'ஆறு'களோடு 'பொல்'லைச் (bat) சுழற்றிக் கொண்டிருந்த 'பொல்லக்'கை கடைசிப் பந்தில் நம் மூச்சோடு சேர்ந்து நிறுத்திப் பிடித்த அந்த இறுதி நிமிடத்தில், அத்தனை தோல்வித் துயர்களும் கரைந்து காணாமல் போய்விடவில்லையா? ஆ... டெஸ்ட் எல்லாம் என்னாச்சு என்கிறீர்களா? அது அவர்கள் பிட்ச் சுவாமி! அவர்களுக்கே வாலாயம். நம்மூர் ஒரிணை மாட்டைக் கொண்டுபோய் ஒல்லாந்து வயல்களுக்குள் பூட்டி உழுது விதைக்கச் சரி வருமா? பொறுங்கள், இங்கே இங்கிலாந்துக்காரர்கள் வருகிறார்கள். ம்... வரட்டும்...ம்...ம்..!

**சிந்தியா! எது நல்ல கவிதை?**

வி.பரிமளாதேவி, யாழ்ப்பாணம்.

ஒரு கவிஞருக்குப் பாராட்டு விழா நடக்கிறது. அவரது நல்ல கவிதைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி மேடையில் பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார் விமர்சகர் ஒருவர்.

மேடையில் அமர்ந்திருக்கும் கவிஞர் திடீரெனக் கூவுகிறார்: "யாராவது மின் விசிறியை நிறுத்திவிடுங்கள். அந்தக் குருவி மீது பட்டுவிடப் போகிறது."

அவர் எழுதிய சிறந்த கவிதை இதுதான்.

**நடிகர் டி.ராஜேந்திரனுடைய ஃபோன் நம்பர் தருவீர்களா?**

சா.கௌதமி, மட்டக்களப்பு.

நீங்கள் கேட்டது நம்பர். அவரோ பொல்லாத வம்பர். எதுகையை அடுக்குவதில் கொம்பர். வர்ணனைக்கு உதவிடுவார் கம்பர். கொழுவி விட்டால் வார்த்தைகளால் தின்பர்... இதோ விலாசத்தோடு பிடியுங்கள் அவர் நம்பர்!

இல: 33, இந்திப் பிரசார சபா தெரு, சென்னை 600 017.

ஃபோன்: 4344790, 4344352

**ஆண்கள் காதலுக்காக நெருங்கும் போது, பெண்கள் காதலை மறுப்பது ஏன்?**

ஆர்.அழகராஜ், சின்ன பம்பக்கொல்ல தோட்டம்.

மறுப்பது காதலை அல்ல; அதற்குத் தகுதி இல்லாத நபரை!

**பெண் என்றால் பேயும் இரங்கும் என்கிறார்களே, பேய் பெண்ணுக்கு இரங்கும் போது யார் கண்டது?**

ஜே.லக்கி-ஜின்னா, பெரியகல்லாறு.

பஸ்ஸில், அலுவலகத்தில், பொது இடங்களில் எல்லாம் கொஞ்சம் அதிகபட்சமாகவே இரங்குகிற பலரைக் கண்டிருக்கிறேன். ஆனால் அவர்களைப் பேய் என்று சொல்வதெல்லாம் ரொம்ப ஓவர்.

**பெண்கள் சேலை அணிவதா, சுடிதார் அணிவதா, ஜீன்ஸ் அணிவதா, ஸ்கேர்ட் அணிவதா உமக்குப் பிடிக்கும்?**

ம.ரூபன், மன்னார்.

எனக்குப் பிடித்தது உங்கள் லிஸ்டில் வரவில்லை!

**சிந்தியா, உங்களுடைய சின்ன ஆசை எது?**

என்.எம்.நிஸாம், காத்தான்குடி-02.

இந்த உலகம் ஒருநாளாவது என் சொற்படி நடக்க வேண்டும். மிகச் சின்ன ஆசைதான். ஆனால் யாரும் கேட்கிறார்களில்லை.



'தீனா'
அஜித், லைலா

**★ தனியார் வானொலிகளில் சிந்தியாவுக்குப் பிடித்த அறிவிப்பாளர் யார்?**

சி.முருகவேள், கொழும்பு-13.

கம்பீரமான குரல் வளத்திற்கு அபர்ணா. (இவர் இன்னும் நிறைய வாசிப்பறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.) சரளமான பேச்சுக்கு லோஷன் (இவர் நேயர்களிடம் காட்டும் அக்கறை உளப் பூர்வமானதாக மாற வேண்டும். அறிவிப்பாளரை விட நேயர்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் எப்போதும் கவனத்திலிருக்க வேண்டும்-உண்மையானதாக.) கலகலப்பான வேகத்துக்கு சுஜீவா (தொடர் போடும் விஷயத்தோடும் பேசுவதற்கு நிறைய ஒத்திகை பார்த்துக் கொள்ள வேண்டும்.) இனிய இதமான பாடல்களுக்கு ரவூஃப் (பாடல்களோடு புதிது புதிதாய் விஷயங்களை இணைக்க முயற்சிசெய்ய வேண்டும்-தேவை நிறைய வாசிப்பு.) கலகலப்பாக நிகழ்ச்சியை நடத்துவதற்கு பரணி-காயா. (இன்னும் நிறைய முன் தயாரிப்பு வேண்டும். விஷயஞானத்தை பரணியும், குரலிலுள்ள நடிப்பு பாவங்களை காயாவும் முயன்றால் மேலும் மிக ஜொலிப்போடு பயன்படுத்திக் கொள்ளலாம்....) இந்தப் பட்டியலில் இன்னும் சிலர் உள்ளார்கள். சமயம் வரும்போது தொடர்கிறேன்!

**அஜித்தின் 'தீனா' எப்படி?**

கா.விஜயகுமாரி, அவிசாவளை.

அதே பழைய அடிதடிதான்! ஆனால் அஜித்தின் நடிப்பிலும் முகத்திலும் முதிர்ச்சி தெரிகிறது. இசைஞானியின் இசைவாரிசாக இளைய -யுவ(ன் சங்கர்) ராஜாதான் நின்று பிடிப்பார் என்று பாடல்கள் சொல்கின்றன. அதெல்லாமிருக்கட்டும் படத்தில் புதுமையும் குளுமையுமாக இருப்பது அந்த மெழுகு பொம்மையின் சிரிப்புதான். ஓ லைலா!

**வனவாழ்வு வாழ்வது எப்படி?**

தோரயாய ஏ.ஏ.எம்.பாரூக், குருநாகல்.

மான்கள் மரைகள் போல கூட்டங் கூட்டமாக ஒற்றுமையாக வாழவேண்டும். புலி, கரடி, சிங்கம் போல தனக்குரிய இரையைத் தவிர வேறு யாரையும் பாய்ந்து குதறக்கூடாது. பறவைகள் போல தாங்களும் அழுதுகொண்டிருக்காமல், பிறரையும் அழவைக்காமல் உதவி வாழ்வதில் இன்பங் காண வேண்டும். முக்கியமாக தன்னினத்தைத் தானே அடித்துத் தின்னாமல் வாழ வேண்டும்... இதெல்லாம் நமக்குச் சாத்தியப்படுமா பாரூக்? வனத்தையாவது அசிங்கப் படுத்திவிடாதிருப்போம்!

**என் கனவுகளை நனவாக்குவத்றகு நான் என்ன செய்ய வேண்டும்?**

எம்.எம்.இஸ்மாயில், புத்தளம்.

தூக்கத்திலிருந்து விழிக்க வேண்டும்.

# மன்னாதி மன்னன் 42

## தனவதி அளித்த விருந்து!

தனவதி அரசனிடம் கொடுத்த முத்துமாலை அவையிலிருந்த அனைவரின் கண்களையும் கூச வைத்தது. மன்னவனோ அல்லது அந்த அரசவையிலிருந்த மந்திரிப் பிரதானிகளோ எவருமே இந்தளவு சிறப்பான முத்துமாலையை கண்டதில்லை. இதனால் சபையிலுள்ள அனைவரும் தனவதி மீது பெரும் மரியாதை வைக்கத் தலைப்பட்டனர்.

தனவதியின் இத்தகைய செயற்பாட்டினால் குணவதி வெட்கித் தலைகுனிந்தாள். குணவதியை விட தன்னிடம்தான் ஏராளமான பணமும் சொத்தும் விலையுயர்ந்த ஆபரணங்களும் இருக்கின்றன என்று எண்ணி இறுமாப்படைந்திருந்தாள். இன்று மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு முத்துமாலையை மன்னரிடம் நன்கொடைப் பொருளாகக் கொடுத்து தனவதி எல்லோருடைய மதிப்பையும், சிறப்பையும் பெற்றுவிட்டாளே என்றெண்ணும் போதெல்லாம் பொறாமையால் துடிதுடித்தாள்.

மீண்டும் தனவதியை எப்படியாவது வென்றாக வேண்டும் என்ற நினைப்பில் பல திட்டங்களைப் போட்டாள் குணவதி.

அடுத்தநாள் காலையில் பொழுது புலர்வதற்கு முன்னர் தன்னை அலங்கரித்துக் கொண்டு நேராக அரண்மனைக்குச் சென்றாள் குணவதி. அரசனைக் கண்டு, தனதில்லத்தில் அன்றிரவு மன்னருக்கும் அவர்தம் மந்திரிப் பிரதானிகளுக்கும் விருந்தொன்று ஏற்பாடு செய்யப்போவதாகவும் அவ்விருந்தில் பங்கேற்று தன்னைச் சிறப்பிக்குமாறும் மன்னரிடம் கேட்டுக் கொண்டாள்.

அரசரும் ஒப்புதல் அளித்து விட்டார்.

குறிப்பிட்ட நேரத்திற்கு மந்திரிப் பிரதானிகள் புடைசூழ, மன்னர் குணவதியின் இல்லத் தையடைந்தார்.

அறுசுவை உண்டியுடன் குணவதி அரசனுக்கும் பரிவாரங்களுக்கும் சிறப்பாக உணவு படைத்தாள். குணவதியின் விருந்தோம்பலை மெச்சிய விருந்தில் கலந்து கொண்ட அனைவரும் பரம திருப்தியடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

தான் கொடுத்ததைப் போல் அரசருக்கும் அமைச்சர் பிரதானிகளுக்கும் விருந்துபசாரம் நடத்துவதற்கு தனவதியால் ஒருபோதும் முடியாத காரியம் என்று குணவதி இறுமாப்படைந்தாள்.

அரசருக்கும் ஏனையோருக்கும் குணவதியின் இல்லத்தில் எத்தகைய விருந்துபசாரங்கள் நடைபெறுகின்றன என்பதை அறிந்து வந்து தன்னிடம் தெரிவிக்குமாறு தனவதி ஒற்றர்களை அனுப்பியிருந்தாள். அவர்களும் விருந்தின்போது, பரிமாறப்பட்ட உணவின் தன்மைகளையும் அவற்றை உண்டு மகிழ்ந்த பலரும் தெரிவித்த பாராட்டுக் கருத்துக்களையும் சேகரித்துக் கொண்டு போய் "உண்மையிலேயே, விருந்து மிகவும் சிறப்பாக இருந்ததாக அனைவரும் பாராட்டினர்!" என்று தனவதியிடம் கூறினார்கள்.

இதைக் கேட்ட தனவதி மன்னனுக்கு, குணவதி கொடுத்த விருந்தைப் போல் தன்னால் ஒரு விருந்தினையளிக்க முடியாதென கவலையடைந்தாள்.

அன்றிரவு வயோதிபக் கிழவன் வேடத்திலிருந்த விக்கிரமாதித்தன் தனவதியிடம் வந்து "ஏன் இவ்வாறு வேதனைப்படுகிறாய்?" என்று விசாரித்தார்.

அப்போது தனவதி, தன்னை இழிவுபடுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் குணவதி தனக்கு விரோதமாக நடத்தும் நாடகங்களை விரிவாக எடுத்துக் கூறினாள்.

இதனைக் கேட்ட விக்கிரமாதித்தன் "பூ... இதற்குத்தானா இவ்வாறு கலங்குகிறாய்? பேசாமல் போய் கவலையெதுவும் இல்லாமல் படுத்துறங்கு. எல்லாவற்றையும் காலையில் பார்த்துக் கொள்ளலாம்!" என்று ஆறுதல் கூறிவிட்டு, தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் சென்று நிம்மதியாகப் படுத்துக் கொண்டார்.

தனவதியும் தோழியர்களும் நன்றாகத் தூங்கிய பின்னர் விக்கிரமாதித்தன் எழுந்திருந்து, வீட்டின் வெளிப்புறமாக வந்து வேதாளத்தை அழைத் தார்.

அந்தப் பிரதேசத்தில் எவருமே கண்டும் கேட்டும் இல்லாதளவு மாபெரும் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு வேதாளத்துக்கு கட்டளையிட்டார்.

வேதாளமும் அன்றிரவு முழுவதும் அந்த வீட்டின் முன்புறம் பெரும் பந்தலைப் போட்டு, வகை வகையான சோடணையும் கட்டியது. பெரும் பெரும் பாத்திரங்களைக் கொண்டு வந்து அறுசுவை உணவுகளை மிக வேகமாகத் தயாரித்து முடித்தது.

அதிகாலையில் கண்விழித்த தனவதியின் மூக்கினில் விசித்திரமான வாசனைகள் வந்து முட்டின.

தோழிகளையும் அழைத்துக்கொண்டு வெளியே வந்து பார்த்தவள், அடக்க முடியாத வியப்புடனும் ஆனந்தக் களிப்புடனும் மகிழ்ச்சியடைந்தாள்.


'இந்த வேலைகள் அனைத்தையும் தன்னிடம் வந்து ஒண்டியிருக்கும் ஆண்டிதான் செய்திருக்க வேண்டும்' என்று அந்த ஆண்டியைத் தேடினாள். அவர் சற்றுத் தொலைவிலிருந்த ஆலமரம் ஒன்றின் கீழ் தனது காவித் துணியை விரித்து அதில் படுத்துறங்கிக் கொண்டிருந்தார்.

'இத்தகைய சித்து விளையாட்டுக்களையெல்லாம் செய்யும் இந்த வயோதிப ஆண்டி சாதாரண மனிதராக இருக்க முடியாது, என் றெண்ணியவாறு அவருடைய தூக்கத்தைக் கலைக்காமல் எட்டத்தில் நின்றவாறு நன்றி கலந்த வணக்கத்தைக் கூறிவிட்டு தனதில்லத்தினுள் சென்றாள்.

தனவதி காலைக் கடன்களை எல்லாம் முடித்துவிட்டு அலங்காரம் செய்து கொண்டிருக்கும்போது, ஆண்டிக் கிழவர் அவளருகில் வந்தார். தனது இருக்கையை விட்டு எழுந்த தனவதி மரியாதையுடன் கைகூப்பி, "ஐயா, இதென்ன வேடிக்கை. இத்தனை உணவு பண்டங்களையும் மிக நேர்த்தியாக ஓரிரவுக்குள் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறீர்கள். அப்பதார்த்தங்களிலிருந்து வீசும் வாசனையே, அத்தனை பண்டங்களும் மிக ருசியானவையாகவே இருக்கும் என்பதை புலப்படுத்துகின்றன. எதற்காக, யாருக்காக இத்தனை ஏற்பாடுகளையும் செய்திருக்கிறீர்கள் என்பதை நான் அறியலாமா?" என்று தனவதி கேட்டாள்.

ஆண்டிக் கிழவர் "தனவதியே உன்னை வென்றுவிட வேண்டுமென்ற ஒரே நோக்கில் உன்னோடு எல்லாத் துறையிலும் போட்டி போடுகின்ற குணவதியால் நீ படும் அவஸ்தையை வெறுமனே பார்த்துக் கொண்டு என்னால் இருக்க முடியாது. ஆகவேதான் இந்த ஏற்பாடுகளை நான் செய்து வைத்திருக்கிறேன். நீ தயங்காமல் சென்று அரசர் அரண்மனையிலுள்ள அமைச்சர்கள் மற்றும் பிரதானிகள் ஆகியோர் அனைவரையும் இன்றிரவு விருந்துக்கு வருமாறு நீ அழைத்து வா. ஏனைய ஒழுங்குகளை நான் செய்து வைக்கிறேன்!" என்று கூறினார்.

ஆண்டிக் கிழவர் வேடத்திலிருந்த விக்கிரமாதித்தன் இவ்வாறு கூறியதும் தனவதி பூரித்துப் போனாள். உடனடியாகவே அரண்மனைக்குப் புறப்பட்டுச் சென்றாள்.



"குணவதியின் வீட்டுக்குச் சென்று விருந்துண்டது போல், இன்றிவு நான் அளிக்கப் போகும் விருந்துக்கு வந்து எனக்கு மதிப்பளிக்க வேண்டுகிறேன்!" என்று கேட்டுக் கொண்டாள்.

மன்னர் சம்மதித்ததுடன், தன்னுடைய மந்திரிப் பிரதானிகளையும் ஏனையோரையும் அழைத்துக்கொண்டு தனவதியின் வீட்டுக்குச் சென்றார்.

தனவதியின் வீட்டில் செய்யப்பட்டிருந்த ஆயத்தங்களைப் பார்த்ததும் விருந்துக்குச் சென்றிருந்த அனைவரும் வியப்படைந்து வார்த்தைகளே வெளிவராமல் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

தனவதியின் வீட்டை நோக்கி அவர்கள் சென்று கொண்டிருந்த போதே, சில காத தூரம்வரை உணவுப் பண்டங்களின் வாசனை அவர்களுடைய மூக்கைத் துளைத்தது. உண்பதற்காக அவர்கள் போய் இருக்கையில் அமர்ந்ததும், நூற்றுக்கணக்கான ஏவலர்கள் உணவு பறிமாறுவதில் ஈடுபட்டிருந்தனர்.

முன்பந்தி, பின்பந்தி என்றில்லாமல் ஒரே வேளையில் பல வரிசைகளில் அமர்ந்திருந்த அனைவருக்கும் உணவு படைக்கப்பட்டிருந்தது.

உண்டதனால் ஏற்பட்ட களைப்பு நீங்குவதற்கு அனைவருக்கும் சயன ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

மன்னரும் பரிவாரங்களும் தங்கள் வாழ்நாளில் எப்போதுமே அறிந்திராத வகை வகையான உணவு வகைகளை உண்டு திருப்தியடைந்து, தனவதியின் விருந்துபசாரத்தை மெச்சி புகழ்ந்த வண்ணம் இருந்தனர்.

(மன்னன் வருவான்...)

**இராஜகுமாரன்**

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் அடுத்தடுத்த இதழ்களில்.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:.................... ஒப்பம்:..................



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

அபிமான வாசகர் போட்டியில் முதலாவது: சென்ற ஆண்டின் அதிபெரிய பொய் எது? இதற்கான பதிலை ஒரு வசனத்தில் எழுதி அனுப்புங்கள். சிறந்த பொய்யைக் கூறியவர் 'பொய்யறி மேதை'யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப் படுவார். முடிவுத் திகதி பெப்ரவரி 28. பெறுபேறு அறிவிக்கப்படும் திகதி ஏப்ரல் 1.

நல்லது, விஷத்துக்கு வருவோம். உங்களுக்காகப் பொறுக்கியெடுத்த செய்திகள் முதலில்,

சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமூலமொன்றை பிரித்தானியா அடுத்த மாதம் நிறைவேற்றுமேயானால் அதனுடன் தனது ராஜீய உறவுகளை முறித்துக் கொள்ள நேரிடுமென்று தமிழீழத்துக்காகப் புலிகளை எதிர்த்துப் போராடிவரும் தமிழர் விடுதலைக் கூத்தணியின் கொரில்லாப் படைத் தளபதி அழுக்கு சங்கரி தெரிவித்துள்ளார்.

அப்படியான எத்தகைய ராஜீய உறவும் பிரித்தானியாவுடன் தமக்கு ஏற்கெனவே இல்லாததால் தாம் முறித்துக் கொள்வதற்கு வசதியாகவாவது தம்முடன் ராஜீய உறவொன்றை ஏற்படுத்த முன்வரும்படி அவர் பிரித்தானியாவைக் கோரியுள்ளார்.

இலங்கையின் ஆளும் கட்சிக்குப் போட்டியாக நிழல் அமைச்சரவை ஒன்றை அமைத்துள்ள 'ஐமிச்சத் தேசிக்காய் கட்சி' அதன் 'கடத்தல் துறை' அமைச்சராக யு.பி. மக்கீஸ்வரனை நியமித்துள்ளது. ஏற்கெனவே கொக்கோ கோலா போத்தலுக்குள் ஒயில் கடத்துவது குறித்த ஒத்திகைகள் வெற்றியளித்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இத் துறையை வளர்க்க உதவியாக கைலஞ்சத் துறை, கள்ள ஆவணத் தயாரிப்புத்துறை போன்ற உபதுறைகளின் வளர்ச்சியும் அத்தியாவசியமானதெனத் தனது பொறுப்பேற்பு வைபவத்தில் யு.பி. தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான மீன்பிடித் தகராறைத் தீர்க்க இரு நாட்டுத் தலைவர்களும் நடத்திய உச்சிமாநாட்டில் இலங்கை மீன்கள் எக்காரணம் கொண்டும் இந்தியக் கடல் எல்லைக்குள் பிரவேசிக்கக் கூடாதென்றும், அதுபோல் இந்திய மீன்களும் இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசிக்கக் கூடாதென்றும் கூட்டுத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர்.

வீதி வாகன நெரிசல் குறித்து தீவிரமாக ஆராய்ந்த போக்குவரத்து அதிகார சபை, நெரிசல் மிக்க சந்திகளில் பம்பு செட்டுகளைப் பூட்டி அங்கு மணிக்கணக்கில் தரித்திருக்கும் வாகனங்களைக் குறைந்த கட்டணத்தில் கழுவிக் கொடுக்கும் திட்டமொன்றை சிபாரிசு செய்துள்ளது. அத்துடன் ஓட்டுநர்களைச் சாந்தப்படுத்த சிக்னல் லைட்டுகளுடன் நீண்ட நேர இசை விருந்துக்கான ஒலிபரப்பிகளையும் இணைப்பது உசிதமெனத் தெரிவித்துள்ளது.

காதில பூ கந்தசாமி தேடித் திரிந்தும் தென்படாத தமிழ்த் தாயின் தவத் தலைவர் ஸ்ரீ காந்தண்ணா திடீரென பத்தோடு பதினொன்றாகத் தமிழ்க் கட்சிகளைக் கூட்டிவைத்துக் கொண்டு தொலைக் காட்சியில் தோன்றித் தொல்லைப்படுத்திக்கொண்டிருந்தார். அப்படியே தொலைக்காட்சிப் பெட்டிக்குள் வைத்தே அவரைப் பேட்டிகண்டுவிட்டார் கா.பூ. இதோ பேட்டி:

**கா.பூ: என்ன வலு கும்மாளமாயிருக்குது உங்க?**

ஸ்ரீ: ஒண்டுமில்லை, ஒரு பத்துப் பேரை ஒண்டாக் கண்டுட்டன். பத்தும் வந்தால் பசி பறந்துபோயிடுமெண்டு ஒரு பழமொழி இருக்குதெல்லே....!

**கா.பூ: ஓகோ! அதுசரி, உந்தப் பத்துக் கட்சிகளும் கூடி என்ன செய்யப் போறியள்?**

ஸ்ரீ: கூடிப்போட்டுக் கலையப் போறம்.

**கா.பூ: கலையிறதுக்காகவே கூடினியள்?**

ஸ்ரீ: இல்லை, கூடுறதுக்காகவே கலையிறோம். அதாவது, கலைஞ்சால் தானே திரும்பக் கூட முடியும்?

**கா.பூ: இது நல்ல பொழுதுபோக்குத்தான். அதுசரி, சொல்லச் சொல்லக் கேக்காமல் உங்கட ரெல்லோ கட்சியையும் கைவிட்டுட்டு யாழ்ப்பாணத்தில சுயேச்சையா தேர்தலில நிண்டு தோத்திட்டீங்களே, தேவைதானா?**

ஸ்ரீ: யாழ்ப்பாணத்தில தோத்தாலும் வன்னியில எனக்கு சீற் பிடிச்சு வைச்சிருந்தேன். அங்க தோத்ததை இங்க பிடிக்கலாமெண்டு பாத்தால் இப்ப கொஞ்சம் வில்லங்கமாய் இருக்கு.

**கா.பூ: தேர்தல் எண்டிறது உங்களுக்கென்ன சீ.ரீ.பீ. பஸ்ஸே, அங்கங்க கைலேஞ்சியைப்போட்டு இடம்பிடிக்க?**

ஸ்ரீ: உமக்கேன் எரியுது? நீங்கள் தூண்டிவிட்டுத்தான் இப்ப மூக்கப் பிடிச்சால் வாயத் திறக்கத் தெரியாமல் இருந்தவங்களெல்லாம் சீற்றைப் பிடிச்சிட்டு விடமாட்டனெண்டுறாங்கள். இங்கிலீசு பேசுறதுக்காவது நான் பாராளுமன்றம் போக வேணுமடா தம்பிகளா, சீற்றால இறங்குங்கோடா வெண்டு பாட்டாப் பாடிக்கொண்டிருக்கிறன். கேட்டால்தானே! அண்ணை உன்ர இங்கிலீசைக் கொண்டுபோய் கோட்டில பேசு, இங்க இப்ப ரான்சிலேஷன் குடுக்கிறான், நாங்கள் சமாளிப்பம் எண்டுறாங்கள் இந்தப் படுபாவிப் பசங்கள்.

**கா.பூ: அதிருக்கட்டும், நீங்கள் அவசரகாலச் சட்டத்துக்கு எதிர்ப்புத்தானே?**

ஸ்ரீ: பின்ன?, அதுதானே எங்கட பிரசார ஆயுதமே!

**கா.பூ: அப்ப ஏன் நீங்கள் உங்களிட்டயிருந்து பறிச்ச ஆயுதங்களத் திரும்பத் தரவேணுமெண்டு அரசாங்கத்தைக் கேக்கிறியள்? அவசரகாலச் சட்டத்தாலதானே உங்களுக்கு ஆயுதமும் கிடைக்குது?**

ஸ்ரீ: எங்களுக்கு அதெல்லாம் தெரியாது. எங்களுக்கு ஆயுதம் தரவேணும், அதேநேரத்தில அவசரகாலச் சட்டத்தையும் நீக்க வேணும்.

**கா.பூ: யாருக்கு எதிரா உங்களுக்கு ஆயுதம் தேவை?**

ஸ்ரீ: பயங்கரவாதிகளுக்கு எதிராக.

**கா.பூ: யாரைப் பயங்கரவாதிகளெண்டு சொல்லுறியள்?**

ஸ்ரீ: யாரையும் சொல்லேல்ல.

**கா.பூ: நீங்கள் வன்னியில வாங்கிற வரி, கப்பம் எல்லாம் எந்த அவசர கால சட்டத்துக்குள்ள வருகுது?**

ஸ்ரீ: அது தமிழ் மக்களுக்காக நாங்கள் விதித்திருக்கிற அவசரகாலச் சட்டம்!

**கா.பூ: அப்ப ஸ்ரீயண்ண, பத்துக் கட்சி கூட்டி யுத்த நிறுத்தம் கேக்கிறியள், தச்சமயம் அப்பிடி வந்திட்டால் உங்கட இந்த அவசரகாலச் சட்டத்தை நீக்குவியளோ?**

ஸ்ரீ: யுத்த நிறுத்தம் அரசாங்கத்துக்குத்தான். எங்கட காரியங்கள நிறுத்திறதுக்கு இல்லை.

**கா.பூ: உங்கள நம்பி வாக்குப்போட்ட மக்களுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்கள்?**

(இந்த நேரத்தில், தொலைக்காட்சியில் மைக் அவரது வாயருகே வருகிறது. அவர் தன்னை மறந்து உரையாற்றத் தொடங்குகிறார்)

ஸ்ரீ: இந்த நாட்டிலே,.... இந்த யுத்தங்களுக்கும் அழிவுகளுக்கும் மத்தியிலே,..... தத்தி, தவண்டு, தத்தளித்து, தொத்தித், துவண்டு துன்பப்பட்டு, எத்தி, எகிறிக் கத்திக் கதறிக் குதறிப் பதறி, முத்தி முறுகி முனகி முக்கி, கக்கி.... ஓ! தமிழா... நீ எங்கே? நான் இங்கே...

( காதில பூ கந்தசாமி தொலைக்காட்சியை அணைத்து விடுகிறார்)

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
880230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436037

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657





## தீக்கோழிச் சவாரி

← உலகிலேயே அதிக வேகமாக ஓடக்கூடிய பறவை ஒட்டுச் சிவிங்கி எனப்படும் தீக்கோழிதான். ஒரு மனிதனை தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு ஒரே தாவில் 72 கிலோ வேகத்தில் அரை மணி நேரம் ஓடக்கூடியது இப்பறவை.

குதிரைச் சவாரிப் பந்தயம் போல் அமெரிக்காவின் கொலராடோவில் வருடா வருடம் தீக்கோழி ஓட்டப் பந்தயம் நடை பெற்று வருகிறது. ■

## விலையுயர்ந்த சவாரி

↓ மோட்டார் வாகன உற்பத்தித்துறையில் ஹென்றி ஃபோர்ட் என்பவர் தான் ஏகச்சக்கரவர்த்தியாக உலகின் மிகப் பெரிய பணக்காரராகக் கணக்கிடப்பட்டவர். ஆனால் உலகின் பல நாடுகளிலும் வாகன உற்பத்தியும் உலக நாடுகளுக்கான வீதி போக்குவரத்தும் பெருக ஆரம்பித்ததும் ஃபோர்ட் வண்டிகளுக்கிருந்த மவுசு மெல்ல மெல்லக் குறைந்து போய்விட்டது.

ஜெர்மன் நாட்டில் உற்பத்தியாகும் பென்ஸ் கார்களுக்கு கிராக்கி ஏற்படலாயிற்று. பென்ஸ் கார்கள் சிறப்பம்சங்கள் அதிகம் கூடியவை என்பதனால் விலையும் சற்று அதிகம்தான். இடைக் காலத்தில் ஜப்பான் நாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்த கார் கள் உலகச் சந்தையில் பெருக்கெடுத்தன.

இன்றுள்ள நிலையில் விற்பனையின் உச்சக்கட்டத்தை எட்டிய பிடித்திருப்பவை 'வொக்ஸ் வாகன்' கார்கள். இவை பல வகையிலும் சிறப்புப் பொருந்தியவை. விலையும் குறைவு பராமரிப்புச் செலவும் குறைவு. இதன் காரணமாக அதிகமான அளவு உலகச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இதன்பயனாக வொக்ஸ்வாகன் கார் உற்பத்தியாளரான அந்நிறுவனத்தின் தலைவர் பேர்டினண்ட் பீச். மோட்டார் உற்பத்தியாளர்களுள் பெரும் பணக் காரராகத் திகழ்கிறார். இவருடைய குடும்பத்தின் இன்றைய சொத்து மதிப்பீடு 5 பில்லியன் டொலராகும். ■

## தலைகீழ் சவாரி

↑ தலைகீழாகத் தொங்கும் வெளவால் கூட்டமோ என்று வாசகர் களுக்குச் சந்தேகம் தோன்றலாம். இவர்கள் 'மனித வெளவால்கள்' என்று கணக்கிடப் படத்தக்கவர்கள்.

பொழுது போக்குச் சாதனங்கள் நாளுக்கு நாள் வகை வகையாக அதிகரித்துக் கொண்டு வருகின்றன. மேலை நாடுகளில் 'ரோலர் கோஸ்டர்' என்ற ஒரு அதிவேக சவாரி வண்டித் தொடர் விளையாட்டு மைதானங்களில் அமைக்கப் பட்டிருக்கும். இவற்றில் ஏறி அமர்ந்து கொண்டு அதிவேகமாகச் சவாரி செய்யலாம். இந்தச் சவாரி யில் ஈடுபடுபவர்கள் நிச்சயமாக அசாதாரண சக்தி படைத்தவர்களாகத்தான் இருக்கவேண்டும். கண வேகத்தில் உச்சியைத் தாவி ஏறி அதைவிட மேலதிக மான வேகத்தில் செங்குத்தாக இறங்கி திடீரென மேலே பாய்ந்து மீண்டும் கீழே பாய்ந்து ஓடும் வண்டித் தொடர் இது.

அமெரிக்காவின் கலிபோர்னியா 'சிக்ஸ் ஃபிளாக்ஸ் மாஜிக் மவுண்டின்' என்ற பூங்காவில் உள்ள ரோலர் தொடர்களில் இவ்வாறு நூற்றுக் கணக்கான வாடிக்கை யாளர்கள் அமர்ந்து 104.6 கிலோ மீட்டர் வேகத்தில் 47.5 மீட்டர் (156 அடி)உயரம் வரை தலைகீழாகச் சுற்றிச் சுழன்று வரும் காட்சி இது. தலைகீழாக ஏறி இறங்குவது மட்டுமல்ல, பல தடவைகள் கரணமடித்தும் இவர்கள் சுழல்வார்கள்.




## 2வது பிறந்த தின வாழ்த்து

சுழிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஜெயசந்திரன்-நிஷாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் காவியன் (கஜா) தனது இரண்டாவது பிறந்த தினத்தை இங்கிலாந்து பேர்மிங்காமிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். காவியனை அப்பா, அம்மா, அன்புத் தங்கை இலக்கியா, அம்மப்பா, சித்தப்பா-சித்தி, பெரியமாமா-பெரியமாமி, சின்னமாமா-சின்னமாமி, வன்னி பெரியப்பா-பெரியம்மா, பபி அக்கா, தம்பி, சின்னபெரியப்பா, மாமா, அத்தை, வீது மச்சாள், வத்தளை அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, தின் அண்ணா, சதன் சித்தா, சீனா தாத்தா, வவுனியா ஆட்டி சித்தப்பா, அது அண்ணா, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை காவியனை பராபரன் கிருபையால் அருள்பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
திரு. திருமதி ஜெயசந்திரன்-பேர்மிங்காம், இங்கிலாந்து.



செல்வன் காவியன்
28.01.2001